# என் நெஞ்சமெல்லாம் நீதானே...



ஆர்.மகேஸ்வரி

# என் நெஞ்சமெல்லாம் நீதானே...

## 1



மணப் பெண்ணின் இயல்பான நாணத்துடன்... மருண்ட விழிகளுடன்... குங்குமமாய் சிவந்த கன்னத்துடன்... தலைகுனிந்து மாங்கல்யத்தை வாங்கிக் கொள்ளும் புது மணப் பெண்ணைப் போல் உருவெடுத்து, பின்னர் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களையும்... நஷ்டங்களையும்... பாதிப்புகளையும், தன்னம்பிக்கையுடனும்... தலைநிமிர்வுடனும் சமாளிக்கும்... தைரியப் பெண்ணைப் போல் நிதானமாய்... நிமிர்வாய்... கர்வமாய்... பளிங்காய்... மிடுக்கான தோற்றத்தோடு காட்சியளித்தான், சூரியன்!

தோட்டத்து மலர்கள் எல்லாம் மலர்ந்து... மணம் பரப்பி... இதற்கு மேல் தங்களிடம் நறுமணத்திற்கு பஞ்சம் என்று... தன்னடக்கத்துடன் தலையாட்டி சிரித்தன!

அழகான... இனிமையான காலை எட்டு மணி!

அது ஒரு அநாதை இல்லம்!

'சுபாஷ் சந்திரபோஸ் ஆதரவற்றோர்... பார்வையற்றோர் அநாதை இல்லம்.'

சுற்றிலும் மதிற்சுவர் எழுப்பி... நடுவில் கூரைகளாலும், ஓடுகளாலும் வேயப்பட்ட சிறுசிறு கட்டிடங்கள் உள்ளே இருந்தன.

அழகான பாதை! பாதையின் இருமருங்கிலும் வெள்ளையும், சிவப்புமாய் ரோஜாச் செடிகள்... மலர்களை ஈன்று... அழகுக்கு அழகு சேர்த்தன. ஆங்காங்கே தொட்டிச் செடிகளும், முல்லையும், மல்லிகையுமாய்... தோட்டமே அழகாய் இருந்தது.

இவ்வளவு செடிகளை உருவாக்கி... கண்ணும், கருத்துமாய் பராமரித்து வருபவன், ஆதித்யன்.

தோட்டத்தைப் பராமரிக்க தோட்டக்காரன் இருந்தாலும்... தான் வைத்து உருவாக்கிய செடிகளுக்கு... தானே நிறைய, வழியவழிய நீர் ஊற்றினால்தான்... அவனுக்கு திருப்தி!

இல்லையென்றால் அவனுக்கு அன்றைய பொழுது முழுமைக்கும்... எதையோ செய்யாததுபோல... குற்ற உணர்ச்சியில் மனம் வெந்து, நொந்து, துடியாய் துடித்து விடும்!

ஆதித்யன் அந்த மலர்ச் செடிகளை மனித உயிர்களான சகோதரனாய்... சகோதரியாய்... தோழனாய்... தோழியாய் பாவித்ததால் வந்த பாசம்!



இல்லத்தில் வளரும் குழந்தைகளைப் போல... அந்த மலர்ச் செடிகளையும் அவனுக்கு ரொம்பவே பிடிக்கும்!

பிறந்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம்... தனக்கு பாரமாகிப் போன குழந்தையை... அதுவும் அழகான ஆண் குழந்தையைத் தூக்கி... ஈவு இரக்கமே இல்லாமல்... அந்த இல்லத்தில் போட்டுவிட்டுப் போய் விட்டாள், ஆதித்யனை பெற்றவள்!

கழுத்தை நெரித்து... கொன்று... ஆற்றிலோ, குளத்திலோ, புதரிலோ வீசாமல் விட்டு வைத்தாளே... அந்த செயலுக்கு மட்டும் அவளுக்கு புண்ணியம் கிடைக்கட்டும்!

விடிந்தும் விடியாத காலை நேரத்தில் குழந்தையின் அழுகுரல் கீதமாய்... நாதமாய் ஒலிக்க... தூக்கத்திலிருந்து விழித்து வந்த ராஜேஸ்வரி அம்மாள் கட்டித் தங்கமாய்... சந்தனத்துடன் பாலையும் துளிமஞ்சளையும் குழைத்த நிறத்தில்... தலைக்கொள்ளாத அடர்ந்த முடியுமாய்... செப்பு உதடுகளுடன்... மணிமணியான கண்களுமாய் கிடந்தக் குழந்தையைத் தூக்கி அணைத்துக் கொண்டார்.

'பாவி...! பாதகி...!'

'இவ்வளவு அழகான குழந்தையை தூக்கி வீசி விட்டுப் போக எப்படித்தான் மனசு வந்ததோ!'

'எந்த ஆணாலாவது வஞ்சிக்கப்பட்டவள்... பாரமாகிப் போன குழந்தை தேவையில்லை என்று தூக்கி எறிந்து விட்டுப் போனாளா?'

'அல்லது காதலில் வரன்முறையில்லாமல் சுகம் அனுபவித்து, வயிற்றில் வாங்கிக் கொண்டவள் செய்த செயலா? இந்தப் பெண்களுக்கு சுகமாய் இருக்கும்போது

இனிக்கிறது! அதுவே வயிற்றில் கரு, உருவாகி, குழந்தை பிறந்தவுடன் கசக்கிறதே!'

'என்ன நியாயம்?'

'ஏன் இந்த சமுதாயம் இப்படி சீர்கெட்டு அதலபாதாளத்திற்கு போகிறது?'

'ஏன் சில ஆண்களும், பெண்களும் ராட்சசர்களாய் மாறி இப்படி அநாதைகளை உருவாக்கி விடுகிறார்கள்?'

'அநாதைகளை உருவாக்குவது எளிது!'

'ஆனால், அந்த அநாதைகள்... இந்த சமுதாய வாழ்வை எதிர் கொள்வது கடினமல்லவா?'

'ஏன் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறது, இந்த மக்கள் சமுதாயம்?'

'மனித மனங்களில் வரவர அன்பு, பாசம், நேசம், பண்பு, பச்சாதாபம், கருணை, இரக்கம், எல்லாம் பாலைவன நீர்மட்டமாய் வற்றிக் கொண்டேப் போகிறதே!'

'இதற்கெல்லாம் என்ன காரணம்?'

மனம் வெம்பிப் போனது, ராஜேஸ்வரி அம்மாளுக்கு!

அன்றிலிருந்து ஆதித்யன் அந்த இல்லத்து வாசியானான். அங்கேயே வளர்ந்து... நன்றாக படித்து... தனியார் கல்லூரிக்கு வேலைக்குப் போயும்... அவன் அந்த இல்லத்தை விட்டு வெளியேறவில்லை.

அங்கு வளரும் பிள்ளைகளுக்கு ஒரு சட்டம்!

நன்கு படித்து, தன் காலில் நிற்கும் திறன் வரும் போது... இல்லத்தை விட்டு வெளியேறி விட வேண்டும்.



ஆனால், அந்த சட்டம் ஆதித்யனுக்கு மட்டும் கொஞ்சம் தளர்த்தப்பட்டது.

'காரணம்...?'

ராஜேஸ்வரி அம்மாள் அவனை தன் பிள்ளையாய் பாவித்து வளர்த்ததுதான். 'அம்மா... அம்மா...' என்று ஆதித்யன் அழைக்கும்போது அவரின் பெறாத வயிறு பாசத்தில் குழைந்து விடும்! உச்சி குளிர்ந்து விடும்! ஏனென்றே விவரிக்க முடியாத பாசப் பிணைப்புகளால் இருவரின் உள்ளங்களும் கட்டுண்டு கிடந்தன.

ராஜேஸ்வரி அம்மாளோடு சேர்ந்து, அவனும் இப்போது இல்லத்தை பொறுப்பாய் பார்த்துக் கொள்கிறான்.

ராஜேஸ்வரி அம்மாளின் கதையோ கண்ணீரை வரவழைத்து விடும்.

எல்லோரையும் போலவே கல்யாணக் கனவுகளில் மூழ்கி இருந்தவளுக்கு கணவனாய் வந்தவர், சண்முகம்.

அன்பாய்... ஆசையாய்... அன்யோன்யமாய் குடும்பம் நடத்தினார்கள். ராஜேஸ்வரிக்கு பிறந்த வீட்டு சொத்தும், பணமும், பங்களாவும் ஏராளமாய் வந்து சேர... மாமனார் வீட்டில் அதிக செல்வாக்கையும், மரியாதையையும்... கூடுதலாய் பாசத்தையும் ஏற்படுத்தித் தந்தது.

என்ன காரணமோ அவள் வயிற்றில் கரு தங்கவில்லை. அப்படியே கருவுற்றாலும் ஐந்தாறு மாதங்களில் கரு தானே கலைந்து விடும்.

ராஜேஸ்வரியின் கனவுகள் கரைந்து... பிள்ளையைப் பற்றிய நினைவுக்கு டாக்டர் ஒரு முற்றுப் புள்ளி வைத்தார்.

கருப்பை வீக் என்றும், கரு தங்கினாலும் ஐந்தாறு மாதங்களில் வெயிட் தாங்காமல் வெளியேறிவிடும் என்றும், குழந்தை பிறக்கும் வாய்ப்பு குறைவு என்றும் டாக்டர் கூறிவிட...

அன்றிலிருந்து சண்முகத்தின் பாசத்தில்... நேசத்தில்... அன்பில்... ப்ரியத்தில் சற்று குறைந்தாற் போலத் தோன்றியது, ராஜேஸ்வரிக்கு!

மாமனார், மாமியாரின் இடக்கான சொற்களையும்... எடுத்தெறிந்து பேசும் தன்மையையும்... இழிவாய், வேலைக்காரியைவிட மோசமாய் நடத்திய கொடுமையையும் தாங்கிக் கொண்டு காலத்தைக் கழித்தாள்.

ஒரு நாள் சண்முகம் வேறு ஒரு பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டி... தைரியமாய் வீட்டிற்கு அழைத்து வர... மாமியார் அந்தப் பெண்ணிற்கு ஆலம் கரைத்து, பொட்டிட்டு, சந்தோசமாய் வரவேற்க...

ராஜேஸ்வரியின் இதயத்தில் புயலும், பூகம்பமும்!

இதற்கு மேல் அங்கிருப்பது அவளின் பெண்மைக்கு இழிவாய், அவமானமாய் தோன்ற...

''இதையெல்லாம் சகித்து வாழ்வேன் என்று எதிர்பார்த்தாயா? என்னை என்ன அத்தனை கேவலமானவள் என்று நினைத்தாயா? என் பெண்மையை, என் அன்பு கொண்ட மனதை புரிந்து கொள்ளாமல், காலடியில் போட்டு மிதித்தவனோடு இனி ஒரு பொழுதும் வாழேன்! ஒரு குழந்தையை ஈன்றெடுக்க முடியாத நான்... எத்தனை குழந்தைகளுக்குத் தாயாகிக் காட்டுகிறேன் பார்!''

ராஜேஸ்வரி ஆவேசத்தோடு கத்திவிட்டு வெளியேற... அனைவரும் தொய்ந்து போனார்கள்.



அவளின் சொத்து, பணத்தில்தானே உட்கார்ந்து கொண்டு ராஜவாழ்க்கை வாழ்ந்தது. அத்தனைப் பேரும் கலங்கித்தான் போனார்கள்.

உடனடியாய் தந்தையின் உதவியோடு அத்தனை சொத்துக்களையும் விற்று எடுத்துக் கொண்டு வந்து...

கள்ளக்குறிச்சியின் கிழக்கே, சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள புறநகர் பகுதியில் விலைக்கு வந்த இடத்தை வாங்கிப் போட்டு... ஓடுகளாலும், கூரைகளாலும் இருப்பிடம் அமைத்து... மீதி இருந்த தொகையை வங்கியில் செலுத்தினாள்.

ஒரு குழந்தை... இரண்டு குழந்தை என்று இருந்தது. இன்று இருநூறுக்கும் மேற்பட்ட குழந்தைகளின் புகலிடமாகியது, அந்த 'சுபாஷ் சந்திரபோஸ் அநாதை இல்லம்!'

வங்கியில் இருந்து வரும் வட்டியோடு, சில தாராள குணமுள்ளவர்கள் சந்தோசமாய் வந்து நிதி உதவி அளித்தனர்.

சாப்பாடு, பள்ளி, கல்லூரி படிப்பு என, அவர் செய்த நல்ல பணிகளால் பயன்பெற்று, இல்லத்திலிருந்து வெளியேறிய மாணவ, மாணவிகளின் ஆதரவோடும் இல்லம் சிறப்போடு நடக்கிறது.

ராஜேஸ்வரி அம்மாள் இல்லம் ஆரம்பித்ததும், அந்த இல்லத்திற்கு முதன் முதலாய் வந்தவன், ஆதித்யன் தான்.

ஆதித்யனுக்கு வயது இருபத்தி ஒன்பது. அந்த இல்லம் உருவாகி இருபத்தி ஒன்பது ஆண்டுகளாகிறது.

ராஜேஸ்வரி வீட்டுக்கு ஒரே பிள்ளை! அவளோட வந்து இல்லப் பணி செய்த தாயும், தகப்பனும் ஒருவர்

பின் ஒருவராய் இறந்து... ஐந்து வருடங்கள் கடந்து விட்டது.

ஒரு பிள்ளை இல்லையென்று நிராகரித்த அவளுக்கு, இன்று இருநூறு பிள்ளைகளை கடவுள் கொடுத்திருக் கிறான்.

அவளுடைய வயிற்றில் ஒரு குழந்தை உருவாகி இருந்தால், தன் பிள்ளை, தன் கணவன், தன் வீடு, தன் வாழ்க்கை என்று சுயநலமாய் இருந்திருப்பார். அவரைப் பற்றி யாருக்குமே தெரிந்திருக்காது.

பிறர் நலம் பார்த்து வாழ்ந்ததன் பலனாய் முதலமைச்சர் கையால் 'சாதனையாளர் விருது'ம் வாங்கி விட்டார்.

அங்கிருந்த சின்னக் குழந்தைகளை மட்டும் வரிசை யில் நிற்க வைத்து... உடற் பயிற்சி சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான், ஆதித்யன்.

''ஆதி... போதும்ப்பா! நேரமாகலையா, உனக்கு?'' ராஜேஸ்வரி அம்மாள் அங்கே வந்து கூற...

''இன்னும் சில உடற்பயிற்சிகள் பாக்கியிருக்கும்மா! அதை பயிற்றுவித்துவிட்டு வருகிறேன்!'' ஆதித்யன் பதில் சொன்னான்.

''வேர்வை காய்ந்து, குளித்து, நீ கல்லூரி புறப்படவும், இவங்க ஸ்கூலுக்குப் போகவும், நேரம் சரியா இருக்கும். ஸ்டாப் பண்ணுப்பா!''

''இன்னும் கொஞ்ச நேரம், அம்மா! ப்ளீஸ்...'' என்று ஆதித்யன் கெஞ்ச...

''போடா, மடையா! எல்லாம் சின்ன பிள்ளைகள்! படிப்பு, தோட்ட வேலை, உடற்பயிற்சின்னு போட்டு படுத்தி எடுக்கிறியே!''



''என்னம்மா நீங்க? இதுங்க முன்னாடி என்னைக் கொடுமைக்காரனா சித்தரிக்கணுமா என்ன? இவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?'' ஆதங்கத்தோடு ஆதித்யன் கேட்க...

''பின்னே நீ செய்வது சரியா? பிள்ளைகளும் குளித்து, உண்டு, பள்ளிக்குப் புறப்பட வேண்டாமா?''

''அதற்காக இப்படியா அவர்கள் முன்பு...''

அவன் முடிப்பதற்குள் ''என் மகனிடம் சும்மா சீண்டி விளையாடினேன்! அதற்குள்ளாக என் மகனின் முகத்தில் தான் எத்தனை வேதனை, கோபம்?''

''இந்த அண்ணா மோசம் என்று நினைக்க மாட்டார் களா? சொல்ல மாட்டார்களா?'' அவன் சிரிப்போடு கேட்க...

''ஸாரி மகனே!''

''என்னம்மா நீங்க? என்கிட்ட போய் ஸாரி என்றெல் லாம்...'' ஓடி வந்து ராஜேஸ்வரியின் வாய் பொத்தினான்.

சேலை முந்தானையால் அவனின் நெற்றி வேர் வையை துடைத்து விட்டார், ராஜேஸ்வரி அம்மாள்.

''அப்பா... நீங்கள் எங்களுக்கெல்லாம் நல்லதுதானே செய்யறீங்க? நல்லது செய்யறவர் எப்படி கொடுமைக் காரனாவீங்க?''

கௌசல்யா அருகில் வந்து மழலைக் குரலில் கூற... ஆதி அவளை அள்ளி அணைத்துக் கொண்டான்.

கௌசல்யாவிற்கு ஆதி என்றால் உயிர். அவனைப் போலவே... பிறந்த அன்றே... அந்த இல்லத்து வாசலில் கிடத்தப்பட்டவள்! அதனால் அவள் மேல் பரிவு, பச்சாதாபம் ஏற்பட்டு... அது கூடுதல் பிரியமாய் வடிவெடுத்தது.

எல்லோரும் அண்ணா என்று அழைக்க... அவள் மட்டும் ஆதியை அப்பா, டாடி என்று அழைப்பாள்.

''ஏய் வாயாடி குட்டி!'' ராஜேஸ்வரி செல்லமாய் கன்னத்தில் கிள்ள...

''அம்மாதான் வாயாடி!'' என்று அவரைப் போலவே சொல்ல...

''உன் டாடியை குறை சொன்னால் பொத்திட்டு கோபம் வந்துடுமே! அப்படி என்ன அவன் உசத்தி! சின்னக் குழந்தையான உன்னையெல்லாம் உடற்பயிற்சி செய்யச் சொல்லி உடம்பை முறிக்கறானே!''

''டாடியைத் திரும்பவும் குறை கூறாதீங்க! எனக்கு கெட்டக் கோபம் வந்துடும்!''

''அடடே... கௌசல்யா குட்டி... கோபத்துல கூட நல்ல கோபம், கெட்ட கோபம்ன்னு இருக்கா என்ன?''

கௌசல்யாவின் மூக்கை செல்லமாய்ப் பிடித்து ஆட்டினான், ஆதித்யன்.

''அம்மாவுக்கு உங்களை குறை சொல்வதே பொழப்பா போயிடிச்சி, டாடி!'' அழகு முகம் சுருக்கி சொன்னாள்.

''நீ எது சொன்னாலும் உன் டாடி கேட்பானாடி?''

''ஓ... கேட்பாரே! என்ன டாடி... நான் எது சொன்னாலும் நீங்க கேட்பீங்கதானே?''

கௌசல்யா தலையை ஆட்டி அழகாய் கேட்டது.

''கௌசல்யா குட்டி சொல்லி கேட்காமல் இருப்பேனா? நீ சொல்லுடா தங்கம்? இன்று உனக்கு என்ன வேண்டும்? பென்சிலா? நோட்டா? சாக்லேட்டா?''

''அதெல்லாம் எனக்கு வேண்டாம்! உடனடியா எனக்கொரு மம்மி வேண்டும்ன்னு கேளுடா செல்லம்!'' ராஜேஸ்வரி சொல்லிக் கொடுக்க...



''எனக்கு மம்மி வேண்டும்! எனக்கு மம்மி வேண்டும்!'' என்று கௌசல்யா அழ...

''குழந்தைகளா... இன்றைக்கு இவ்வளவு உடற்பயிற்சி போதும்! போய் குளிச்சி, ரெடியாகுங்க! ஓடுங்க!'' என்று அங்கிருந்த குழந்தைகளை உடனடியாய் அனுப்பினார்.

''எனக்கு சீக்கிரமே மம்மி வேண்டும்! ப்ளீஸ் டாடி... ப்ளீஸ்ப்பா...''

கௌசல்யா அழுது கொண்டே நச்சரிக்க... ராஜேஸ்வரி மலர்ந்து சிரித்தார்.

''என்னம்மா... இப்படி காலையிலேயே இவளிடம் மாட்டி விட்டீர்களே! குழந்தைக்கு என்ன தெரியும்? இப்போ அழறாளே! அடம் பிடிக்கறாளே! எதை கேட்கயாம்மா? இவளை சமாதானப் படுத்துவதற்குள் முழி பிதுங்கி விடுமே!''

ஆதித்யன் சலித்துக் கொண்டான்.

''நமக்குதான் இந்த அம்மா இருக்கறாங்களே! பிறகு எதுக்கு புதுசா, அம்மா? இந்த அம்மாதான் நல்லவங்க!'' ஆதி ராஜேஸ்வரியை சுட்டிக் காட்டி சொல்ல...

''எனக்கு என் ப்ரண்ட் ஷாலினி அம்மா போல அழகா வேணும்! என்னைத் தூக்கி மடியில வச்சிக்கணும்! கன்னத்துல, நெற்றியிலன்னு முத்தமிட்டு அணைச்சிக்கணும்! தினமும் ஸ்கூலுக்கு சாப்பாடு கொண்டு வந்து... என்னை மடியில வச்சி, கதை சொல்லி ஊட்டி விடணும்!''

''இப்போ உங்களுக்கு சந்தோசமா, அம்மா?'' ஆதி பரிதாபமாய் கேட்க...

''நானும் கல்யாணம் பண்ணிக்கோ! எனக்கும் வயசாகிட்டே போகுது! எனக்குப் பிறகு நீயும், உன் மனைவியுமா சேர்ந்து இல்லத்தை நிர்வாகம் செய்யணும்ன்னு கரடியா கத்தறேன். காதில் வாங்கிக் கொள்கிறாயா? ம்? உனக்குக் கல்யாணம் பண்ணி, உனக்குப் பிறக்கும் குழந்தையை ஆசை தீர மடியில் வச்சி, கொஞ்சணும்ன்னு தினம் தினம் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்! செவிமடுத்தாயா?...

''யார் சொன்னால் கேட்பாயோ... அவள் சொன்னால் தானே, கேட்டால் தானே கேட்பாய்! அதான்!''

''அடப்போங்கம்மா! எனக்கு குடும்பமோ, குழந்தையோ, மனைவியோ யாரும் வேண்டாம்! இந்த இல்லம்தான் என் குடும்பம்! இங்கு வளரும் குழந்தைகள்தான் எனது குழந்தைகள்!''

''மடையன் மாதிரி பேசாதே, ஆதித்யா! முதலில் கௌசல்யாவை அனுப்பி வை!'' சத்தமாய் சொன்னார், ராஜேஸ்வரி அம்மாள்!

''நீ போய் குளிடாம்மா!''

''எனக்கு மம்மி?'' அது கேட்க...

''மம்மிதானே? இன்று கடைவீதிக்குப் போறேன்! அப்படியே மாலை ஒரு மம்மியையும் வாங்கிட்டு வரேன்! நீ போய் ஆயாவிடம் குளித்துவிட்டு, ஸ்கூலுக்குக் கிளம்புடாம்மா!''

''தினம் தினம் இப்படித்தான் சொல்றீங்க! ஆனால் மம்மியை அழைச்சிட்டே வருவதில்லை! இன்று ஏமாற்றக் கூடாது. சரியா?'' குழந்தை கண்களை உருட்டி, தலை சாய்த்து கேட்க...



அதன் குண்டு கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டு...

''மறக்க மாட்டேன், செல்லம்! நீ சமத்தா போய் குளிடா!''

கௌசல்யா அவனிடமிருந்து இறங்கி குதூகலமாய் ஓடினாள்.

''ஆதி... நான் சொல்லி கேட்காதது... இது ஒன்று மட்டும்தான்!''

''திருமணத்தை தவிர நீங்க வேறு எது சொன்னாலும் கண்ணை மூடிட்டு கேக்கறேம்மா!''

''ஆதி...'' கண்களில் ஆதங்கத்தோடு கேட்க...

''முயற்சிக்கிறேம்மா! மனதை கல்யாணத்திற்கு தயார் படுத்தணும்! கொஞ்சம் டயம் கொடுங்கள்!''

''இந்த மட்டும் இறங்கி வந்தாயே! ரொம்ப சந்தோசம், ஆதி! நான் கனவு காண ஆரம்பிச்சிடுவேன், ஆதி! அப்புறமா என் கனவுகளை, கற்பனைகளை மாட்டேன்னு சொல்லி கலைச்சிடாதே, மகனே!''

''ஏம்மா... தாய், தகப்பன் யாருன்னே தெரியாமல் அநாதையாய் வாழற எனக்கு கல்யாணம் தேவையா? என்னையெல்லாம் யார் விரும்பி கட்டிக் கொள்வார்கள்?''

''என் மகனுக்கு இனிமேலா ஒருத்தி பிறக்கப் போறா! ஏற்கனவே பிறந்து தேவதையாட்டம் வளர்ந்துட்டு இருப்பாள்!''

''இந்த அநாதைக்கு ஏதாவது அநாதைப் பெண்ணாவே பார்த்து கட்டி வையுங்கம்மா!''

''ஏம்பா?''

''நல்ல குடும்பத்துல போய் நீங்க எனக்குப் பெண் கேட்டால்... தாய் யார்? தகப்பன் யார்? என்ன மதம்? என்ன

ஜாதி? என்று கேட்காமல் கொடுப்பார்களா? உலகில் நிறைய பேர் மதப்பித்தும், ஜாதிப்பித்தும் பிடித்து அலைகிறார்களே!''

''ஆதி... என்னப்பா இப்படியெல்லாம் பேசறே?''

''நான் நிஜம் பேசறேம்மா! நிஜம் வலிக்கத்தான் செய்யும்!''

ராஜேஸ்வரி அம்மாள் அமைதியாய் இருந்தார்.

''ஏம்மா... நீங்கள் திருமணம் செய்து, என்ன வாரிக் கொண்டீர்கள்? இந்த அளவு மும்முரமாய் கல்யாண வலையில் என்னையும் சிக்க வைக்க ப்ரியப்படுகிறீர்கள்! ம்?'' ஆதித்யன் கேட்க...

ஆறிய காயத்தை மீண்டும் கத்தி கொண்டு கீறி விட்டது போல வலித்தது, ராஜேஸ்வரி அம்மாளுக்கு!



## 2

'மகாலஷ்மி கலை மற்றும் அறிவியல் கல்லூரி.'

பிரம்மாண்டமான கட்டிடங்களுடன்... தூய்மையாகவும்... சுகாதாரத்துடனும்... அழகுடனும்... கலையம்சம் நிறைந்தும்... ஆங்காங்கே வேம்பு, குல்மொஹர், நாகலிங்க மரங்களுடனும்... பாதையின் இரு மருங்கிலும் கலர் கலரான ரோஜாச் செடிகளுடனும்... சின்னஞ் சிறிய தொட்டிச் செடிகளுடனும் காட்சியளித்தது.

எம்.ஏ., இலக்கிய வகுப்பில் ஆதித்யன் இருந்தான்.



ஆதித்யன் இலக்கியத்தையும், இலக்கணத்தையும் நடத்தும் அழகே தனிதான்!

தமிழ் பாடம் மீது பற்றில்லாதவர்கள் கூட... பின்னர் தமிழை - இனிமையாய் ரசிக்க ஆரம்பித்து விடுவார்கள். அவ்வளவு தெளிவான உச்சரிப்பு! இனிமையான குரல் வளம்! பாட சம்பந்தமான முழுமையான அறிவு முதிர்ச்சி! என்று அனைத்தையும் ஒருங்கே பெற்றவன், ஆதித்யன்!

அதிலும் இலக்கியப் பாடத்தை அவன் நடத்தினால்... அத்தனை மாணவர்களும் சிறு சத்தம், சலசலப்பு இல்லாமல் கவனிப்பார்கள்.

ஆதித்யன்... அந்த அளவு மாணவர்களின் இதயத்தை கட்டிப் போடும் வித்தையை தெரிந்து வைத்திருந்தான்!

கம்பராமாயணம் நடத்திக் கொண்டிருந்தான். மாணவர்கள் ஆர்வமாய், சுவாரசியமாய் கேட்டுக் கொண்டிருந்தனர்.

சுடிதார் அணிந்த பெண்ணொருத்தி... இல்லையில்லை நிலவு ஒன்று வானிலிருந்து தரையிறங்கிய கணக்காய்... அழகாய்... அம்சமாய்... பளிச்சென இருந்தாள், அவள்!

ஒவ்வொரு வகுப்பறையையும் கவனித்துக் கொண்டு வந்த அந்த நிலவு... ஆதித்யன் வகுப்பறை முன்பு நின்றது.

''மே ஐ கம் இன், சார்!'' குரல் கொடுக்க...

ஆதித்யன் பாடம் நடத்துவதை நிறுத்தி விட்டு... வாயிற் படியை நோக்கினான்.

அவளைக் கண்டு எரிச்சலுற்றான்.

''ஏய்... யார்ம்மா நீ? உனக்கு என்ன வேண்டும்? யார் வேண்டும்? பாடம் நடத்தும்போது இடைஞ்சல் செய்யக் கூடாது என்ற அறிவுகூட இல்லாதவளா, நீ?''

ஆதித்யன் கொஞ்சம் வேகமாய் கேட்டான்.

''எனக்கு யாரும் வேண்டாம், சார்.''

''அப்புறம்? இடத்தை காலி பண்ணலாமே!''

''நான் இந்த காலேஜ் நியூ ஸ்டூடண்ட், சார்! நேற்று தான் இந்தக் கல்லூரியில் சேர்ந்தேன்! உள்ளே வரலாமா, சார்?'' அவள் புன்னகையோடு கேட்க...

''பாதி வருடமே போயிடிச்சி! எதுவும் அட்மிஷன் நடந்ததா தெரியலையே!''

''நிஜம் சார்! நேற்றுதான் சார் புதுசா ஜாயின் பண்ணினேன்!'' என்றவள் ஆதித்யன் அனுமதிக்கும் முன்பே உள்ளே வந்து, முதல் பெஞ்சில் காலியாய் இருந்த இடத்தில் உட்கார்ந்தாள்.

''வான்னு அழையாத முன்பே வந்துட்டையே! உனக்கு அந்த அறிவுகூட இல்லையா? என்ன புத்தி இது? ஏதோ திறந்த வீட்டில் நுழையுமே... அது போல! விபரம் கேட்டு அனுப்பறதுக்குள்ளே, அப்படி என்ன அவசரம்? ம்?'' கோபமாய் கேட்டான்.

''நான் ரொம்ப பயந்த சுபாவம் உள்ளவள், சார்! உங்களைக் கண்டால் பயமாக இருக்கிறது, சார்!'' என்று அவள் பொய்யாய் நடிக்க... வகுப்பில் இருந்த அத்தனை மாணவரும் சிரித்து விட்டனர். ;

ஆதித்யனுக்கு ஆத்திரம் வந்து கத்தினான்.

''ச்சே... என்ன இளிப்பு? உங்களுக்கெல்லாம் அறிவில்லையா? அப்படி என்ன உலக மகா ஜோக் சொல்லிட்டா... இந்தப் பெண்! அம்மா தாயே... உன் திருவாயை மூடிட்டு அமரும்மா!''

''அம்மா... அம்மா... என்கிறீர்களே, அப்படியா நான் வயசாகித் தெரிகிறேன்!''



அந்தப் புதியவள் கேட்க... குரோதத்துடன்...

''நான்சென்ஸ்... இடியட்!'' என்ற வார்த்தைகளைத் துப்பிவிட்டு பாடத்தை நடத்தினான்.

இராமனும் நோக்க... சீதையும் நோக்க... அந்த கண்களிலிருந்து முதல் பார்வையிலேயே காதல் பிறந்தது. இதயங்கள் இடம் மாறின.

''சார்... ஒரு சின்ன சந்தேகம்! அண்ணலும் நோக்க... அவளும் நோக்க... ஒரே பார்வையில் காதல் பிறந்ததாய் கூறுகிறீர்கள்! அதற்கு சிறிய தேர்வு வைத்துப் பார்த்து விடலாமா, சார்?''

அவள் அப்படிக் கேட்க... ஆதித்யன் புரியாமல் விழித்தான்.

''நானும், நீங்களும் நோக்குவோம்! காதல் பிறக்குதா பார்க்கலாம்! நானும் உங்கள் கண்களை நோக்குகிறேன்! நீங்களும் என் கண்களைப் பார்க்க வேண்டும்! ம்... அப்படித்தான்'' என்றவள்.

அவன் விழியோடு விழி வைத்து நோக்க...

அந்தப் புதியவளின் பேச்சு, பார்வை அனைத்தும் அவனின் கோபத்தை சீண்டிப் பார்த்தது.

''ஏய்... போ... போயிடு! நான் பொல்லாதவன்! போக்கிரி!'' ஆதித்யன் கத்த...

''நீங்க சொன்ன பொல்லாதவன், போக்கிரி பிலிமை நானும் பார்த்தேன்! பிலிம் சூப்பர்தான்! இல்லையா, சார்?''

மாணவர்கள் சிரிக்க... அவமானமாய் உணர்ந்தான்.

''உன் கழுத்தைப் பிடித்து வெளியேத் தள்ளும் முன் மரியாதையாப் போயிடு!''

''எனக்கென்ன போறேன்!''

"அதை முதலில் செய்!" அதட்டினான், ஆதி.

"இப்போ காரஸ்பாண்டண்ட் அறைக்குப் போய் உங்களைப் பத்தி கம்ப்ளைண்ட் பண்ணுவேன்!"

"தாராளமாய் செய்!"

"தமிழ் புரொபசர்னு தெரியுது! ஆனால் உங்களை... போல நிறைய பேர் தமிழ் எடுப்பாங்களே! பேர் சொன்னால்... கம்ப்ளைண்ட் பண்ண வசதியா இருக்கும்!"

"என் பேர் தானே? ஆதித்யன்! ஆதி! இரண்டுல ஏது சொன்னாலும் எல்லோருக்கும் தெரியும்!"

"கோபத்துல கூட ரொம்ப அழகா இருக்கீங்க, சார்!" அந்தப் பெண்... அவனின் முக அழகை ரசித்துச் சொல்ல...

"ஓவராய் பேசுறே! போ... போயிடு! இல்லேன்னால் கோபத்துல அறைஞ்சாலும் அறைஞ்சிடுவேன்!"

"இன்னும் கொஞ்ச நேரத்தில் தாளாளர் அழைப்பார்! வருவதற்கு ஆயத்தமாய் இருங்கள், ஆதி!"

"போயிடும்மா! அசிங்கமா ஏதாவது என் வாயில் வந்துடும்! அதற்கு முன்பு போயிடு!"

அவன் எரிந்து விழ... அவள் மென்னகையோடு திமிராய், கர்வமாய், மிடுக்கோடு... நடையில் நளினத்தை சேர்த்து... இடையசைய மெல்லச் சென்றாள்.

"அழகாப் பொறந்தாலே, அதுங்களுக்கு திமிரும், மண்டைக் கனமும் கூடவே இணை பிரியாத தோழியாய் வந்து ஒட்டிக்குது!"

ஆதித்யன் எரிச்சலோடு கூறிய வார்த்தைகளை காதில் வாங்கிக் கொண்டு வெளியேற... அவன் விட்ட இடத்திலிருந்து பாடத்தை துவங்கி நடத்தினான்.



கொஞ்ச நேரத்தில்... வாசலில் நிழலாட... வாசலை நோக்கியவனின் கண்களில் அட்டெண்டர் நிற்பது தெரிந்தது.

பாடத்தை நிறுத்திவிட்டு "என்னப்பா?" என்று கேட்க...

"வாங்க ஆதி சார்! உங்களைக் கூப்பிடறாங்க!" மொட்டையாய் சொல்லிவிட்டு அட்டெண்டர் பழனிசாமி நழுவினான்.

ஆதித்யன் நிதானமாய் நடந்து சென்று... தாளாளர் அறையின் கண்ணாடிக் கதவை... தட்டிவிட்டு உள்ளே சென்றான்.

அங்கேயும் அந்தப் புதியவள்!

ராஜ தோரணையில் தாளாளர் சீட்டில் அமர்ந்திருந்தாள்!

ஆதித்யனுக்கு அதற்கு மேல் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை!

"ஏய் பெண்ணே... என்ன திமிர்? எவ்வளவு அகங்காரம்? யார் நீ?" சத்தமாய் கேட்க...

அவள் மல்லிகையாய் மலர்ந்தாள்.

"அட்டெண்டர்... ஏய் அட்டெண்டர்... இந்தப் பைத்தியத்தை யார் உள்ளே விட்டது? அங்கானால் மாணவி என்றாய்! இங்கே வந்து தாளாளர் சீட்டில் உட்கார்ந்து... என்னை முட்டாளாக்கிறாயா? இது என்ன உங்கப்பன் வீட்டு காலேஜா?"

"ஆமாம்!"

"ஆமாவா? கர்வம் பிடிச்சவளா? இல்லே பைத்தியமா? ஏய் அட்டெண்டர்... எங்கேப் போய் தொலைந்தாய்? ஏதோ பைத்தியம் ஒன்று... மனநல மருத்துவ மனையில்

இருந்து... தப்பி வந்து தாளாளர் சீட்டில் உட்கார்ந்து சேட்டை செய்கிறது! அதை உள்ளே விட்டு விட்டு... எங்கே போனாய்? என்ன வேடிக்கை? முதலில் இதை கழுத்தைப் பிடித்து வெளியேத் தள்ளி... கல்லூரி கேட்டைப் பூட்டிவிட்டு வா!''

அட்டண்டர் வந்து கைக் கட்டி நின்று...

''சார்... என்ன சார் பேசறீங்க? மேடம்... மேடம் சார்!..

அவன் பதற்றத்தோடு கூற...

''மேடமா... உனக்குப் பார்க்கற பெண்கள் எல்லாம் மேடமா? இது சுத்தமான பைத்தியம்! எதுக்கு கைக்கட்டி நிற்கறே?''

''மகாலஷ்மி மேடம், சார்...!''

''மகாலஷ்மி மேடம் என்றால் பிரதமரா? முதலமைச் சரா? எனக்கெல்லாம் தெரிந்திருக்க?'' அலட்சியமாய் கேட்க...

''ஐய்யோ... கொஞ்சம் மரியாதையா பேசுங்க, சார்! நம்ம தாளாளர் ஐயாவோட பெண் சார்! உங்களுக்குத் தெரியாதா என்ன?''

அட்டண்டர் நடுங்கிக் கொண்டே சொன்னான்.

''அவர் பெண் அமெரிக்காவில் இருக்காங்க! வெளி நாட்டின் மீது மோகம் கொண்டு இந்தியா வர மறுத்து... அங்கேயே படிப்பை முடித்து... பெரிய ஹாஸ்பிட்டலில் வேலை பார்ப்பதாய் கேள்வி! யார் வேணா வந்து... அவர் பெண் என்றால்... உள்ளே விட்டு விடுவதா?''

''ஐய்யோ... திரும்பவும் சொல்றேன். கொஞ்சம் மரியாதையா பேசுங்க, சார்! மேடம் கோபிக்கப் போறாங்க!''



''பழனிசாமி... நீ போப்பா! எனக்கு சார்கிட்டே பேச வேண்டியிருக்கு! நான் பேசிக்கிறேன்!'' என்று அந்த மகாலஷ்மி கூற... அட்டண்டர் வெளியேறினான்.

''உங்களுக்கு என்ன விளக்கம் சார் வேண்டும்? நான் நாகேந்திரன் பொண்ணா? இல்லையா? என்று தானே டவுட்!

''முதல்ல உட்காருங்க! உங்க டவுட்டை கிளியர் பண்றேன்!''

அவள் எதிர் சீட்டைக் காட்ட அமர்ந்தான்.

''இந்தாங்க... இது என் ஐடெண்டி கார்ட்!'' அவள் நீட்ட... அதை வாங்கிப் பார்த்துவிட்டுத் திருப்பி அவளிடம் கொடுத்தான்.

''சரி. நீங்க மகாலஷ்மிதான்! ஒரு டாக்டர்க்கு படித்தப் பெண் இப்படியா ஸ்டூடண்ட்ன்னு விளையாடுவது? டீசண்டா பிகேவ் பண்ணத் தெரியலையே! நாகேந்திரன் சார் ஜென்டில்மேன்! அவருக்குப் போய் இப்படி ஒரு கிறுக்குப் பெண்ணா? ச்சே! நினைக்கவே கஷ்டமா இருக்கு! ஜீரணிக்க முடியலே! நான் வரேன்!'' என்று ஆதித்யன் வெளியேற ஆயத்தமாக...

''நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணுமே!''

''என்கிட்ட பேச என்ன இருக்கு? ம்? பார்த்து ஐந்து... பத்து நிமிடங்கள் கூட கடந்து இருக்காது!''

''காலேஜ் பற்றி! உங்க பாடம் நடத்தின முறையைப் பற்றி!''

''சொல்லுங்க?''

''என்ன பாடம் நடத்தறீங்க?''

அவள் கேட்க... அவன் புரியாமல் முழிக்க... அவளேத் தொடர்ந்தாள்.

"நடத்தற முறையே சரியில்லை! ஒரு மண்ணும் புரியலை! சுத்த மோசம்! பிள்ளைகளுக்கு புரியும் படியா நடத்துவதில்லையா? இப்படி நடத்தினால்... காலேஜ் பெயர் கெட்டு விடாதா? ரிசல்ட் பாதிக்காதா?" அவள் குற்றங்களை அடுக்கிக் கொண்டேப் போக...

"என் பாடம் நடத்தும் முறையில் குற்றம் கண்டு பிடிக்க நீங்கள் யார்? நக்கீரன் பரம்பரையா?" ஆதி அவளை முறைத்தான்.

"நீங்க என்ன சிவபெருமான் பேரனா? இல்லை வம்சா வழியா? நெற்றிக் கண்ணைத் திறக்காமலேயே வார்த்தை களில் சூடு தெரியுதே!"

அவள் நக்கலாய்... சிரிக்காமல் கேட்க...

"இவ்வளவு நேரமும்... மதிப்பு கொடுத்து இங்கே இருக்கேன்னால்... அது நாகேந்திரன் சார் மேல் உள்ள மரியாதையால்தான்! அவர் பெண்ணை அவமானப் படுத்தக் கூடாது என்று பார்த்தால்... ரொம்பத்தான் ஓவராப் போறீங்களே!"

"என்ன? என்ன ஓவராப் போறேன்? ஒவ்வொரு வகுப்பா கவனிச்சிட்டு வந்தேன்! எல்லா வகுப்பிலேயும் புரொபசர் நடத்தின பாடங்கள் வெகு அருமையாய் இருந்தது. நன்றாகப் புரியும்படியாக நடத்தினார்கள்...

"நீங்கள் மட்டும் ஏன் அப்படி தமிழை கொல்கிறீர்கள்? சரியாகவே நடத்தவில்லையே! எனக்கே புரியாதபோது... மாணவர்களுக்கு எப்படி புரியும்? மாணவர்கள் பாவம்! உங்கள் அறுவை வகுப்பில் எப்படித்தான் அமர்ந்திருக் கிறார்களோ! அவர்களுக்காக நான் வருந்துகிறேன்!"

ஆதித்யன் கொதிப்பின் உச்சத்திற்கேப் போனான்.



இதுநாள் வரை அவனின் பாடம் நடத்தும் முறையை பாராட்டிப் பேசியவர்கள் தான் அதிகம். இதுயென்ன மாறாய் 'சுத்த மோசம்' என்கிறாள்.

"மேடம்... இதை சொல்ல நீங்க யார்? கரஸ்பாண் டண்டா? இல்ல பிரின்சிபாலா? அவர்கள் கேட்கட்டும். நான் பதில் சொல்லிக் கொள்கிறேன்!"

"நான் அவர் மகள்! நான் கேட்டு சொல்ல மாட்டீர்களா?"

"கரஸ்பாண்டண்டோட மகள், மகன், அவர் வீட்டு செல்லப் பூனைக்குட்டி, நாய்க்குட்டி, ஆடு, மாடெல்லாம் கேட்டால் கைக்கட்டி பதில் சொல்ல வேண்டும் என்று அவசியமில்லை! வருகிறேன்!"

"சார் கொஞ்சம் வார்த்தையை அளந்து பேசுங்கள்! நீங்கள் இப்போ பேசுவதற்கெல்லாம்... பின்பு வருத்தப் படும் படி வரும்! ஆமாம்... சொல்லிவிட்டேன்!"

"அப்படி ஒரு சூழ்நிலை எனக்கு வராது. அப்படியே வந்தாலும்... எனக்காக கஷ்டப்பட வேண்டாம்! மிஞ்சி மிஞ்சிப் போனால் வேலைதானே போகும்! இதைவிட நல்ல சம்பளம் கொடுக்க எத்தனையோ காலேஜ் காத் திட்டு இருக்கு! நாகேந்திரன் சார் எங்க அநாதை இல்லத்துக்கு மாசமானால் லட்ச ரூபாய் கொடுத்து உதவு கிறாரே என்று இங்கு வேலை பார்க்கிறேன்! புரிஞ்சதா?"

ஆதித்யன் சொல்லிவிட்டு வெளியேறினான்.

ஒரு அழகான... ஆண்மையுள்ள... வீரமுள்ள... ஆண் சிங்கம் ஒன்று கர்ஜித்துவிட்டுப் போனது போல இருந்தது.

மகாலக்ஷ்மி மென்மையாய் புன்னகைத்துக் கொண்டாள்.

இனி, இவ்வாறு அழகாய் புன்னகைக்கப் போவ தில்லை எனத் தெரியாமல்!



# 3

நாகேந்திரன் பதினெட்டு வயதில் திருநெல்வேலியிலிருந்து கள்ளக்குறிச்சிக்கு வந்தவர்.

சொற்ப சம்பளத்தில் ஒரு ஸ்வீட் கடையில் வேலை பார்த்தார்! நல்ல சிக்கனவாளி! சிறுகச் சிறுக சேர்த்து... ஒரு இடத்தை வாடகைக்கு எடுத்து 'திருநெல்வேலி ஸ்வீட் ஸ்டால்' என்ற ஸ்வீட் கடையை வைத்து... அதில் வெற்றியும் கண்டார்.

சாரதா என்ற அழகிய, குடும்பப் பாங்கான, ஏழை வீட்டுப் பெண்ணை மணந்து, அருண் குமார், மகாலஷ்மி என்ற செல்வங்களைப் பெற்று, அதுவும் மகாலஷ்மி வந்த பிறகு விளையாட்டாய் ஒரு லாட்டரி சீட்டு வாங்கப் போய்... நிஜமாகவே பம்பர் குலுக்கலில் ஒரு கோடி ரூபாய் பரிசு கிடைத்தது.

கல்லை நகருக்குக் கிழக்கே சகாய விலையில் வந்த ஐம்பது ஏக்கர் நிலத்தை வாங்கிப் போட்டார்.

ஆட்களை வைத்து விவசாயம் செய்ய செல்வம் கொழித்தது.

நிலத்தின் ஒரு பக்கம் பெரிய ஓட்டலோடு கூடிய லாட்ஜ்ஜை கட்டினார். பஸ், கார், லாரி பார்க்கிங் என்று அனைத்து வசதிகளுடன் கூடிய ஓட்டலாய் இருக்க... சேலத்திலிருந்து சென்னை... சென்னையிலிருந்து சேலம், கோயம்புத்தூர் என்று செல்லும் அத்தனை பஸ்களும் அங்கே வந்து நின்று, பயணிகள் அனைவரும் உணவருந்திவிட்டுச் செல்வார்கள்.



நாமக்கல், ஈரோடு, ராசிபுரம் என்று... லோடு ஏத்திச் செல்லும்... அத்தனை லாரி டிரைவர்களும்... உள்ளே வந்து, லாரியை நிறுத்திவிட்டு, குளித்து, உணவருந்திவிட்டுச் செல்வார்கள்.

நாள் முழுக்க ஓட்டல் வியாபாரம் பெருகியது. அங்கே லாட்ஜில் தங்க, முன் பதிவு செய்ய வேண்டும். இல்லையேல் தங்கும் அறை கிடைக்காது.

அடுத்ததாய் லாட்ஜ் அருகிலேயே பெரிய திருமண மண்டபத்தைக் கட்டினார்.

அருணுக்கு நான்கு வயதும், மகாலஷ்மிக்கு மூன்று வயதும் இருக்கும்போது... அவர்களைக் கான்வெண்டில் சேர்க்க சென்றார். கான்வெண்ட் என்ற பெயரில் ஒரு கூட்டம் கொள்ளையடித்து குவிப்பதைக் கண்டு வெகுண்டெழுந்தார்.

அந்த அநியாயத்தை அடக்க, தடுக்க என்ன செய்வது என்று யோசித்தவர் மூளையில் அந்த கான்வெண்ட் கல்வியை இன்னும் தரமானதாய், குறைந்த கட்டணத்தில் நாம் கொடுத்தால் என்ன? என்று உதித்தது.

அதன் விளைவு...?

இன்று ஆலமரமாய் தழைத்து, கிளை பரப்பி ஓங்கி உயர்ந்திருக்கும் 'மகாலஷ்மி மாண்டிச்சேரி பள்ளி, மகாலஷ்மி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மகாலஷ்மி ஸ்டேட் போர்டு பள்ளி, மகாலஷ்மி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மகாலஷ்மி கல்வியியல் கல்லூரி, மகாலஷ்மி இன்ஜினியரிங் கல்லூரி!'

அடுத்ததாய் நகரின் மத்தியில் ஐந்து மாடியுடன்... ஐம்பது படுக்கையறைகள் கொண்ட... நவீன மருத்துவ மனை உள்ளது.

மகாலஷ்மி வெளிநாடு சென்று எம்.பி.பி.எஸ். படிக்க ஆரம்பித்ததும், கட்ட ஆரம்பித்தவர் இரண்டே வருடங்களில் கட்டி முடித்து, நல்ல ஸ்பெஷலிஸ்ட்டுகளைப் போட்டு மருத்துவ மனையும் வெற்றிகரமாய் நடக்கிறது.

மகள் வந்து மருத்துவ மனையைப் பார்த்துக் கொள்வாள் என்றவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அமெரிக்க மோகம் கொண்டு அங்கேயே வேலைப் பார்த்தவள், நேற்றுதான் லீவில் வந்திருக்கிறாள்.

இத்தனை உயர்வுக்கும், புகழுக்கும் மகாலஷ்மிதான் காரணம் என்று அவளின் பெயரிலேயே வியாபார ஸ்தாபனங்களிலும், கல்வி நிறுவனங்களிலும் விரிந்து கிடக்கின்றன.

இவர்களின் கல்வி நிறுவனத்தில் ஏழை, எளியவரும் பயன் பெறும் வகையில் குறைவான கட்டணம் இருக்க... அங்கே சுற்று வட்டத்திலுள்ள... ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை உள்ள... வீட்டுப் பிள்ளைகளின் குழந்தைகளும்... கல்வி கற்றனர்.

எல்.கே.ஜி., யூ.கே.ஜி. என ஒவ்வொரு வகுப்பிலும் ஏ டூ எக்ஸ், ஒய், இசட் என பிரிவுகள் இருந்தன.

பள்ளி பஸ்ஸே நூறுக்கு மேல் உள்ளது.

கல்லை மாநகரின் பிரம்மாண்டமே மகாலஷ்மி கல்வி ஸ்தாபனங்கள்தான்!

அருண் அவளைவிட ஒரு வயது பெரியவன்! ஆனாலும் ஒன்றாகவே பள்ளியில் சேர்க்கப்பட்டனர். கல்வி கற்றனர், மகா படிப்பில் சுட்டிப் பெண்! அருண் சுமார் ரகம் தான், ஒவ்வொரு வகுப்பிலும் சுமாராய் மார்க்கெடுத்து அருண் இளங்கலைப் பட்டத்தோடு படிப்பை நிறுத்திக் கொண்டான்.



பள்ளிகளை அருண் நிர்வகிக்க...

நாகேந்திரனோ கல்லூரிகளை நிர்வகிக்கிறார்.

நாகேந்திரனின் நேர்மைக்கும், நல்ல மனதிற்கும் நல்ல ஆசிரியர்கள் கிடைத்தார்கள்.

மாலை வரை கல்லூரியில் இருந்து விட்டு வீடு திரும்பினாள், மகாலஷ்மி.

நாகேந்திரன் கல்லூரி வேலையாய் சென்னை சென்று, திரும்பி, ஷோபாவில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தார்.

''டாடி...'' என்று ஓடிவந்து... அவரைக் கட்டியணைத்து... முத்தமிட்ட மகளை... ஆசைப் பொங்கப் பார்த்தார்.

''என்னடாம்மா... காலேஜ் பிடிச்சிருக்கா?''

''ரொம்பப் பிடிச்சிருக்கு, டாடி!''

''சந்தோசம், மகாம்மா!''

''அதைவிட அங்கே பணிபுரியும் ஸ்டாப்ஸை பிடிச்சிருக்கு, டாடி!'' ஆதித்யனை நினைத்துக் கொண்டு சொன்னாள்.

''சரிம்மா! உன் லீவு முடிஞ்சி... எப்போ அமெரிக்கா கிளம்பறே?''

''நான் போகப் போறதில்லே!''

அவள் சொல்ல...

''ஐயோ! கடவுளே! என்ன இது ஆச்சரியம்! எனக்கு இந்தியாப் பிடிக்கலே! இங்கு உள்ள தட்ப வெப்பம் பிடிக்கலே! இங்கு உள்ள மக்களையெல்லாம் பிடிக்கலேன்னு சொன்னவள்... பேசறப் பேச்சா இது?

''அப்போ... நான் இங்கு இருப்பதை பிடிக்காத... முதல் ஆள், நீங்கள் தானா?'' சிணுங்கினாள், மகாலட்சுமி.

''என்னடா மகா சொல்றே? உனக்காகவே எத்தனை பெரிய ஹாஸ்பிட்டல் கட்டினேன்! நீதானே ஏமாற்றியவள்!''

''ஏமாற்றியதற்கெல்லாம் வட்டியும் முதலுமா சேர்த்து... இங்கேயே தங்கி விடலாம் என்று இருக்கிறேன்! நீங்க என்ன டாடி சொல்றீங்க?''

''இதைவிட ஸ்வீட்டான செய்தி உண்டா? நிஜமாவா சொல்றே, மகா? நீ ஒண்ணும் பொய் சொல்லி, எங்களை ஏமாத்தலையே? முட்டாளாக்கலையே?''

நாகேந்திரன் நம்ப முடியாத ஆச்சரியத்தில் கேட்டார்.

''ஐய்யோ டாடி... இதிலெல்லாம் யாராவது விளையாடு வாங்களா, என்ன?''

சாரதா பூரிப்பில் கத்தினாள்.

''என் தங்கமே! என் செல்லமே! என் உச்சி குளிருதடி! என் உள்ளம் சிலிர்க்குதடி... என் கண்ணே!''

சாரதா கொண்டு வந்த... ஆப்பிள் ஜூஸை நீட்ட... அவர்கள் இருவரும் எடுத்துக் கொண்டதும்... மகாவை முத்தமிட்டு அணைத்துக் கொண்டாள்.

''ஏய் அருண்... அருண்...'' மாடியைப் பார்த்து குரல் கொடுக்க... கம்ப்யூட்டரை ஆப் செய்துவிட்டு... அருண் வந்து எட்டிப் பார்த்தான்.

''அருண் ஓடிவாப்பா! உன் தங்கை சொல்வதைக் கேள்!''

அம்மா ஆனந்தத்தில் சத்தம் போட... அருண் பதறிப் போய்... ஓடி வந்தான்.

''என்னம்மா? ஏன்?''



''உன் தங்கை இங்கேயே இருந்துடறாளாம்! வெளிநாடு போகலையாம்!'' அம்மா சிரிக்க...

''இந்த வாலு உளறுதுன்னு நம்பறீங்களா? மம்மி? ஏதாவது விளையாட்டு பண்ணுவா! ஏதாவது உருப்படாத பொய்யைச் சொல்லி உங்களை எல்லாம் ஏமாற்றுவதே... அவளுக்கு பொழப்பாப் போச்சு! எனக்கு வேலையிருக்கு! நான் வரேன்!'' மாடி ஏறி ஓடினான்.

''நாளையில் இருந்து நம்ம மருத்துவமனையை பொறுப்பா கவனிச்சுக்குவே இல்லையாம்மா?'' நாகேந்திரன் கேட்க...

''மாட்டேன்..!'' தலையை ஆட்டினாள்.

''பின்னே?''

''நம்ம கல்லூரி நிர்வாகத்தைப் பார்த்துக்கிறேன்!''

''எஞ்ஜினியரிங் காலேஜையா?''

''ஐய்யோ டாடி... எதையாவது கேட்டு போர் அடிக்காதீங்க! கலை மற்றும் அறிவியல் கல்லூரியைப் பார்த்துக் கொள்கிறேன். அப்படியே ஹாஸ்பிட்டலையும் நிர்வாகம் செய்யறேன்!''

மகாலஷ்மி சொல்ல நாகேந்திரனுள் கொஞ்சமாய் ஆத்திரம் எட்டிப் பார்த்தது.

''என்னடா மகா... இது உளறல்? மெடிக்கல் படிச்சவளுக்கு கல்லூரி நிர்வாகம் எதுக்கு?''

''டாக்டர் ஆர்.கே.எஸ். கல்லூரியின் நிர்வாகிகூட ஒரு டாக்டர்தான்! அதுவும் உங்க நண்பர் மகுடமுடிதானே! அவர் கல்லூரியின் கரஸ்பாண்டண்டாகவும் செயல்படுகிறார். அடுத்ததாய், வளர்மதி மருத்துவமனை என்ற பெயரில்... மருத்துவமனையை ஏற்படுத்தி... திறம்பட செயல்படு

கிறார் என்பது... உங்களுக்கும்தானே தெரியும்! அப்பா ப்ளீஸ்ப்பா...'' மகாலஷ்மி கெஞ்ச...

''நீ நம்ம மருத்துவமனையை மட்டும் பார்த்துட்டாப் போதும்!''

''மருத்துவமனையையும் பார்த்துக்கிறேன்! கல்லூரியையும் நல்ல முறையில் நிர்வாகம் செய்கிறேன்! டாடி... டாடி... கல்லூரிக்கு நாளைக்கே கரஸ்பாண்டண்ட் ஆகணும்!''

மகாலஷ்மி சின்னக் குழந்தையாய் அடம் பிடித்தாள்.

''ஏன்டா? என்ன இது ஆசை?'' நாகேந்திரன் கேட்க...

''ஆசைதான்! கல்லூரி பிடிச்சிருக்கு! என் விருப்பப்படி செய்தால் நான் இங்கே இருப்பேன்! இல்லேன்னால்... மம்மி... நாளைக்கே, என் மூட்டையை கட்டிட்டு... அமெரிக்கா பறந்துடுவேன்! டாடி இதுல உங்களுக்கு சம்மதமா?''

மகாலஷ்மி நாகேந்திரன், சாரதாவிற்கு மிரட்டல் விடுத்தாள்.

''என்னங்க நீங்க? உள்ளதையும் கெடுத்து குட்டிச் சுவராக ஆக்கிடுவீங்க போலத் தெரியுதே! மகாதான் ஆஸ்பத்திரியையும், கல்லூரியையும் நிர்வகிக்கறேன்னு சொல்றாளே! வயசான காலத்துல கொஞ்சம் பொறுப்பை நீங்களும் குறைச்சுக்கங்களேன்!''

சாரதா கண்ணீரோடு கதறினாள். மீண்டும் கதறலோட அவரிடம் கெஞ்சினாள்.

''என்னங்க... என் பெண் என்னோடவே இருக்கணும்! அதுக்கு அவள் என்ன கேட்டாலும் செய்துடுங்க! எனக்கு அடிக்கடி நெஞ்சுவலி வருது! கடைசி காலத்தில், என்



அருகில், என் பெண் இல்லாமல் செய்துடாதீங்க! ப்ளீஸ்... உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்! மகா இங்கேயே இருக்கணும்! அவளைப் பிரிஞ்சி இதுநாள் வரை அனுபவித்த நரகம் போதும்! என்னால் இனியெல்லாம் அவளைப் பிரிஞ்சி இருக்கவே முடியாது!''

சாரதா கையெடுத்துக் கும்பிட்டு, முதுகு குலுங்க அழுதாள்.

அவர் பதில் சொல்லாமல் யோசனையோடு இருக்க...

''உங்களிடம் மீண்டும் கேட்டுக்கறேன்! என் ஆசை மகள் கேட்டதை செய்யுங்க! என் மகளில்லாமல் இனி இங்கே இருக்க மாட்டேன்! செத்துடுவேன்! நான் செத்தா தான் உங்களுக்கு நிம்மதியா?''

''ஏய் சாரதா... என்ன பேசறே?''

அம்மா எப்படியும் காயை நகர்த்தி... கல்லூரி நிர்வாகத்தை வாங்கித் தந்து விடுவாள் என்று... மலர்ச்சியோடு அமர்ந்திருந்தாள், மகாலஷ்மி.

''அவள் பிடிவாதக்காரி! சொன்னதை செய்பவள்! நாளைக்கே புறப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!''

''என்னை என்ன செய்யச் சொல்றே, சாரதா?''

''அவளை நம்பாமல்... வீண் பிடிவாதம் பிடிப்பதை விட்டு விட்டு... நிர்வாகத்தை ஒப்படையுங்க! நல்ல முறையில் நிர்வாகத்தை கவனித்துக் கொண்டால்... மகாவே தொடர்ந்து கவனிக்கட்டும்! இல்லேன்னால் நிர்வாகத்தைப் பிடுங்கிக் கொண்டு... ஆஸ்பத்திரி மட்டும் கவனி என்று சொல்லிவிடுங்கள்! என்னங்க செய்வீங்க தானே? இதுவரை எனக்காக எதுவாவது விரும்பி கேட்டிருக்கேனா? இப்போ என் பெண் என்னருகே

இருக்கணும்ன்னு கேட்கிறேன்! எனக்காக இது மட்டும் செய்யுங்க! ப்ளீஸ்...''

சாரதா தாங்க முடியாத துக்கத்துடன் சொல்லிவிட்டு அழுதாள்.

''ஏய்... எதுக்கு அழறே? சின்ன பிள்ளையாச்சே... அத்தனை பெரிய பொறுப்பை, நிர்வாகத்தை... கவனிக்க முடியுமான்னு யோசிக்கிறேன்!''

''என் பெண்... எந்த அளவு திறமைசாலி என்று உங்களுக்குத் தெரிந்துமா?

''இவளைவிட பெரியவன் அருண்! அவன்கிட்ட ஸ்கூல் நிர்வாகம் இருக்க... இவள் கிட்ட கல்லூரி நிர்வாகத்தை ஒப்படைத்தால்... அவன் என்ன நினைப்பான்? என்னைத் தவறா எடுத்துக்க மாட்டானா? அதுவுமில்லாமல் ஊர் என்ன சொல்லும்?''

''அருண் தங்கை மேலே உயிரையே வச்சிருக்கான்! இவள் விருப்பத்துக்கு குறுக்கே நிற்க மாட்டான்! அவனைக் கேட்டே செய்யுங்க! ஊரையும், உலகையும் தூக்கி ஒரு மூலையில போடுங்க! நாம் ஊர், உலகத்துக்காக வாழக்கூடாது! நாம் நமக்காக மட்டுமே வாழ வேண்டும்!'' சாரதா அடித்துக் கூற...

அருணை அழைக்க... மாடியிலிருந்து வந்த அருண்... தங்கையின் அருகில் அமர்ந்தான்.

அருணிடம் நாகேந்திரன் மகாலஷ்மி சொன்ன விபரத்தைச் சொல்ல... அருண் குதிகுதியென்று குதித்தான்.

''என்னப்பா விளையாடறீங்களா? காலேஜ் நிர்வாகம் என்ன புட்பால் மேட்சா...? இல்ல கிரிக்கெட் மேட்சா...? மட்டையைத் தூக்கிட்டுப் போய் சிக்ஸரும், போருமாய்



எடுக்க! ஏய் அறிவு கெட்டவளே... உன் தொழிலைப் பார்க்காமல்... ஏன் வேண்டாததில் எல்லாம் மூக்கை நுழைக்கிறாய்? நீ ஹாஸ்பிட்டலையும் பார்க்க வேண்டாம்! காலேஜியையும் பார்க்க வேண்டாம்! ராணி போல வீட்டுலே இரு! உனக்கு டாடி ஏதாவது நல்ல மாப்பிள்ளையா பார்ப்பார். கட்டிட்டு போய் குடும்பம் நடத்தற வேலையைப் பார்! ஏன் டாடி... ஏதாவது இளிச்ச வாயன் தலையில... இந்த லூசை கட்டிவிட்டு... அக்கடான்னு இருக்காமல்... இவள் ஆடறான்னு நீங்களும் மண்டையை மண்டையை ஆட்டிட்டு... கூடவே சேர்ந்து ஆடறீங்களா?''

அருண் கோபத்தில் கத்தினான்.

''மகா பிடிவாதம் பிடிக்கிறாள்! என்னை என்ன செய்யச் சொல்றே?'' நாகேந்திரன் பரிதாபமாய் கேட்டார்.

''நான் இவள்கிட்டே பேசறேன்!'' என்றவன் மகாலஷ்மியின் அருகே நகர்ந்து போய்... அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு...

''டேய் குட்டி... குட்டிம்மா... உனக்கு ஏன்டா வேண்டாத வேலைகள்? எங்க வீட்டு செல்லம்... தங்கம்... குத்து விளக்கு... எல்லாமே நீதான்! நீ படிச்சது மருத்துவம்! உன் தொழில் எவ்வளவு உயர்ந்தது தெரியுமா? போற உயிரை திரும்பக் கொண்டு வர கடவுள் போல டாக்டர்ஸ்! டாக்டர்கள் கடவுளுக்கு ஒப்பானவர்கள்! 'மகாலஷ்மி மருத்துவமனை'யின் தரத்தை இன்னும் உயர்த்த வேண்டும்! நீ போய் அதை செய்யக் கூடாதா?'' அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டான்.

''செய்யறேன்! அதோடு கல்லூரியையும் பார்த்துக்கிறேன்! இல்லேன்னால் அமெரிக்கா கிளம்பறேண்ணா!'' சின்னக் குழந்தையாய் மீண்டும் அவள் அவனிடம் சிணுங்க...

"இவள் அடங்க மாட்டாப்பா! இவள் இஷ்டத்துக்கே செய்துடுங்க!" அருண் சொல்லிவிட்டு தன்னறைக்குப் போனான்.

இந்த ஏற்பாடால் என்னென்ன துன்பங்களையும்... துயரங்களையும் அனுபவிக்க போகிறார்களோ! அது தெரியாமல் ஆனந்தக் கூத்தாடினர்... நாகேந்திரனும், சாரதாவும்!



# 4

மகாலஷ்மிக்கு இரவெல்லாம் உறக்கம் வரவில்லை. அவளின் மனம் பனியாய் குளிர்ந்திருந்தது.

சவால் விட்டு சென்றவனின் நாளைய ஏமாற்றத்தைப் பார்க்க... மனம் ஏங்கியது! ஆசைப்பட்டது! தவித்தது!

அவன் அழகு முகம் வாடுமா? ஏமாறுமா? பூரிக்குமா? பூகம்பமாய் வெடிக்குமா? என்றெல்லாம் 'கேள்வி அலைகள்' அவளுள்ளே தோன்றி... சிறு சிறு வட்டங்களாய் இருந்தது... பெரிய வட்டங்களாய் மாறியது.

இமைகளிரண்டும் ஒட்ட மறுத்தது. கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தாள். விடியாத நீண்ட இரவை சபித்தாள்.

விடியற்காலையில் உறக்கம் வந்து தாலாட்ட நிம்மதியாய் உறங்கிப் போனாள்.

காலையில் அம்மா வந்து எழுப்பினாள்.

அம்மாவை ஆசையோடு இழுத்து முத்தமிட்டாள்.



"என்னடி இது... வாய்கூட கொப்பளிக்காமல்? எந்த மகராசன் வந்து... உன்னிடம் மாட்டி... அவதிப்படப் போறானோ! ஐய்யோப் பாவம்!" சாரதா சொல்ல...

"இரவெல்லாம் சந்தோசத்துல தூக்கமே வர்லே, மம்மி! நான் குளிச்சிட்டுத்தான் விடியற்காலை ஐந்து மணிக்கு படுத்தேன்! பல்லெல்லாம் துலக்கியாச்சு! நீ காபியை கொண்டு வா! டாடியைப் போய் எழுப்பு! கல்லூரிக்கு நேரமாவே போகணும்!" சந்தோசமாய் மகாலஷ்மி சொன்னாள்.

"உன் டாடிக்கும், அண்ணாவுக்கும் இதுல விருப்பமே இல்லை! உன் பிடிவாதத்திற்காகவும், என் அழுகைக்காகவும் தான் ரெண்டு பேரும் மனசே இல்லாமல் ஒத்துட்டதே! புரியுதா?"

"அதுக்கென்ன செய்யச் சொல்றே?"

"மீண்டும் யோசி! தேவையா? வேண்டாமா என்று!"

"என்னைப் பற்றி தெரியுமல்லவா? எதையும் சாதித்தே பழக்கப்பட்டவள், நான்! அப்படிப்பட்ட நான் முடிவெடுத்தால் முடிவெடுத்ததுதான்! பின்வாங்கி எனக்குப் பழக்கமில்லே மம்மி!"

"ஏய் மகாலஷ்மி..."

"சும்மா தொணதொணத்துட்டு இருக்காமல்... வேலையிருந்தால் போய் செய்யும்மா! காலையிலே என் நல்ல மூடை கெடுக்காதே!"

"உன்னை கட்டிக்கப் போறவர் பாவம்தான்டி!"

"எப்படி? ஏன்?" சிரிப்போடே கேட்டாள்.

"உன் பிடிவாதம், குழந்தைத் தனம், ஆணவம், திமிர் எல்லாத்தாலும் என் மருமகன் முழி பிதுங்கத்தான் போகிறார்!"

"உனக்கு ஏன் வீண் கவலை? அது என் புருஷனா வருபவருக்கில்லே இருக்கணும்!" மகா சொல்லிவிட்டு ஆனந்தமாய் சிரிக்க...

சாரதாவோ தலையில் அடித்துக் கொண்டு... அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

மகாலஷ்மி தலையைத் தளரத் தளரப் பின்னினாள். இடுப்புக்குக் கீழே முட்டி வரை நீண்டு தொங்கிய தலைமுடி பட்டாய் மின்னியது. நெருக்கமாய் கட்டிய குண்டு மல்லிகை சரத்தை நீளமாய் தொங்க விட்டாள்.

அழகான, எளிமையான, சிறிய பார்டர் வைத்த புதிய பட்டுப் புடவையை எடுத்து உடுத்திக் கொண்டாள். சேலையை தழையத் தழைய கட்டிக் கொண்டு மாடியிறங்கி வர...

நாகேந்திரன், சாரதா, அருண் மூவரும் அவள் எழில் மிக்க தோற்றத்தில், அழகில் மயங்கி, விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

"என்ன டாடி...?"

"ரொம்ப அழகா இருக்கேடா!" நாகேந்திரன் சந்தோசமாய் சொல்ல...

"அப்போ இதுக்கு முன்பு நான் அழகா இல்லையா?" மகாலஷ்மி சிணுங்க...

"சுடிதார், மிடி, டாப்ஸ், ஜீன்ஸ், பனியன், சோளி, பாவாடையில் பார்க்க சின்னப் பெண்ணாய், குழந்தைத் தனமாய் தெரிவாய்! இந்த எளிய பட்டில் உன் தோற்றமும், அழகிய வதனமும்... தேவதை கணக்காய் இருக்கேடா!" பெருமையோடு சொல்ல...



"நீங்களே கண்ணு வைத்தால்... ஊரெல்லாம் என் பெண்ணின் அழகு மேல்... எவ்வளவு கண் வைப்பார்கள்?" சாரதா பெருமிதமாய் சொல்ல...

"அப்படியே மணவறைக்குத் தயாரான கல்யாணப் பெண் போலிருக்கிறாய்! எவனாவது தாலியை எடுத்துட்டு வந்து... உன் கழுத்தில் கட்டிவிடப் போகிறான்! ஜாக்கிரதை, மகா!" அருண் கிண்டலடிக்க...

"ஏய்... ஏய்... அண்ணா... காலையிலே என் காலை வாருகிறாயே! இது நியாயமா?" மகாலஷ்மி அருணை அடிக்க கை ஓங்கினாள்.

"அம்மா மகாலஷ்மி... நம்ம மாவட்ட கலெக்டர் நவநீத் உன்னை பெண் கேட்டு வந்தார்!" நாகேந்திரன் சொல்லவும்...

"எப்போ?" ஆச்சரியமாய் கேட்டாள்.

"ஒரு பத்து நாளுக்கு முன்பு!"

"என்ன சொன்னீங்க?" சிரிப்போடு கேட்க...

"என் பெண் வந்ததும், கேட்டு சொல்றேன்னு சொன்னேன்! ரொம்ப நல்லவர்! சின்ன வயதிலேயே... அதுவும் முதல் முயற்சியிலேயே ஐ.ஏ.எஸ்.ஸை பாஸ் பண்ணி வந்திருக்கார். உன்னைப் போலவே டாக்டருக்குப் படிச்சவர்! இப்போ டாக்டர் தொழிலை வீட்டில்... அதுவும் இரவில் சேவைக்காய் செய்கிறார். நாள் முழுக்க கலெக்டர் பணி செய்தாலும்... இரவு ஒரு முப்பது, நாற்பது பேஷண்ட்டுக்கு வைத்தியம் பார்த்துட்டுதான் படுக்கவே போவாராம்! நம்ம விழுப்புரம் மாவட்டம் புகழுது!...

"தலையில் வைத்துக் கொண்டாடுது! நம்ம மாவட்டத்துல ஊழலோ, கொலையோ, குற்றமோ, பதுக்கலோ,

சுரண்டலோ எதுவுமே நடப்பதில்லை! அவர் எந்த தோற்றத்துல, ரூபத்துல வருவார்ன்னு தெரியாமல் அத்தனை பேரும் அலருகிறார்கள்! பள்ளிக்கு குழந்தையை சேர்க்கறாப்போல வந்து செக் செய்கிறாராம்! அடுத்ததா சினிமா தியேட்டருக்கு சட்டையும், லுங்கியுமா... தலையில துண்டை கட்டிட்டு... கிராமத்தான் போல வந்து... நம்ம ஊர் கோவிந்தராஜன் தியேட்டரை செக் செய்ய... இருபது ரூபா டிக்கெட்டை ஐம்பது ரூபாய்க்கு படம் ரிலீஸ் ஆன ஜோர்ல வாங்கி கல்லாவை நிரப்பிட்டு இவங்க இருக்க... அதைக் கண்டவர் கொதிச்சுப் போய் தியேட்டருக்கே சீல் வச்சிட்டார்ம்மா! இப்போ கோவிந்தராஜன் தியேட்டர் மூடிக்கிடக்குது! மனுஷன் கலெக்டர்கிட்ட நடையா நடக்கறார். தேவையா? அதிக ஆசை தேவையா? இப்படி தியேட்டர் சீல் வைக்கப்பட்டு அவமானப்படணுமா?''

''என்ன டாடி... கலெக்டர் புராணம் இவ்வளவுதானா? இன்னும் இருக்கா?'' மகாலஷ்மி நக்கலாய் கேட்க...

''உனக்கு கிண்டலா தெரியுதா? நம்ம மாவட்டத்துல சுத்தமா கள்ளச் சாராயம் ஒழிஞ்சிப் போச்சி! தெரியுமா? இத்தனை போலீஸ்காரவங்களால செய்ய முடியாததை... நவநீத் ஒருத்தரா செய்திருக்கிறார்! எத்தனை பெரிய விஷயம்! நம்ம பஸ் ஸ்டாண்ட் கழிப்பறையில ஒரு நபர்க்கு இரண்டு ரூபான்னு கொள்ளையடிச்சிட்டு இருந்தானுங்க! இரண்டு ரூபாய் கொடுத்து சிறுநீர் கழிக்க முடியாத பயணிகள்... பஸ் ஸ்டாண்ட் ஓரம், ஒதுக்குப் புறம்ன்னு நாற அடிச்சிட்டு இருந்தாங்க! நவநீத் பார்வைக்கு இது போய்... இப்போ கழிப்பறை செல்ல வெறும் ஐம்பது பைசாதான்! பஸ் ஸ்டாண்ட் இப்போ சுத்தமா, சுகாதாரமா இருக்கு! நவநீத் எனக்கு மாப்பிள்[illegible]யா வந்தால் சந்தோசப்படுவேன், மகா! அவரும் நம்ம



திருநெல்வேலியில இருந்து வந்தவராம்! கூட்டி, கழித்துப் பார்த்தால் நமக்கு சொந்தமாக் கூட இருக்கலாம்! என்ன சொல்றே, மகா?''

''கல்யாணத்துக்கு இப்போ என்ன டாடி அவசரம்.''

''நல்ல மாப்பிள்ளைம்மா! உனக்கும் காலா காலத்துல கல்யாணத்தை பண்ணி வைத்து விட்டால் நிம்மதியாயிடுவேன்!''

''கல்யாணம் எனக்கு... எப்போ... தேவைப்படுதோ சொல்றேன்! அப்போ செய்து வையுங்க!''

''கலெக்டர் நவநீத்துக்கு என்னம்மா சொல்லட்டும்? உன் போட்டோவைப் பார்த்தே ரொம்பப் பிடிச்சிப் போனதா சொன்னவர்!''

மகாலஷ்மி எதுவும் பேசாமல் டைனிங் நாற்காலியில் போய் அமர்ந்தாள்.

அம்மா பூரியை பரிமாற... அவள் உண்டாள்.

''பதில் சொல்லலையே, மகா?''

''என்ன அவசரம்? பார்க்கலாம்!'' என்று கூற நாகேந்திரன் கப்சிப் ஆனார்.

அனைவரும் உண்டு முடித்துக் கிளம்பும்போது... தாய், தகப்பனின் காலில் விழுந்து வணங்க... சாரதா ஆனந்தத்தில் அழுதே விட்டாள்.

அருணின் காலில் விழுந்து வணங்கியவளை... தூக்கி அணைத்துக் கொண்டான். நெற்றியில் முத்தமிட்டு ''வாழ்த்துக்கள், மகா! உன்னைப் பார்க்க ஆச்சரியமாகவும் இருக்கு! ஆனந்தமாகவும் இருக்கு! டாடி... மகா நம்ம கவலையெல்லாம் போக்கிடுவாள்! கல்லூரி நிர்வாகத்தை நன்றாகவே செய்வாள் என்று நம்பிக்கை பிறக்கிறது!

உங்களுக்கு கொஞ்சம் கூடப் பயமே வேண்டாம்!'' நம்பிக்கையோடு சொன்னான்.

''அருண்... உனக்கு ஒண்ணும் வருத்தமில்லையே?'' என்று நாகேந்திரன் கேட்க...

''எதுக்கு டாடி?''

''உன் தங்கைக்கு கல்லூரி நிர்வாகத்தைக் கொடுப்பதில்!''

''எதுக்கு வருத்தம்?''

''நீ பள்ளியை நிர்வகிக்கிறாய்! உன்னை விட சின்னவள் கல்லூரியை நிர்வகிக்கப் போறாளேன்னு!''

''என் உடன் பிறந்த தங்கை, டாடி! எனக்கு நிரம்ப சந்தோசமே!''

''நிஜமாத்தான் சொல்றீயா?''

''என் உள் மனசுல இருந்து வர உண்மையான வார்த்தைகள், டாடி! சொந்த தங்கையின் உயர்வில் எந்த அண்ணனாவது பொறாமைக் கொள்வானா? அப்படி பொறாமைப் படுபவர்கள் நூற்றில் பத்துப் பேர் இருக்கலாம்! அவர்களின் லிஸ்டில் என்னைச் சேர்த்து விடாதீர்கள்! ப்ளீஸ்...'' அருண் வருத்தத்தோடு சொல்ல...

''நிஜமாகவே இப்படி ஒரு நல்ல மகனை பெற்றதற்கு பெருமைப் படுகிறேன், அருண்! நீ ஒரு அதிசயப் பிறவிதான்!''

கார் சென்று கல்லூரிக்குள் நிற்க... அருணும், மகாவும் முன்புறமிருந்து இறங்க... நாகேந்திரன் பின் சீட்டிலிருந்து வெளிப்பட்டார்.

இவற்றையெல்லாம் தூரத்தில் இருந்து கண்ட ஆதித்யனின் மனமும், முகமும் ஒரு மாதிரி ஆனது.



நேற்றைய வாலுத்தனம்... குழந்தைத் தனம்... கிறுக்குத் தனம் அனைத்தும் இல்லாத மகாலஷ்மியைப் பார்க்க ஆதித்யனுக்கு ஆச்சரியம்!

அடுத்ததாய், என்ன விஷயமாய் வந்திருப்பாள்? நேற்று அவ்வாறு பேசியதற்காக, அலட்சியப்படுத்தியதற்காக... நாகேந்திரனை என்னிடம் சண்டையிட அழைத்து வருகிறாளா?

அல்லது, என்னைக் கல்லூரி வேலையிலிருந்து தூக்கச் சொல்ல... அவரை அழைத்து வருகிறாளா?

அல்லது, கல்லூரியில் ஏதாவது பொறுப்பினை எடுத்துக் கொள்ள வருகிறாளா?

ஆதித்யனின் மனம் ஏதேதோ கேள்விகளை கேட்டு... அதற்கு விடை தெரியாமல் முழித்தது.

ஆனாலும் நேற்று அத்தனைக் கடுமையாக பேசியிருக்கக் கூடாது என்று தோன்றியது.

அவனின் கண்ணோடு கண் வைத்து நோக்கி... 'காதல் பிறக்குதா என்று பார்க்கலாம்' என்று சட்டென்று கூறியது தான்... அவனை அந்த அளவு கோபம் கொள்ளச் செய்தது.

யாராவது புதிதாய் பார்த்த ஆணிடம் இவ்வாறெல்லாம் பேசுவார்களா? சீண்டி விளையாடுவார்களா? காதல்... ஊதல் என்று பிதற்றுவார்களா?

பெண்ணினத்திற்கே உரிய அச்சமும், நாணமும் அவளிடம் இல்லாமல் போனதேன்?

சாரதா அம்மாள் எத்தனை மென்மையானவர்!

எத்தனை இனிமையானவர்! பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் இரு கண்களாய் போற்றுகிறவர்!

அவருக்குப் பிறந்த மகள் இப்படியெல்லாம் தறுதலையாய் உளறுவாளா?

பெண்ணினத்திற்கே அவமானமல்லவா?

ராஜேஸ்வரி அம்மாளும், சாரதா அம்மாளும் அதே பெண்ணினம் தானே! அந்த இனத்தில் இத்தனை இழிவான பெண்ணா?

இப்படிப்பட்ட எண்ணத்தால் ஏற்பட்ட சிந்தனையின் பாதிப்பில் அவனின் மனம் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

நாகேந்திரனும், மகாலட்சுமியும் கான்பரண்ஸ் ஹாலுக்குச் சென்றனர்.

அருண் அறிக்கை எழுதி அனுப்பி... அத்தனைப் பேரையும் கான்பரண்ஸ் ஹாலுக்கு வரச் சொன்னான்.

கொஞ்ச நேரத்தில் அத்தனை புரொபசர்களும் கூடி விட்டனர்.

ஆதித்யன் முன் வரிசையில் அமர்ந்திருந்தான்.

நாகேந்திரன் எழுந்து பேச ஆரம்பித்தார்.

"டியர் புரொபசர்ஸ்... குட்மார்னிங்! இவள் என் பெண் மகாலஷ்மி! பெரும்பாலும் இவளை எல்லோருக்குமே தெரியாது! வெளிநாட்டில் மருத்துவம் படித்தாள். மருத்துவம் படித்து முடித்த கையோடு... அங்கேயே இந்த ஆறு மாதங்களாய் பணி புரிந்து வந்தாள்!...

"நேற்று நம் கல்லூரிக்கு வந்தவளுக்கு... நம் கல்லூரி ரொம்பவே பிடித்து விட்டது! அதன் விளைவு...? மகா இங்கேயே தங்கி... கல்லூரி நிர்வாகத்தை ஏற்று நடத்துவதாய் கூறினாள். முதலில் அவளிடம் நிர்வாகத்தை கொடுக்கத் தயங்கினேன்! நேற்றைய தயக்கம்... இன்று



அடியோடு நீங்கி விட்டது! எங்கள் மகா கல்லூரி நிர்வாகத்தை அக்கறையுடனும், பொறுப்புடனும் கவனித்துக் கொள்ளுவாள் என்ற நம்பிக்கை பிறந்து விட்டது!

"மகாலஷ்மியிடம் ஒப்படைக்கும் எந்த வேலைகளையும், பொறுப்புகளையும் திறம்பட செய்தே பழகியவள்! அவளுக்கு இயற்கையிலேயே அப்படிப்பட்ட சிறப்பான குணம் அமைந்து விட்டது. எந்த ஒரு செயலிலும்... தன்னை ஈடுபடுத்திக் கொண்டால்... அதனை செய்து நிறைவேற்றுவாளே தவிர, அதிலிருந்து சிறிதும் பின் வாங்க மாட்டாள்!...

"மகாலஷ்மியின் பணி சிறக்க... நீங்களெல்லாம் உங்களின் முழுமையான ஒத்துழைப்பை... அவளுக்கு நல்க வேண்டும். என்னிடம் காட்டிய அதே அன்பையும்... அக்கறையையும்... ஆதரவையும்... ஒற்றுமையையும்... இவளிடமும் காட்ட வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்!"

நாகேந்திரன் நீளமாய் பேசி... கையெடுத்துக் கும்பிட்டு... தன் இருக்கையில் அமர்ந்தார்.

ஆதித்யனின் முகம் களையிழந்து விட்டது. நாகேந்திரனின் மேல் கோபம் கோபமாய் வந்தது.

'இவ்வளவு பெரிய மனிதருக்கு கொஞ்சம் கூட அறிவில்லையே! தன்னுடைய கிறுக்கு பெண்ணிடம் இவ்வளவு பெரிய கல்லூரியை ஒப்படைக்கிறாரே! இனி கல்லூரி நிர்வாகம் 'குரங்கு கையில் கிடைத்த பூமாலை' யாகத்தான் ஆகப் போகிறது!

ஆதித்யன் வருந்தினான்.

மகாலஷ்மி கம்பீரமே உருவாய் எழுந்தாள்.

ஆதித்யனை விழிகளில் உள்வாங்கிக் கொண்டு... மைக்கருகே போனாள்.

"அனைத்து அன்புள்ளம் கொண்ட... பேராசிரியப் பெருமக்களுக்கு... எனது பணிவான, மரியாதை கலந்த வணக்கங்கள்! அப்பாவின் நம்பிக்கையை காப்பாற்றுவேன்! உங்களின் நலனுக்காகவும்... மாணவர்களின் வளர்ச்சிக்காகவும் பாடுபடுவேன்! ஏனென்றே தெரியவில்லை, நேற்று இங்கு வந்த என்னை... இந்த கல்லூரி கவர்ந்து விட்டது!"

மகாலஷ்மி பேச்சை நிறுத்திவிட்டு... ஆதியை உற்று நோக்கினாள். பின்னர் தொடர்ந்தாள்.

"அதனால், தாய் நாட்டிலேயே இருந்து... தாய் மண்ணில் உழைக்கக் காத்திருக்கிறேன்! எனக்கு உதவிக்கரம் நீட்ட அன்புடன் வேண்டுகிறேன்!"

கைத்தட்டல் பலமாய் இருந்தது. ஆதியே அவளின் பேச்சை ரசித்து... கைத்தட்டினான்.

"நான் அதிகம் பேச விரும்பவில்லை, ப்ரியமானவர்களே! பேச்சினை... எனது செயலில் காட்டவே விரும்புகிறேன்! உங்களின் குறை, நிறைகளை என்னிடம் தயக்கமில்லாமல், பயமில்லாமல் கூறலாம்! இன்னும் கல்லூரியில் என்ன மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று... நீங்கள் எனக்கு அறிவுறுத்தலாம்! உங்களின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்... எனது பேச்சினை முடித்து அமருகிறேன்!"

தாமரை மொட்டாய் கைகுவித்து... மகாலஷ்மி இருப்பிடம் போய் அமர்ந்தாள்.

அடுத்ததாய் அருண் பேசினான்.



"தங்களின் சிறப்பான சேவையால்... ஆதரவால்... கல்லூரி இன்று ஆலமரமாய் தழைத்து ஓங்கி, உயர்ந்து வளர்ந்திருக்கிறது. தங்களின் ஆதரவை, அன்பை... எனது தங்கைக்கு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்!"

அனைத்து பேராசிரியப் பெருமக்களும் எழுந்து கலைந்து போனார்கள்.

"ஆதி... நில்லுப்பா!" என்று நாகேந்திரன் அழைக்க... ஆதித்யன் நின்றான்.

அவனையும் அழைத்துக் கொண்டு தாளாளர் என்ற அறைக்குச் சென்றனர்.

நாகேந்திரன்... அறையில் இருந்த சாமிப்படம் முன்பு... கற்பூரத்தை ஏற்றிக் காட்டினார்.

மகாலஷ்மி அங்கிருந்த குத்து விளக்கை ஏற்றினாள்.

"வாம்மா... வந்து நல்ல நேரம் முடிவதற்குள் உட்காருடா, மகாம்மா!"

மகாலஷ்மியை பிடித்து சீட்டில் அமர வைத்தார். அவளைப் பார்த்துச் சொன்னார்.

"ஆதித்யன் ரொம்ப நல்லவர்ம்மா! கல்லூரி பற்றின அனைத்து விபரங்களும், தகவல்களும் தெரியும்! நிர்வாகத்தில் எனக்கு நிறையவே உதவுவார்! தம்பி... என் பெண்ணுக்கு நிர்வாகம் பற்றி தெரியாதுப்பா! கொஞ்சம் கூடவே இருந்து சொல்லிக் கொடுப்பா! இவளைப் பக்கத்தில் இருந்து பார்த்துக்கோ!"

"சரிங்க, சார்!" என்றான் உணர்ச்சியே இல்லாத குரலில்.

"அம்மா மகா... தம்பி நல்ல அறிவுள்ளவர்! பெரிய திறமைசாலி! ஆதி... தமிழ் இலக்கியம் நடத்தினால்... நாள்

பூராவும் கேட்டுட்டே இருந்தாலும் அலுக்காது! சலிக்காது! அவ்வளவு அருமையாய் நடத்துவார்! தெரியுமா?''

நாகேந்திரன் ஆதியைப் பற்றி பெருமையாய் கூறி... ஆசையாய் பார்த்தார்.

''எனக்கு ஒன்றும் அவ்வளவு திறமைசாலியா தெரியலையே! நேற்று பாடம் நடத்தினார். அவரோட அறை ஜன்னலருகே... வெளியே நின்று பாடம் நடத்தியதைக் கேட்டேன்! ஒரே அறுவை! தாங்கவே முடியலை!''

மகாலஷ்மி கிண்டலாய் கூறியவுடன்... ஆதியின் முகம்... அவமானத்தில் கறுத்துப் போனது.

''ஏய் மகா... எதெதுக்கு விளையாடுவதுன்னேத் தெரியாதா?'' அதட்டினார். பின்னர் ஆதியைப் பார்த்துச் சொன்னார்.

''தம்பி... தப்பா நினைச்சிக்காதீங்க! சின்ன வயசுல இருந்தே செல்லம் குடுத்து வளர்த்ததன் விளைவுதான்... இந்த அதிகப்படியான வாயாடித்தனம்! சரியான குறும்புக்காரி! வாலுத்தனம் அதிகம்! பொய்யை உண்மைப் போல சொல்லுவா! நிஜத்தை பொய்யைப் போல கூறுவா! சில சமயம் நானே ஏமாந்துடுவேன்! இவகிட்ட கொஞ்சம் ஜாக்கிரதையாவே இருங்க!''

நாகேந்திரன் எச்சரிக்கை விடுத்தார்.

''இப்படித்தான் உங்கள் மகளைப் பற்றி தப்பும் தவறுமா சொல்வதா, டாடி?'' மகாலஷ்மி சிணுங்கினாள்.

''மகா... உன் குறும்புத்தனத்தையெல்லாம் மூட்டைக் கட்டி வச்சிட்டு... கல்லூரி நிர்வாகத்தை நல்லபடியாக கவனி! ஆதி சார்... நான் பக்கத்து காம்பவுண்ட்லதான் இருப்பேன்! அடிக்கடி உங்களை வந்து காப்பாத்தறேன்! கவலைப்படாதீங்க!'' அருண் கூறிச் சிரித்தான்.



''சரி... எனக்கு நேரமாகுதும்மா! அங்கே கல்யாணத்துல எனக்காக எல்லோரும் காத்திருப்பாங்க! நான் போய் தான் தாலி எடுத்துக் கொடுக்கணும்! வரட்டுமா அருண்! வரட்டுமா மகாலஷ்மி! பாத்துக்கப்பா ஆதி!''

அருண் ஆதங்கத்துடன் கூறினான்.

''டாடி... ஊர்ல இருக்கறவங்களுக்கெல்லாம் தாலி எடுத்துக் கொடுத்து... கல்யாணம் பண்ணி வையுங்க! கல்யாண வயசுல நாங்க இரண்டு பேரும் வீட்ல இருப்பது தெரியலையா? எங்களுக்கும் வயசாகிட்டே போகுது, தெரியுமா? அதையும் கொஞ்சம் ஞாபகத்துல வச்சுக்கங்க!''

''படவா... இருபத்தேழு வயது ஒரு வயதா? கன்னத்தில் போட்டேன்னால்...!'' நாகேந்திரன் பொய்யான கோபத்தோடு கூற...

''என் வயது உங்களுக்கு இருக்கும்போது... நான் பிறந்துட்டதா சொல்லுவீங்களே! அப்போ உங்களுக்கு ஒரு சட்டம்! எனக்கு ஒரு சட்டமா? காலா காலத்துல பேரன் பேத்தியை பார்க்கணும்ன்னு உங்களுக்கு ஆசையில்லேன்னாலும்... அம்மாவுக்கு இருக்கில்லே!''

அருண் நீட்டி முழுக்கினான்... சின்ன சிரிப்போடு!

''ஏய் அண்ணா... உனக்குக் கல்யாணம் பண்ணி... குழந்தை பெத்துக்கணும்ன்னு ஆசையிருக்கும்போது... நடுவுல அம்மாவை ஏன் வம்புக்கும்... துணைக்கும் இழுக்கறே?''

மகாலஷ்மி இடைப்புக...

''இருடி... உன் வாய்க்கும், திமிருக்கும் எவனாவது ஒரு கேடிதான் வந்து வாய்ப்பான்!'' அருண் ரசிப்போடு கூறினான்.

"இருடா... உன் அகம்பாவத்துக்கும், ஆணவத்துக்கும் ஒரு அரக்கித்தான் வந்து வாய்ப்பா! டாடி... இவன் ஏதோ வெள்ளைத்தோல் உள்ள மிஸ் பின்னாடி அலையறதா கேள்வி! ஜாக்கிரதை! அப்புறமா ஏமாந்துடப் போறீங்க! சொல்லிட்டேன், ஆமாம்!"

மகாலஷ்மியின் பேச்சுக்கு நாகேந்திரன் சீரியஸாகி விட்டார்.

"அருண்... என்னப்பா? ஏதேதோ சொல்றா... உன் தங்கை!"

"மகா கிடக்கா, டாடி! ச்சும்மா... ரீல் விடறா! அதை யெல்லாம் நம்பிடாதீங்க! நீங்க கிளம்புங்க! உங்களுக்கு நேரமாகுதில்லையா?"

அவர்கள் மூவரும் பேசிக் கொள்வதை... ஆதி அதிசயமாய்... கண்கள் பளபளக்க நோக்கினான். அவனுக்கும் இதுபோல, தாய், தந்தை, சகோதரன், சகோதரி என்று இருந்திருந்தால் இவ்வாறுதான் நகைச்சுவையாய் பேசி, சிரித்து, சண்டையிட்டு வாழ்ந்து கொண்டிருப்பானோ?

'ச்சே... பாழாய் போன விதி இதற்கெல்லாம் அருகதை இல்லாமல்... அநாதையாய் ஆக்கி விட்டதே! என்னக் கொடுமை?'

ஆதியின் மனதில் ஆதங்கப் புயல் வீசியது.

"உங்க கிட்ட பேசிட்டு இருந்தால்... முகூர்த்த நேரம் முடிஞ்சுடும்! நான் வரேன்!"

நாகேந்திரன் மூவரையும் பார்த்து, சொல்லிவிட்டுச் சென்றார்.

"ஏய் கிறுக்கி... லூசே! இப்போ ஒரு உண்மையை சொல்லட்டுமா? நான் ஒரு மிஸ் பின்னாடி அலையறதா



சொன்னியே! அது நூற்றுக்கு நூறு நிஜம்! அவளை ஒரு தலையா நேசிக்கக் கூடச் செய்கிறேன்! டாடிகிட்ட சொல்லி... கூடிய சீக்கிரமே... அவளைக் கல்யாணம் பண்ணிக்கவும் போறேன்!...

"உனக்கும் எவனாவது அகப்படுவான்! அவனை லவ் பண்ணு! அடுத்தவங்களை இப்படி பொறாமையில் மாட்டி விடாதே! உனக்கு தில் இருந்தால்... என்னைப் போல லவ் பண்ணேன்! நான் தடுக்கவாப் போறேன்! அதை விட்டு... இந்த அழகான மூக்கை அடுததவங்க விஷயத்துல ஏன் நீட்டறே?"

அருண் அவள் மூக்கைப் பிடித்து செல்லமாய் ஆட்டினான்.

"டாடி... டாடி... இவனைப் பாருங்க! லவ் பண்றானாம் லவ்!" கத்தியவளின் வாயைப் பொத்தினான்.

"அறிவு கெட்ட முண்டமே! எவ்வளவு தூரம் போயிட்டார், டாடி! இப்போ கத்தினால்... அவர் காதுல விழுமா?"

மகாலஷ்மியின் கன்னத்தில் செல்லமாய் தட்டினான்.

"ஆதி சார்... டாடி வேற இதைக் கைகாட்டி... உங்களைப் பார்த்துக்கச் சொல்லிட்டார்! இதுகிட்ட மாட்டிட்டு எப்படி திண்டாடப் போறீங்களோ! நினைக்கவே பயமா இருக்கு, ஆதி சார்! இனி நீங்களாச்சி! இந்த மகாவாச்சி! நான் வருகிறேன்!"

அருண் சிரிப்போடு கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டான்.

தனித்து விடப்பட்ட ஆதித்யனும்... மகாலஷ்மியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

நேற்றைய சம்பவத்தை நினைவில் கொண்டு வந்தவன்... ஏதாவது இடக்கு மடக்காய் கேட்பாளோ என்று நினைத்து...

"நான் வருகிறேன்!" என்று கிளம்பப் போனவளை...

"என்ன சார் நழுவறீங்க? நேற்று கேள்வி கேட்ட... நீங்க கரஸ்பாண்டண்டா கேள்வி கேட்க என்றீர்கள்! இ... அந்தப் பதவிக்கு வந்துவிட்டேன்! நிறைய கே... கேட்கணும்! உட்காருங்க... அப்படி!" எதிரில் இருந்த இருக்கையை கைக்காட்டி சொன்னாள்.

ஆதி உட்காராமல் முறைத்துக் கொண்டு நின்றான். சண்டைக் கோழியாய்!

"நீங்க என்ன முறைத்தாலும் இன்று விடப் போவ... தில்லே! நீங்க சீண்டிய வேகத்தில்தானே... இன்று இந்த சீட்டில் அமர்ந்திருக்கிறேன். அதுக்கு நான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டாமா?

"யாருடைய நன்றியும் எனக்குத் தேவையில்லை!"

"ஆனாலும் நான் உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்! ரொம்பவே நன்றி, ஆதித்யா சார்!"

"சரி... இனியாவது நான் போகலாமா?"

"விடமாட்டேனே! இனி உங்களை விடவே மாட் டேனே!"

மகாலட்சுமி கூற...

ஆதித்யன் அதிர்ந்துதான் போனான்.

"அடிக்கடி இனி உங்களை தொல்லைப் பண்ணாமல் விடவே மாட்டேன்!"

இப்படி மகாலட்சுமி சொல்ல... கொஞ்சம் சாந்த மானான் பின்னர் கேட்டான்.

"ஏன் மேடம் படிச்ச படிப்புக்கு தகுந்த வேலையை செய்யாமல்... இப்படி அடுத்தவங்க உயிரை எடுக்க வந்திருக்கீங்களே! இது நியாயமா, மேடம்?"



"ஐயோடா...! நீங்கள் என்னை மேடம் என்றெல்லாம் கூப்பிட்டு... உங்களை சின்னவராகவும்... என்னை பெரிய வளாகவும் ஆக்க வேண்டாம்! சும்மா மகான்னே கூப் பிடுங்க!"

ஆதித்யன் அவளின் பேச்சைக் கேட்டு முழிக்க...

"அந்த உரிமை இங்கே உங்களுக்கு மட்டும் தான்!"

அவளின் பூடகமான பேச்சு அவனுக்கு எரிச்சலை வரவழைத்தது.

"உட்காருங்க, ஆதித்யன்! ப்ளீஸ்..."

அவன் அமர்ந்தான்.

"என்ன அது பார்வை... கொஞ்ச நேரத்துக்கு முன்பு! காந்தம் போல... மனசை இழுத்துக் கொள்வது போல இருந்தது. இப்படியெல்லாம் பார்த்தால்..."

மேலே சொல்லாமல் அவள் நிறுத்தி... அவன் விழி யோடு விழி வைத்து ஸ்பரிசிக்க... அந்த பார்வையின் வீச்சு அவனுக்கு என்னவோ போல இருந்தது. அந்தப் பார்வையின் தாக்கத்தை தாங்க முடியாமல் தலை குனிந்தான்.

"நேற்று ரொம்ப அருமையா பாடம் நடத்தினீங்க, சார்! அப்படியே மனசை அள்ளிடிச்சி! என் இதயத்தைக் கட்டிப் போட்டிடுச்சி! அதான் உணர்ச்சி வேகத்தில்... ஸ்டூடண் டுன்னு பொய் சொல்லி உள்ளே நுழைந்தேன்..."

"கொஞ்சம் விளையாடிப் பார்க்க... ஆர்வமும்... ஆசையும் வந்தது. அதுக்குள்ளே வெளியே அனுப்பிட் டீங்க. அப்புறமா தாளாளர் அறைக்கு அழைத்து என்ன பாடம் நடத்தறீங்க. அறுவை தாங்கலேன்னு எல்லாம் சத்தம் போட்டது சும்மாங்க!"

மலைப்பகுதி கூறி... ஆதித்யன் நம்ப முடியாமல் விழிக்க...

"இதெல்லாம் அக்கடி சின்ன குறைந்தது [illegible] முடியலீங்க? இந்த முதிப்பு ரொம்பவே நல்லாயிருந்த[illegible] இந்த அடிக்கடி கண்டிஷிடு பண்ணுங்க, ஆதி!"

அவள் கூறிவிட்டு... நகையுடன் சிரிக்க...

"நேத்து ராத்... முழுக்க தூங்கலையா என்ன? கண் எல்லாம் சிவந்து கிடக்கு! நான் குறை கூறியது நெஞ்சில் முள்ளா உறுத்திட்டே இருந்ததா...? ஸாரி, அதற்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன்!" ஆதி

அவன் வியப்புற்றான்.

நேற்று அந்த அளவு குறை கூறிவிட்டு... இப்போது இப்படிச் சொன்னால் வியப்புறாமல் என்ன செய்வேன்?

"என் மேடம்... நீங்க திரும்பவும் என்னோட விளையாடலையே? வம்பு பண்ணலையே?"

"ஆளைப் பாருங்க. நீங்க என் அத்தை மகன்! உங்ககிட்ட விளையாடறேன்!" கிண்டலாய் மகா சொல்ல...

"சரி.. வகுப்புக்கு நேரமாகிறது! நான் வரேன்!"

"என்ன அவசரம்? போகலாம்! நம்ம ஸ்டாப் பற்றிய முழு விபரமும் இந்த கம்ப்யூட்டர்ல இருக்கா?"

"ம்..."

கம்ப்யூட்டர் திரையை உயிர்ப்பித்தாள்.

அவன் பெயரும்... அவனைப் பற்றிய தகவல்களும் முதலிலேயே இருந்தது.

ஆதித்யன்.. 'சுபாஷ் சந்திர போஸ் அநாதை இல்லம்' என்ற அவனது விலாசம் இருக்க...



"என்ன சார் இது? சுபாஷ் சந்திரபோஸ் அநாதை இல்லம்னு அட்ரஸ் இருக்கு!"

"அங்கே இருந்துதான் வரேன்!"

"நம்ப முடியவில்லையே! அங்கேயிருந்தா வர்றீங்க? ஏன் அங்கிருந்து வரீங்க?"

அவன் சாதாரணமாய்த்தான் கேட்டாள். அதை அவன் அவமானமாய் உணர்ந்தான்.

"அநாதை... அநாதை இல்லத்திலிருந்து வராமல் என்ன செய்வாங்க? கேக்கறீங்களே கேள்வி!"

மீண்டும் ஆத்திரமாய் பேசினான்.

"அநாதை இல்லத்துல இருந்து வந்தால்... உங்களுக்கெல்லாம் கேவலமா? எங்களைப் பிடிக்காதா? இப்படித் தான் கேவலப்படுத்துவீங்களா? பணக்காரிகளுக்கே இருக்கற திமிரில் கொஞ்சம் கூட... குறைந்து இல்லையே! நாங்களேவா அநாதையா அலையணும்னு ஆசைப்பட்டோம்? கடவுள் எங்களையெல்லாம் இப்படி படைச்சி... உன்னை மாதிரி பணக்காரிகள்கிட்ட அவமானப்படணும்னு இப்படி ஆக்கியிருக்கான்! எல்லாம் எங்கள் தலையெழுத்து!...

"எங்களையெல்லாம் பெத்த புண்ணியவதிகள்... நாங்க பிறந்த நிமிடமே கொன்னு போட்டுட்டுப் போயிருக்கலாம்! திமிரில பெத்துட்டு... இப்படி அநாதையா தூக்கி வீசிட்டு போயிட்டாளுங்க! சமுதாயமும்... சமுதாயத்துல இருக்க மக்களும் எங்களை கேவலமா பார்க்குது... போதும்! என்னைப் பெத்தவளை மட்டும் கண்டேன்னா... கண்டதுண்டமா வெட்டி வீசிடுவேன்! இங்கே பாருங்க.. இது போலெல்லாம்... இப்படிக் கூப்பிட்டு வச்சி...

அவமானப் படுத்தறது... இதுவே முதலும் கடைசியுமா இருக்கட்டும். நான் பொல்லாதவன்! ஜாக்கிரதைம்மா!"

அவன் தாங்காத சினத்தோடு வெளியேறினான்.

ஒரு எரிமலை ஒன்று நெருப்புக் குழம்பை கக்கிவிட்டு சென்றது போல இருந்தது, மகாலட்சுமிக்கு!

இதயம் வெடிக்கக் கத்திவிட்டுப் போனவனைப் பார்க்க பாவமாக இருந்தது.

ஆதித்யனை அணைத்து... அப்படியே தன் நெஞ்சில் சாய்த்து... தட்டிக் கொடுக்க வேண்டும் போல இருந்தது, மகாலட்சுமிக்கு!

இப்படியெல்லாம் நினைப்பதற்கு ஒரு நாள் வேதனைப் பட்டு சீரழியப் போவது தெரியாமல்!



## 5

ஆதித்யன் இரண்டு நாட்களாய்... அவள் இருந்த திசையையே பாராமல் சென்று கொண்டிருந்தான்.

மகாலட்சுமி ஆள் விட்டு அழைத்து வரச் சொன்னால் 'கிளாஸ் இருக்கு! முடித்து விட்டு வருகிறேன்!' என்பான். பின்னர் போகமாட்டான்.

இப்படியே... அவளுக்கு கண்ணாமூச்சு காட்டிக் கொண்டிருந்தான்.

மூன்றாம் நாள் மாலை...

கல்லூரி விட்டதும் பின்புறம் இருந்த அழகிய பூங்காவிற்கு ஆதித்யன் சென்றான். அங்கே கிடந்த பெஞ்சில் அமர்ந்தான்.



'அநாதை' என்று அவமானப் படுத்தி விட்டதாய் நினைத்து... வெந்து... நொந்து... சோகமயமானான்.

உயிர் வாழவே பிடிக்கவில்லை!

ஒரு பெண்ணிடம் ஏற்பட்ட அவமானத்தை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை!

ஒரு துளி தூக்கமில்லை!

ஒரு பிடி உணவு தொண்டைக்குள் இறங்க மறுத்தது!

ராஜேஸ்வரி அம்மாள் கூட துருவித் துருவி கேட்டுப் பார்த்தார்.

ஆதித்யன் வாயையே திறக்கவில்லை!

தாய்ப்பாசம் தாராளமாய்... ஏராளமாய் ராஜேஸ்வரி அம்மாளிடமிருந்து கிடைக்கிறது!

அங்குள்ள பிள்ளைகளிடம்... சகோதர பாசம் தங்கு தடையில்லாமல் கிடைக்கிறது!

ஆனாலும்... ஆனாலும்... அதற்கெல்லாம் அப்பால்... ஏதோ... ஏதோ கிடைக்காதது போல வெறுமையாய்...

வளர்ந்து... பெரியவனாய்... நல்ல வேலையில்... இருப்பவனே... இப்படி நினைத்துக் குழம்பிக் கொண்டால்... இல்லத்தில் உள்ள பிஞ்சுகள் என்ன நினைத்து ஏங்குவார்கள். பாவமல்லவா...?

ச்சே... மனமே கலங்காதே! குழம்பாதே! ஆண்டவன் அநாதையாத்தானே படைத்தான்! ஆனால் சில பேரை அநாதையாகவும்... பார்வையில்லாமலும்... கை, கால் முடமாகவும் படைத்து பாழாக்கி விட்டானே! அவர்களுக்கு என் நிலைமை மேலல்லவா...!

என்றெல்லாம் நினைத்து தன் மனதை தேற்றிக் கொள்வான்.

அப்படிப்பட்ட ஆதித்யன் இப்போது கூனி... குறுகி... கூசி... உட்கார்ந்து விட்டான்.

ஆதித்யனுக்கு மன உளைச்சலிலும்... தூங்காததாலும்... சரியாய் சாப்பிடாததாலும்... அசதியாய் இருந்தது.

அந்த சிமெண்ட் பெஞ்சில் தலை வைத்துப் படுத்தான்.

அப்படியே தூங்கிப் போனான்.

அவன் பூங்காவிற்கு சென்றதை கவனித்த மகாலட்சுமி... அவன் அரை மணி நேரமாகியும் வராதது கண்டு... பூங்காவுக்குச் சென்றாள்.

அவன் அருகே போய் நின்று... அந்த அழகு முகத்தை ஆசை ஆசையாய் நோக்கினாள்.

மகாலட்சுமி வந்தது கூடத் தெரியாமல்... ஆதி நன்கு உறங்கிக் கொண்டிருந்தான். விட்டால் இரவு முழுக்க அங்கே உறங்கி விடுபவன் போல நிம்மதியாய்... ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

''ஹலோ ஆதி... ஆதித்யன் சார்...'' என்று மகாலட்சுமி சப்தமாய் அழைக்க... அவன் திடுக்கிட்டு எழுந்தான்.

''என்ன உடம்பு சரியில்லையா?'' என்று மகாலட்சுமி இயல்பாய் அவன் நெற்றியைத் தொட்டுப் பார்க்கவும்...

தொட்ட கையை பட்டென்று தட்டிவிட்டான். பின் கத்தினான்.

''நாகரீகம் தெரியாதா? வேற்று ஆணை தொடுவது ...வறு என்று தெரியாதா?''

''அன்றைய கோபம் இன்னும் போகல போல! என்னை ... தப்பா புரிஞ்சிட்டீங்க. ஆதி சார்! இவ்வளவு அழ... கம்பீரத்தோட இருக்கும் நீங்க எப்படி அநாதை



இல்லத்துல இருந்து வரீங்கன்னு ஆச்சரியத்தில் கேட்டேன்! பார்க்க பெரிய இடத்து பிள்ளைப் போல இருந்ததால் நம்பாமத்தான் திரும்பத் திரும்ப கேட்டேன்!...

''உங்களை அவமானப் படுத்தணும்ன்னு கேட்கலே, சார்! நிஜம் சார்! நான் விளையாட்டு காரியே தவிர... வினை காரியல்ல! ப்ளீஸ்... நான் உங்க மனசை புண்படுத்தியிருந்தால்... அதுக்காக வருந்துகிறேன்! ஸாரி... ஸாரி, ஆதித்யன்!''

அவள் கெஞ்சலோடு அருகில் அமர்ந்து சொன்னாள்.

''உங்களை மன்னிக்க நான் யார்? என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க! போங்க!'' சீறினான்.

''மன்னிப்பு கேட்கிறேனே... திரும்பவும் கோபம் போகலையா என்ன?'' கவலையாய் கேட்டாள்.

''அநாதையாய் பொறந்தது... என் தப்பில்லையே!''

மீண்டும் வெடித்தான்.

''ஸாரி... ஸாரி! நான் திரும்பத் திரும்ப கேட்டதுதான்... உங்க மனசை புண்ணாக்கியிருக்குன்னு புரிஞ்சிக்க முடியாது! இந்த ஒரு முறை மன்னிக்கக் கூடாதா, ஆதி சார்?'' நிஜமான வருத்தத்துடன் அவள் கேட்டாள்.

அவன் எதுவும் பேசாமல் எழுந்து விறுவிறுவென நடந்தான்.

''என்ன கிளம்பிட்டீங்க! மன்னிச்சிட்டுப் போங்க! உடம்பு சரியில்லன்னால் ஹாஸ்பிடல் வாங்க! நான் அங்கே தான் போறேன்!''

அவன் பின்னாடியே ஓடி வந்தாள்.

''ஆதி சார்... நான் இப்படி உங்க பின்னாடி ஓடி வந்தால்... ஏதாவது தப்பா எடுத்துக்கப் போறாங்க! கண்ட படி பேர் வச்சிடுவாங்க! ஒரு வார்த்தை மன்னிச்சேன்னு சொல்லிட்டுப் போங்க! உங்க நல்ல நட்பு எனக்கு வேணும், ஆதித்யன்! நாளைக்கு திரும்பவும் கம்ப ராமாயணம் நடத்தறீங்களா? உங்க கிளாஸுக்கு வரவா?''

மகாலட்சுமி சொல்லிவிட்டு மொட்டு விரிந்தாற் போல அழகாய் சிரிக்க...

ஆதியோ அவள் மேலான கோபம் குறையாமல்... பதிலே சொல்லாமல் நடந்தான்.

மகாவின் உள்ளம் கலங்கிய குட்டையாய் தத்தளித்தது.

அவன் முறைக்க முறைக்க... கோபப்பட கோபப்பட... அவன் மேல் அளவுக்கதிகமான ஈர்ப்பு வந்தது.

இல்லத்தில் ஆதித்யனைத் தேடி... அவனது அறைக்கு சென்றார், ராஜேஸ்வரி அம்மாள்.

''ஏம்பா லேட்? ஒரே டல்லா தெரியறையே, ஆதி! என் எதுனா உடம்பு சரியில்லையா, மகனே? உடம்புக்கு முடியலேன்னால்... மகாலஷ்மி ஹாஸ்பிட்டல் போயிட்டு வருவதுதானே! நம்ம மகா ஒரு ஊசி போட்டால்... எல்லாம் நோயும் பனியாய் பறந்து விடும்!''

இதுயென்ன எங்கு சென்றாலும் அவளும், அவளது பெயரும் என்னைத் துரத்துகிறது.

''ஆதி... நாகேந்திரன் சார் நம்ம இல்லத்துக்குப் பணம் தரும் டேட் இது! நாள் முழுக்க எனக்கும் போய் வாங்கிட்டு வர முடியாமல்... ஒரே வேலை! உன்னால் முடியுமா? கொஞ்சம் போயிட்டு வருகிறாயா, ஆதி?''

''...............''



''என்னப்பா உடம்புக்கு முடியலேன்னால் போக வேண்டாம்! நாளைக்கு போய் கொள்கிறேன்! நீ கொஞ்ச நேரம் படுத்து... ரெஸ்ட் எடு!''

''எனக்கு உடம்புக்கெல்லாம் எதுவும் இல்லையம்மா!''

''அப்போ மனசு எதுனா சரியில்லையா?''

அவன் பேசாமல் நின்றான்.

''முகமெல்லாம் வாட்டமா இருக்கே! கல்லூரியில என்ன நடந்தது?''

''நீங்களா ஏதாவது கற்பனைப் பண்ணி... ஒரு கதையை எழுதி முடித்து விடாதீங்கம்மா! நான் நல்லாயிருக்கேன்! நான் போயிட்டு வருகிறேன்! வயதான காலத்தில் நாளைக்கு நீங்க ஏன் அலைந்து கொண்டு...?''

ஆதித்யன் சட்டையை மாட்டிக் கொண்டு... தனது டூவீலரை ஸ்டார்ட் செய்து கிளம்பினான்.

வாசலில் கூர்க்கா கதவை திறந்துவிட...

மாலை நேரம் என்பதால் கதவு திறந்தே இருந்தது.

நாகரீகம் கருதி அழைப்பு மணியை அழுத்த... வேலைக்காரி வந்து வரவேற்றாள்.

''நீங்களா...? வாங்க ஐயா! உட்காருங்க! பெரியய்யா, பெரியம்மா, சின்னய்யா மூன்று பேரும் கோவிலுக்குப் போயிட்டாங்க. மகா அம்மா இப்போதான் வந்தாங்க. டிபன் சாப்பிட்டாங்க! ஆஸ்பத்திரி புறப்பட ட்ரஸ் சேன்ஜ் பண்ண மாடிக்குப் போயிருக்காங்க! என்னய்யா? என்ன விஷயம்?''

''வந்து... இல்லத்துக்கு சார் பணம் தரும் நாள். அம்மாவுக்கு வர முடியலை. அதான் நான் அவரைப் பார்த்து

வாங்கிட்டுப் போகலாம்ன்னு வந்தேன். சரி வரேன்!'' என்று ஏமாற்றத்தோடு எழுந்தான்.

''ஒரு வேளை சின்னம்மா கிட்ட கொடுத்துட்டுக் கூட போயிருக்கலாம். ஐயா! சின்னம்மாவை கூட்டிட்டு வரட்டுமா?''

''ஐயோ வேண்டாம்! கொடுத்தாங்களான்னு மட்டும் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு வாங்க!''

வேலைக்காரி மாடியேறிப் போய் மகாலஷ்மியின் அறைக் கதவை தட்ட... மகா வந்து திறந்தாள்.

''சின்னம்மா... இல்லத்தில் இருந்து ஆதி தம்பி வந்திருக்கு!''

''அப்படியா...?'' மகாலஷ்மி ஆச்சரியப்பட்டாள்.

'ஒருவேளை கல்லூரியில் என்னை அவமானப் படுத்தியதற்கு மன்னிப்பு கேட்க வந்திருப்பாரோ!'

மகாலஷ்மியின் உள்ளம் பூரித்தது.

'நாகரீகம் தெரியாதவன்' என்று அவரைப் போய் இவ்வளவு நேரம் திட்டித் தீர்த்தோமே! ச்சே!' தன்னையே நொந்து கொண்டாள்.

''காபி கொடுத்தாயா? எதற்கு வந்தார் என்று கேட்டாயா? முதலில் உட்கார வைத்தாயா?''

மகாலஷ்மி பரபரத்தாள்.

''ஐயாவுக்கு காபி பிடிக்காது!''

''காபி பிடிக்கலன்னால்... ஏதாவது ஆப்பிள், ஆரஞ்சு சாறு கொடுக்கலாமே! என்ன ராதா நீ?'' என்று கோபப் பட்டாள்.

''ஆதி... இங்கே வந்தால் எத்தனை வற்புறுத்தினாலும் எதுவும் குடிக்கவோ, சாப்பிடவோ மாட்டார்ம்மா!''



''ஓ.கே.! எதற்கு வந்தாராம்? விஷயம் ஏதாவது சொன்னாரா?''

''இந்த தேதியானால் நம்ம பெரியய்யா... இல்லத்துக்கு ஒரு லட்ச ரூபாய் தருவார்ம்மா! அதை வாங்கிட்டுப் போகத்தான் வந்திருக்கார்! ஐயா எதுனா கொடுத்துட்டுப் போனாராம்மா? ஆதி ஐயா கேட்டுட்டு வரச் சொன்னாங்க!''

வேலைக்காரி சொல்ல...

நன்கு ஊதிய பலூனில் ஊதுவத்தியை வைத்தது போலானது, மகாலட்சுமிக்கு!

கோபம் கோபமாய் வந்தது.

''ஏய் ராதா... டாடிக்கு அறிவு என்பதே இல்லையா? முழுசா தூக்கி மாசமானால் லட்ச ரூபாய் கொடுக்கிறாரே! நானும் விபரம் தெரிந்த நாளில் இருந்து இந்தக் கூத்தைப் பார்க்கிறேன்! கொடுக்கறதை இவரும் நிறுத்த மாட்டார் போல! வாங்கறதை அவர்களும் நிறுத்த மாட்டார்கள் போல! ஒரு லட்ச ரூபாயோட மதிப்பு தெரியுமா, அவர்களுக்கு? அவர்களுக்கு அறிவு என்பதே இல்லையா? இந்த டாடி ஏதாவது புத்தி பிசகியிருக்கிறாரா?''

மகாலஷ்மி வேண்டுமென்றே... ஆதித்யாவின் காதில் விழும் வண்ணம் கத்தினாள்.

ஆதித்யனுக்கு அவமானமாய் இருந்தது.

ஆதியின் ரத்தம் சூடேறி... கண்கள் சிவந்து... ஆத்திரத்தோடு... அங்கிருந்து வெளியேறினான்.

ஆதியின் கோபம்... அவனுடைய டூ வீலர் கிளம்பிய சத்தத்திலிருந்தே தெரிந்தது, மகாலஷ்மிக்கு!

சும்மா அவனை சீண்டிவிட்டாளே தவிர, அவளின் மனம்... அடுத்த நொடியே கலங்கியது.

'ஏற்கனவே என்னைப் பிடிக்காமல் காத தூரம் ஓடுபவரை... இன்னும் அவமானப்படுத்தி விட்டேனே! பாழாய்ப் போன கோபம் ஏன் சுர்ரென்று வந்தது. அவரைச் சீண்டி, கோபப்படுத்திப் பார்ப்பதில் எனக்கு என்ன லாபம்?'

'ஏற்கனவே அநாதையென்று அவமானப் படுத்தி விட்டதாய் தவறாக நினைத்துக் கொண்டு... என் மீது தீராத ஆத்திரத்துடன் இருக்கிறார். ஏற்கனவே எரிகிற தீயில்... மேலும் பெட்ரோல் ஊற்றிய கணக்காய் செய்து விட்டானே!'

ஆதித்யன் கோபித்துக் கொண்டு சென்றதைத் தாங்க முடியாமல் தவித்தாள்.

'என்ன செய்வது?'

'எவ்வாறு அவரின் கோபத்தை, ஆத்திரத்தை தீர்ப்பது?'

'பின்னாலேயே ஓடிப்போய் மன்னிப்பு கேட்கலாமா? அல்லது போனில் மன்னிப்பு கேட்கலாமா?'

'ஒரு மன்னிப்பு கேட்பதால் அவர் கோபம் சரியாகுமா?' மனம் கேட்டது.

'எப்படி சரியாகும்?' மனம் பதில் அளித்தது.

'பின்னே என்ன செய்யலாம் எனதருமை மனமே?'

'அவன் எதற்காக வந்தான்?'

'இல்லத்து நன்கொடை பணத்திற்காக!'

'அதை நீயே எடுத்துப் போய் கொடுத்தால்... அவன் மனம் மாறாதா? சாந்தப்படாதா?'

'நீ சொல்வது கரெக்ட்தான், மனமே! உன் ஐடியாவிற்கு நன்றி, மனமே!'



அவள் ஓடினாள். பீரோவைத் திறந்து இரண்டு லட்சமாய் எடுத்து ஹேண்ட் பேக்கில் வைத்து பத்திரப் படுத்தினாள்.

ஹாலில் உள்ள கண்ணாடியில்... தன் உருவத்தை திரும்பித் திரும்பிப் பார்த்து... திருப்தியுற்றவளாய்... காரைக் கிளப்பிக் கொண்டு இல்லத்திற்கு வந்தாள்.

இளமஞ்சள் வண்ண சுடிதாரில் கருப்பு பூக்கள் கொள்ளை அழகைக் கொடுக்க... அது அவளின் தோற ரத்தை வசீகரப்படுத்தியது. காதோரம் சொருகியிருந்த மஞ்சள் ரோஜா அவளுக்கு இன்னும் கூடுதல் அழகைக் கொடுத்தது.

காரை விட்டு இறங்கி ராஜேஸ்வரி அம்மாளை நோக்கிச் சென்றாள்.

ராஜேஸ்வரி அம்மாளோ இவளைக் கண்டதும் ஓடி வந்து அணைத்து உச்சியில் முத்தமிட்டாள்.

''நல்லாயிருக்கியா, மகா? உன்னைப் பார்த்து ரொம்ப நாளானாப் போல இருக்கே! என்ன ஒரு அழகு! என்ன ஒரு வசீகரம்! என்ன ஒரு கம்பீரம்! ஆதி பய சொன்னான். நீ வெளிநாட்டிற்குப் போகாமல் கல்லூரி நிர்வாகத்தையும், மருத்துவ நிர்வாகத்தையும் கையில் எடுத்துத் திறம்பட செய்வதாய்! ரொம்ப சந்தோசமா இருக்கும்மா! உங்கப்பா நீயில்லாமல் எவ்வளவு கஷ்டப்பட்டார்! இனிமேல் இங்கேதானே இருப்பாய்?''

''ம்...'' என்று தலையாட்டினாள்.

''உன்னைப் பார்க்க பங்களாவிற்கு வரலாம் என்று நினைத்தேன்! நேரமே கிடைக்கலம்மா! ஆமாம் இங்கே யெல்லாம் வரமாட்டாயே! எப்படி இங்கே வந்தாய்?

ஆமாம்... எங்கள் ஆதியை அங்கே அனுப்பினேனே, அவன் வரவில்லையா?''

''இல்லையே, மேடம்!''

''உங்க பங்களாவிற்குதானே போறதாக் கிளம்பினான். அப்போ அவன் அங்கே வரவில்லையென்றால்... எங்கேப் போய் இருப்பான்?'' ராஜேஸ்வரி அம்மாள் கேட்க...

''அவரை எதுக்கும் கவனிங்க, மேடம்! எதுனா தப்பான வழிக்கு போயிடப் போறார்!'' அவளின் இயல்பான குறும்பு எட்டிப் பார்க்க... சொல்லிவிட்டுப் புன்னகைத்தாள்.

''எங்க ஆதியைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? கட்டித் தங்கம்! நீ தப்பு செய்யச் சொன்னாலும் செய்ய மாட்டான். அப்படிப்பட்ட பிள்ளையை சந்தேகப் பட்டாயே, மகா?''

''கட்டித் தங்கமா...? அப்போ எவ்வளவு தங்கம் விலை ஏறினாலும்... உங்களுக்குக் கவலையே இல்லை. அப்படித்தானே? வேண்டும் எனும்போது கொஞ்சம் உடைத்துப் போய் வித்து காசாக்கிக்கலாம். இல்லையா, மேடம்?''

மகாலஷ்மி சொல்லிவிட்டு மந்தகாசமாய் சிரித்தாள்.

''சரியான போக்கிரியாய் இருப்பாய் போல!'' அவளின் முன் உச்சியில் பறந்த அழகான கேசத்தை தள்ளி விட்டார், ராஜேஸ்வரி அம்மாள்.

''டாடி... என்னிடம் கொடுத்து... ஹாஸ்பிட்டல் போகும்போது... உங்களிடம் கொடுத்துவிட்டுப் போகச் சொன்னார், மேடம்!''

இரண்டு லட்சத்தை நீட்ட....



''அப்பா ஒரு லட்சம்தான் தந்தார். நான் அவரிடம் சண்டைக்குப் போயிட்டேன்! நூற்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் இருப்பதாய் சொல்கிறீர்கள்! இதெல்லாம் எந்த மூலைக்கு பத்தும் என்று நான் கேட்க... மறு பேச்சி பேசாமல் கொடுத்துவிட்டார், மேடம்!''

''ரொம்ப நன்றி, மகாம்மா!''

''ஐய்யோ... நன்றியெல்லாம் எதுக்கு மேடம்?'' மகாலஷ்மி கோபமாய் கேட்டாள்.

''நன்றி சொல்லி என்னை அவமானப் படுத்தறீங்களே! அந்நியப்படுத்தறீங்களே!''

''அப்படியே நீ குணத்துல நாகேந்திரன் சார்தாம்மா!'' ராஜேஸ்வரி அம்மாள் தழுதழுக்கக் கூறினாள்.

ஆங்காங்கே வராண்டாவின் வெளிச்சத்தில் படிக்கும் பிள்ளைகளைப் பார்த்தாள்.

அப்போது ஆதியின் வண்டி உள்ளே நுழைந்தது. வண்டியை நிறுத்தி விட்டு... மகாலஷ்மியை ஆச்சரியமாய் நோக்கியவாறே... அருகில் வந்தான்.

''என்ன ஆதி சார்... பொறுப்பு இருக்க வேண்டாம்? மேடம் உங்களை என் வீட்டுக்கு அனுப்பினாரே... அங்கே வராமல் எங்கேப் போய் சுற்றிவிட்டு வருகிறீர்கள்? குழந்தைகள் விஷயமாச்சே! கொஞ்சம் பொறுப்போடும், கடமை உணர்வோடும் நடந்துக்க வேண்டாமா?''

மகாலஷ்மி மர்ம புன்னகையோடே கேட்டாள்.

ராஜேஸ்வரி அம்மாளின் கையில் பணத்தைப் பார்த்தவன் புரிந்து கொண்டான்.

அவன் அங்கேப் போனதையும், அவனை அவள் அவமானப்படுத்தியதையும் மறைத்துவிட்டு... நல்லப் பிள்ளையாய் பணத்தோடு வந்திருக்கிறாள்.

கள்ளி!

''என்னப்பா... மகா வீட்டுக்குப் போகாமல் எங்கேப் போய் விட்டு வருகிறாய்?''

''அங்கேத்தான் போனேன்மா! ஆனால் வழியில் ஒரு பழைய தோழனைக் கண்டு விட்டேன்! அவன் என்னைப் பிடித்துக் கொண்டான். பேச்சு சுவாரசியத்தில் நான் பண மேட்டரை மறந்து... அவனோடு ஹோட்டலுக்குப் போய் உணவு உண்டு விட்டு... பண விஷயம் விளக்கு வைத்துப் போக வேண்டாம் என்று திரும்பி விட்டேன்!''

ஆதித்யன் உளறி வைத்தான்.

''ரெண்டு லட்சமா மகா கொண்டு வந்திருக்காப்பா! இனி மாசமானால் ரெண்டு லட்சமாய் தருவதாய் நாகேந்திரனே ஒத்துட்டாராம்! பணம் போதாமல்... ஊட்டச் சத்து மிகுந்த உணவு இல்லாமல்... எங்கள் குழந்தைகள் வாடித்தான் போய் உள்ளனர். இனி நல்ல ஊட்டச் சத்தோடான உணவை... எங்கள் குழந்தைகள் சாப்பிடலாம்!''

ராஜேஸ்வரி சொல்ல... பெருமையோடு அவளை ஆதி நோக்கினான்.

'அப்போ வீட்டுல கத்தினதெல்லாம் பொய்யாடி?' என்பது போல கேள்வியாய் ஒரு பார்வையை அவள் மேல் வீசினான்.

மகா மென்மையாய் புன்னகைத்து... ராஜேஸ்வரி அம்மாள் அறியாமல்... அவனைப் பார்த்து கிறக்கத்தோடு கண் சிமிட்ட... தாங்க முடியாமல் தலை குனிந்தான்.

''மேடம் இவங்கயெல்லாம் எங்க படிக்கறாங்க?''

''எல்லாம் கவர்ன்மெண்ட் ஸ்கூல்லதான், மகா!''



''இந்த டாடிக்கு அறிவே இருக்காதா? இந்தப் பிள்ளைகளை நம்ம ஸ்கூல்ல சேர்த்து படிக்க வைக்கணும்னு எண்ணமே வராதா?''

''நாகேந்திரன் சார்... இப்போ செய்யறதே அதிகம் மகாலஷ்மி!''

''சும்மா இருங்க, மேடம்! அவர் பெத்தது ரெண்டு பிள்ளைகள்! எதுக்காக கோடி கோடியா சேர்க்கிறார்? கோடியைச் சேர்த்து என்ன புண்ணியம்?''

''அப்படிச் சொல்லாதேம்மா! அப்பா ஏழை, எளியவர்களுக்காக எவ்வளவோ செய்கிறார். எங்க ஆசிரமத்துக்கு மாசமானால் லட்ச ரூபாயை நீ பொறந்ததிலே இருந்து கொடுக்கிறார், தெரியுமா?''

''ஓ.கே.! அப்பா நல்லவர்தான்! பெரிய வல்லவர்தான்! ஒத்துக்கிறேன் மேடம்! அடுத்த கல்வியாண்டிலிருந்து இந்த குழந்தைகள் அனைத்தும்... நம்ம ஸ்கூல்ல படிப்பாங்க! கட்டாயமாக!'' என்று நிறுத்தியவள், சொன்னாள்.

''ஒரு நாளைக்கு பகலில் வந்து ஆசிரமத்தைப் பார்க்கணும், மேடம்!''

''தாராளமா வாம்மா! வந்துப் பார்! ஒண்ணும் பிரம்மாண்டமான கட்டிடம் கிடையாது. ஓடும், கூரையும் வேய்ந்த கட்டிடம்தான்! மழைக்காலம்... இப்போ இல்லையா? இந்த நேரம் பிள்ளைகள் குளிரில் ரொம்பவே கஷ்டப்படறாங்க, மகா!'' என்று வருத்தமாய் ராஜேஸ்வரி அம்மாள் சொல்ல.

''கட்டாயம் பகலில் வந்து பார்க்கிறேன், மேடம்! நான் கிளம்பட்டுமா?'' என்று கேட்டாள்.

ஆதி சற்று தள்ளி நின்றிருந்தான்.

அருகில் சென்றவள் ''ஏற்சனவே டல்லாயிருக்கீங்க; சாப்பிட்டேன்னு பொய் வேற சொல்லிட்டீங்க? அதுக்காக பட்டினியாய் படுத்துக்காதீங்க! என்னால் தாங்க முடியாது!''

அவன் அப்பாவியாய் பார்க்க...

''நான் ஏதோ சொன்னதால்தான்... பட்டினியாய் படுத்துட்டதாய்... குற்ற உணர்வில்... என் மனம் என்னைக் கூறுப் போட்டுடும்! அதான் என்னால் தாங்க முடியாதுன்னு சொன்னேன்! நல்லாவே மேடத்துகிட்ட பொய்யை உண்மையாய் வர்ணித்து தப்பிச்சிட்டீங்க! அழகான பொய்கள்! பாராட்டுக்கள்!''

மகாலஷ்மி கிளம்ப... கௌசல்யா கொழு கொழுவென்று கை, கால் முளைத்த ரோஜாவாய்... அவ்விடம் ஓடி வந்தாள்.

''வாவ்... வாட் எ பியூட்டிபுல்!'' என்று குழந்தையை தூக்கிக் கொண்டாள்.

''ஏய்... நீ ரொம்ப அழகா இருக்கேயே! ஆமாம் உன் பேர் என்ன?''

கௌசல்யாவோ பதில் கூறாமல்...

''என்னை விடுங்க... விடுங்க... என் டாடி வந்துட்டார்... டாடிகிட்ட போகணும்!'' என்று அழ...

''டாடியா? யார் உங்க டாடி?'' என்று குழந்தையைக் கொஞ்சலோடு கேட்க...

''அதோ...'' என்று ஆதித்யனைக் கைகாட்ட...

இறக்கையை இழந்த தேனியாய் துடித்து விட்டாள்.



யாரோ ஒரு கூடை செந்தணலைத் தன் தலையில் கொட்டிய கணக்காய் துடிதுடித்து விட்டாள், மகாலட்சுமி!

# 6



'அந்த குழந்தை ஆதி சாருடையதா?' என்று ராஜேஸ்வரி அம்மாவையோ... அவனையோக் கேட்டால் எதுவும் தவறாய் எண்ணிக் கொள்வார்களோ... எடுத்துக் கொள்வார்களோ என்று... எதுவும் கேளாமலேயே திரும்பி விட்டாள்.

ஹாஸ்பிட்டலுக்கு வரவில்லை என்று போன் செய்தாள்.

பங்களாவிற்குப் போய் படுக்கையில் விழுந்து கண்ணீர் விட்டாள்.

வயிறு பசிக்க மறந்தது!

இதயம் தாறுமாறாய் துடித்தது!

இமைகள் இரவெல்லாம் ஒட்ட மறுத்தது! கண்ணீரைக் கண்கள் தொடர்ச்சியாய் வெளியேற்றியது!

'ஐயோ... என்ன இது கொடுமை?'

'என் மனம் கவர்ந்த கள்வன்... ஏற்கனவே மணமானவனா?'

'மணமானவனிடம் தான் என் மனதை பறி கொடுத்து விட்டு... விடை தெரியாத விட்டில் பூச்சியாய் விளக்கை சுற்றிச் சுற்றி வந்தேனா?'

'முதன் முதலாய் என்னுள் எழுந்த நேசம் குறை மாத பிரசவமாய்... உருத் தெரியாமல் போகப் போகிறதே!'

'முதன் முதலாய் என்னுள் விழுந்த நேசவிதை... முளை விட்டு, கிளை பரப்பி, மொட்டு விட்டு, மலர்ந்து, மணம் பரப்பி நூறாண்டு காலம் வாழும் என்று கனவு கண்டேனே! இப்படி முளையிலே கருகி காய்ந்து போனதே!'

'நான் என்ன செய்வேன்?'

'ஆதியை எப்படி மறப்பேன்?'

'ஆதியில்லாமல் ஒரு வாழ்க்கையா?'

'முடியுமா?'

'முடியத்தான் வேண்டும்! என்ன செய்ய முடியும்?' மனம் பதில் கூற...

'ச்சே மனமே... நீ சும்மா இருக்க மாட்டாயா? எந்தந்த நேரத்தில் நீ வேதாந்தம் சொல்வது?'

மகாலஷ்மி உணர்ச்சியற்ற முகத்துடன் பால்கனியில் இருந்த நாற்காலியில் அமர்ந்து விட்டாள்.

மார்கழி மாதத்துப் பனி தூவானமாய் தூவியது.

உடல் சில்லிட்டு... இதயம் வலிக்க வலிக்க உட்கார்ந்து விட்டாள். தன்னையே மறந்த ஒரு மோனநிலையில் இருக்கும்போது... அம்மா வந்து பிடித்து உலுக்கினாள்.

''என்ன மகா? நள்ளிரவு ஆகுதே! தூங்காமல் என்ன செய்கிறாய், தங்கம்? ஐயோ உடலெல்லாம் விறைத்து... ஐய்யோ... உன் முகத்தைப் பார்க்கவே பயமாய் இருக்கிறதே! ஏய் மகா... என்னடி பண்ணுது? எங்கே வலிக்குது!'' அம்மா பதறினாள்.



''எதுவும் வலிக்கலே! கொஞ்சம் தனியா விட்டுட்டுப் போறீயா?'' மகாலஷ்மி சீறினாள்.

''என்னடி ஆசிரமத்துல இருந்து வந்ததில் இருந்து பேயறைஞ்சாப்போல இருக்கீயே! ஏன்? என்ன நடந்தது? எதையாவது கேட்டாயா? எதையாவது பார்த்துப் பயந்தாயா?'' அம்மா கத்தினாள்.

''ஐய்யோ அம்மா... ஒண்ணும் இல்லாததற்கு எல்லாம்... ஏன் ஊரைக் கூட்டுகிறாய்?'' பதிலுக்கு மகாலஷ்மியும் சத்தம் போட்டாள்.

''பின்னே அங்கே போனவள்... திரும்பி வந்ததிலிருந்து சரியில்லையே! சாப்பிடல! தூங்கல! இங்கே உட்கார்ந்துட்டு என்ன தவம்? மார்கழி மாதத்துப் பனி உடம்புக்கு ஒத்துக்காதுடி! உள்ளே வரீயா? அல்லது அண்ணாவையோ... அப்பாவையோ அழைக்கட்டுமா?'' என்று சாரதா மிரட்டவும்...

''ஏம்மா நேரம் காலம் தெரியாமல் தொல்லைப் பண்றே? தூக்கம் வர்லே! இங்கே வந்து உட்கார்ந்தேன். அதுக்கு எதுக்கு டாடியை, அண்ணாவைக் கூப்பிடணும்? வயசான காலத்துல ராமா... கோவிந்தான்னு முடங்காமல்... போம்மா... போய் படுங்க! நான் போய் படுத்துக்கிறேன்!''

மகாலஷ்மி எரிச்சலுடன் கூறிவிட்டு... அறைக்குப் போய் கதவை மூடிக் கொண்டாள்.

விடிய விடிய முழித்துக் கொண்டு இருந்தாள்.

'இரவே முடியாதா...' என்று அலுத்து, களைத்து உறக்கம் வந்தபோது விடிந்தது. எங்கோ பால்காரன் அடித்த மணியால் வாரி சுருட்டிக் கொண்டு எழுந்தாள். குளித்தாள். பெயருக்கு சாப்பிட்டாள்.

கல்லூரிக்கு ஓடினாள்.

கம்ப்யூட்டரை தட்டி அவனைப் பற்றி விபரத்தை… பார்த்தாள்.

மணமாகாதவன் என்று இருந்தது. ஆனாலும் அவளுள் தவிப்பு! கலக்கம்!

அன்று பார்த்து ஆதி… ஒரு மணி நேரம் பர்மிஷனில் இருந்து விட்டு… உள்ளே வரவும்… அடுத்த நிமிடம் பியூனை அனுப்பி… அவனுடைய அறைக்கு ஆதியை அழைத்து வரச் சொல்லவும்… ஆதியும் மறுக்காமல் வந்து… அவளின் முன்பு நின்றான்.

"அந்தக் குழந்தை யாருடையது? உங்களை டாடின்னு கூப்பிட்டதே?" கலக்கத்தோடு கேட்டாள்.

- "என் பர்சனல் மேட்டரில் நீங்க தலையிடலாமா?"

"சொல்லுங்க, ஆதி சார்?" அவள் கொஞ்சம் வேகமாய் கேட்க…

"பர்சனல் மேட்டரையெல்லாம் ஒரு பள்ளி தாளாளரிடம் சொல்ல வேண்டும் என் அவசியமில்லே! தெரியுமா?"

"கல்யாணம் ஆகலேன்னு உங்க விபரத்தில் போட்டிருக்கு! ஆனால் ஒரு குழந்தை உங்களை டாடின்னு கூப்பிடுது! இது என்ன சார் முறை? எங்க கல்லூரிக்குன்னு ஒரு பேர் இருக்கு! ஒழுக்கம் இருக்கு! அந்த ஒழுக்கத்தை மீறி நடந்தா கல்லூரிப் பேர் கெடாதா? அந்த அக்கறையில் தான் கேட்கிறேன்!" மகாலஷ்மி படபடத்தாள்.

"………."

"சொல்லேன்டா… மடையா! சொல்லேன்டா… கல்லுளி மங்கா! ஏன்டா இப்படி என்னைக் கலங்க வைக்



கிறாய்? என் நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டுகிறாயே! என் குழந்தையில்லை… அவள்ன்னு சொல்லேன்டா, ராட்சசனே!'

'இறைவா… எனக்கு நல்ல பதில் கிடைக்க வேண்டும்! நீதானே அதற்கு தயவு காட்ட வேண்டும்!' இஷ்ட தெய்வத்தை அவள் வேண்டினாள்.

"என் ஒழுக்கம் மேல் சந்தேகம் வந்துவிட்டால் அதனை க்ளியர் பண்ணிவிட வேண்டியதுதான்! கௌசல்யா என்னுடைய…" அவன் நிறுத்த…

"உங்களுடைய…?" அவசரமாய் கேட்டாள்.

"குழந்தை இல்லை! சிறு வயது முதற் கொண்டே என்னை அப்படிக் கூப்பிட்டு பழகி விட்டாள். நானும் அப்படியே மறுப்பு சொல்லாமல் விட்டு விட்டேன்!"

அவன் அவ்வாறு கூறவும்… கூண்டை விட்டு வெளியே வந்த கிளியாய்… அவளின் மனம் சந்தோசத்தில் மிதந்தது… பறந்தது! நெஞ்சில் 'அப்பாடா' என்று கை வைத்துக் கொண்டாள்.

அவளின் இந்தச் செயல் அவனுக்கு பிடிக்காமல் போக..

"இன்னும் எதுனா என்னைப் பற்றி சந்தேகம் இருக்கா?" ஆதி நக்கலாய் கேட்க…

மகாலஷ்மியின் முகம் அவமானத்தில் கறுத்தது.

"நம்ம காலேஜ்க்கு நல்லப் பேர் இருக்குன்னு உங்களுக்கேத் தெரியும்! நம்ம காலேஜின் ஒழுக்கம் கெட்டுடக் கூடாதுன்னு கேட்டேன்! மணமாகாதவர்ன்னு போட்டிருக்கு! ஆனால் ஒரு குழந்தை டாடின்னு கூப்பிட்டால் தப்பான அர்த்தம்தானே வருது! அதுக்குத்தான் கேட்டேன்! ஓ.கே.! நீங்க போகலாம், ஆதி சார்!"

ஆதித்யன் வெளியேறியதும்... மகாலஷ்மிக்கு ஆட வேண்டும்... பாட வேண்டும் போல குஷியாய் இருந்தது. இரவெல்லாம் தூங்காமல் தவித்தவளுக்கு... இப்போது அப்படியே கட்டாந்தரையில் படுத்து உறங்க ஆசை வந்தது.

இரவு...

நாகேந்திரனிடம் கேட்டாள்.

''ஏன் டாடி இவ்வளவு சம்பாதிக்கறீங்க! நிறைய நல்ல காரியம் செய்யறீங்க! ஆசிரமத்து பிள்ளைகள் மேல் அன்பா இருக்கறீங்க! அந்த அம்மா மேலேயும் மரியாதையா இருக்கீங்க! ஆனால், அந்த குழந்தைகளை நம்ம கல்வி நிறுவனத்திலேயே சேர்த்து படிக்கவும் உதவி இருக்கலாம், இல்லையா?''

மகாலஷ்மி கேட்க... அவளை ஆச்சரியமாய் பார்த்தவர், சொன்னார்...

''என் பிசியான நேரத்தில்... இப்படியெல்லாம் சிந்திக்க... ஏதும்மா நேரம்? உன் மக்கு அம்மாவும், அண்ணாவும் உன்னைப் போல் என்னிடம் கேள்வி கேட்டதில்லையே! கேட்டிருந்தால்... எல்லாம் செய்திருக்கலாமே!''

''அப்போ அவர்களை நம்ம ஸ்கூல்ல சேர்த்துக்கலாமா, டாடி?''

''தாராளமா சேர்க்கலாம்! அடுத்தக் கல்வியாண்டில் இருந்து... நம்ம ஸ்கூல்லயே அத்தனைப் பிள்ளைகளுக்கும் அட்மிஷன் போட்டு... இலவசமா கான்வெண்ட் கல்வியை அளிக்கலாம்! இதுபோல உன்னிடம் தோன்றும் நல்ல ஐடியாக்களை என்னிடம் தயங்காமல் வெளியிடலாம், மகா! நல்லதை யார் சொன்னாலும் ஏற்றுக் கொள்வேன்!''



''தேங்க்ஸ், டாடி!''

''நான்தாம்மா உனக்கு நன்றி சொல்லணும்! இப்படி யெல்லாம் புதுசு புதுசா யோசிக்க நேரமில்லாமல்... நான் பாட்டுக்குத் திரிஞ்சிட்டு இருந்தவனுக்கு... இப்படி ஒரு பாதை போட்டு கொடுத்தீயே! எவ்வளவு புண்ணியம்மா... நீ சொன்ன விஷயத்தில்! பசிச்ச வயிறுக்கு சோறு போடுவதைவிட... கல்வியை தருவது ரொம்ப சிறந்த தும்மா, மகா! என் செல்லக்குட்டி... இனி ஒரு போதும் என்னைப் பிரிஞ்சி போயிடாதேம்மா! நீ என்ன செய்யணுமோ... உன் விருப்பப்படி செய்! எதை விரிவு படுத்தணுமோ... உன் இஷ்டப்படி விரிவு படுத்து! யாருக்கு கொடுக்கணுமோ... உன் மகிழ்ச்சிப் போல கொடு! நான் உன் விருப்பத்துக்கு குறுக்கே நிற்க மாட்டேன்! காசுதான்.... கடல் நீர் போல நிறைஞ்சி கெடக்குது! இனி அந்தக் காசை சேர்ப்பதைத் தவிர்த்து... நிறைய புண்ணியத்தைச் சேர்க்கலாம்! நீயும் அருணும் அந்தப் புண்ணியத்தால் நல்லாயிருப்பீங்க!''

நாகேந்திரன் உணர்ச்சிப் பொங்க கூறி முடிக்க...

''என் ஸ்வீட் டாடி...!'' என்று சந்தோசத்தில் கட்டி முத்தமிட்டாள்.

''கழுதைக்கு வயசாகறாப்போல... வயசுதான் கூடிட்டே போகுது! ஆனால் புத்திக் கூடலே! அதுயென்ன கட்டிப் பிடிச்சி... முத்தம் தந்துட்டு? ச்சே... எத்தனை முறை சொன்னாலும் இந்தக் கெட்டப் பழக்கத்தை விட மாட்டியா, மகா? அநாகரீகம்டி!'' சாரதா புலம்ப...

''எது நாகரீகம்? எது அநாகரீகம் என்று... எனக்கும் என் பெண்ணுக்கும் தெரியும்! அவள் என்னைக்குமே என் குழந்தை தான்! நீ உன் வேலையைப் பார்த்துட்டுப் போவீயா?'' என்று எகிற...

"ஓவராச் செல்லம் கொடுக்கறீங்க! இதுக்கெல்லாம் ஒருநாள் வருந்தும்படி ஆகும்! புரிஞ்சிக்கங்க!"

"அப்படி வருந்தும் சமயம் நீ என்னோட கம்பெனியெல்லாம் கொடுக்கத் தேவையில்லை!" என்று வந்து நாகேந்திரன் எகத்தாளமாய் கூற... மகாலஷ்மி சத்தம் போட்டு சிரித்தாள்.

சாரதாவின் வயிற்றில் பயப்பந்து ஒன்று உருண்டு, திரண்டு உருக்குலைய வைத்தது.

# 7



அன்று ஞாயிற்றுக்கிழமை.

ஆதித்யன் ஆசிரம மாணவ, மாணவிகளை அழைத்துக் கொண்டு அருகில் உள்ள கிராமத்திற்குச் சென்றான்.

வீதிகளின் இருமருங்கிலும் சிறுசிறு குழிகளைத் தோண்டி... கையோடு கொண்டு சென்றிருந்த வேப்பங் கன்று, ஆலம் கன்று, வாதநாராயண மரக்கன்று அத் தனையையும் ஆர்வத்தோடு பிள்ளைகள் நட்டனர்.

ஆதித்யன் சிறு வயது முதற்கொண்டே இயற்கையால் ஈர்க்கப்பட்டவன்! சிறு வயது முதற்கொண்டே மரங்கள், செடிகள், கொடிகளின் மேல் நேசம் கொண்டு... மரம் நடு வதை தன் பணியாக, தலையாய கடமையாகக் கொண்டவன்!

படிக்கும் காலங்களில் இருந்து ஆரம்பித்த இந்த நல்லப் பழக்கம் இன்று வரை ஆர்வம் குறையாமல் தொடர்கிறது.



விழுப்பரம் மாவட்டத்தில் உள்ள சிற்றூர், பெரிய ஊர் முதற் கொண்டு ஆதித்யனால் நடப்பட்ட மரக் கன்றுகள்... இன்று மரங்களாகி... நிழல் கொடுத்துக் கொண்டிருக் கின்றன.

மரக்கன்று வைப்பதோடு அவன் பணி முடிந்து விடாது. அதை ஓராண்டு காலங்கள் கண்காணித்து வளர்ப்பது இவனுடைய சிறப்பு!

அடுத்ததாய், அவ்வூரில் உள்ள இளம் சிறார்களுக்கு அம்மரக்கன்றுகளை நேசிக்கக் கற்றுக் கொடுத்து விடுவான். பின்னர் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்... பராமரிப்பு பணிகளை!

மாணவ, மாணவியரிடம் சுற்றுச் சூழல் விழிப் புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, நிறைய பள்ளிகளில் 'ஸ்லைடு ஷோ' நடத்தியுள்ளான்.

'மரம் வளர்வது எப்படி?'

'காற்றும் தண்ணீரும் உருவாகும் முறை யாது?'

'அசுத்தக் காற்றை மரங்கள் தூய்மைப்படுத்தும் விதம் எப்படி?'

'பிளாஸ்டிக் பைகளின் தீமைகள் யாவை?'

'பிளாஸ்டிக் பயன்படுத்துவதால் மனிதனுக்கு ஏற்படும் நோய்கள் யாவை?'

'மண் வளம் பிளாஸ்டிக் பொருள்களால் எப்படி பாதிக் கப்படுகிறது?'

என்பது போன்ற விஞ்ஞான காட்சிகள் அந்த 'ஸ்லைடு ஷோ'வில் விளக்கப்படும்.

இதன் பயனாக எத்தனையோ பள்ளி மாணவர்கள், மாணவிகள் பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் பொருட்ளை பயன்படுத்துவதில்லை என்று உறுதி கொடுத்துள்ளனர்.

நிறைய கிராம மக்கள் பிளாஸ்டிக்கை பயன்படுத்துவ தில்லை என்று வாக்கு அளித்து உள்ளனர்.

லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் மற்றும் வனத்துறை யிடம் மரக்கன்றுகளை வாங்கி நடுவதை வழக்கமாக கொண்டுள்ளான்.

லயன்ஸ் கிளப் தலைவர் நாகேந்திரன் என்பதால் கிளப் மூலமாகவும் உதவுவார். தனிப்பட்ட முறையிலும் இவனுடைய இந்த ஆர்வத்துக்கு உதவுவார்.

அடுத்ததாய் சேலம், திருவண்ணாமலை மாவட்டங் களிலும் தனது இந்தப் பணியை மெல்ல மெல்ல விரிவு படுத்துகிறான்.

எத்தனையோ பேர்களை பசுமை நேசிப்பாளராக மாற்றி யமைக்காக லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப், லேடீஸ் கிளப் அத்தனையும் பல விருதுகள் கொடுத்து கௌர வித்துள்ளது.

கையோடு எடுத்துச் சென்றிருந்த உணவுகளை உண்டு விட்டு... மீண்டும் தங்களது பணிகளை ஆரம்பித்தனர்.

மாலை நான்கு மணியளவில் அந்த ஊரின் பள்ளி வளாகத்தில் 'சுற்றுப் புறத் தூய்மையை பாதுகாக்கும் முறையையும், இயற்கையை நேசிக்கும் விதத்தையும்' விளக்கும் சிறு நாடகம் இல்லத்து மாணவர்களால் நடிக்கப்பட்டது. பலத்த கை தட்டுகளையும், பாராட்டு களையும் பெற்றுக் கொண்டு... எல்லோரும் அந்த சின்ன வேனில் ஏற... ஆதித்யன் அதனை ஓட்டினான்.

அந்த வேன்கூட நாகேந்திரன் வாங்கித் தந்ததுதான். இல்லத்துக்குத் தேவையான காய்கறிகள், மளிகை, அரிசி முதலியன வாங்கவும்... இதுபோல பொது சேவை



செய்யக் கிளம்பவும்... அந்த வேன் ரொம்ப உதவியாக இருந்தது.

மகாலஷ்மிக்கு ஆதித்யனைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அப்படியே பகலில் இல்லத்தைப் பார்க்க வந்ததாகவும்... ஆசிரமத்துக் குழந்தைகளுக்கு டாடி கான்வெண்ட் கல்வியை அளிக்க ஒத்துக் கொண்டதையும் சொல்லும் சாக்கில்... அப்படியே ஆதியையும் கண்குளிர பார்க்கலாம் என்ற நப்பாசையில் வந்தவளுக்கு ஏமாற்றம்.

ஆதி பக்கத்து கிராமத்திற்கு சென்ற விபரத்தைக் கூறினாள். மகாலஷ்மி மேலும் அவனைப் பற்றிய விபரங் களைக் கேட்க... ராஜேஸ்வரி அம்மாள் ஒவ்வொன்றாய் சொல்லிவர... ஆதி மேலே மேலே ஏறி... அவளின் இதயத்தில் உள்ள சிம்மாசனத்தில் உட்கார்ந்து கொண்டான்.

கொஞ்ச நேரத்தில் இல்லத்திற்குள் வேன் வர... ஆதி மற்ற மாணவர்களும் இறங்கி வந்தனர். எல்லோரும் இருப்பிடம் போக... ஆதி மட்டும் மரியாதை நிமித்தமாய் அங்கே வந்து... அவளை வணங்கி வரவேற்றான்.

''நான் வரேன், மேடம்!'' என்று கிளம்பியவனை...

''எங்க கிளம்பிட்டீங்க?'' என்று நிறுத்தினாள்.

ஆதித்யன் எரிச்சலானான்.

கல்லூரியில் என்றால் ஏதாவது இல்லாததற்கும், பொல்லாததற்கும் சந்தேகம் கேட்டு தொல்லைப் படுத்துவது போதாமல் இங்கே வேறு வந்து விட்டாளே! அம்மா ஏதாவது தவறாக நினைத்துக் கொள்ளும் முன்... ஏதாவது சுள்ளென்று பேசி... மூக்கை உடைத்து அனுப்பி விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தவ னுக்கு...

"அடுத்த கல்வியாண்டில் இருந்து இந்தப் பிள்ளைகளை நம் கான்வெண்டிலேயே சேர்த்துக் கொள்ள... இ கிரேட் நாகேந்திரன் ஒத்துக் கொண்டார் என்பதை உங்களிடம் சொல்லிவிட்டுச் செல்லவே வந்தேன், ஆதித்யன் சார்!" என்று மகாலஷ்மி சொல்லவும்... விவரிக்க முடியாத ஆனந்தத்தில் மூழ்கினான். ஆசிரமத்து பிள்ளைகளுக்கு ஒரு நல்லது என்றால் முதலில் மகிழ்பவன்... ஆதித்யன் தான்!

"தேங்க்யூ... தேங்க்யூ மேடம்!" என்று கையெடுத்துக் கும்பிட்டான்.

"மேடம்னு சொல்லி அந்நியப்படுத்த வேண்டாம்! கல்லூரியில மேடம்! மற்ற இடங்களில் கால் மீ மகா! எத்தனை முறை சொல்லியிருக்கேன்! கேட்க மாட்டீங்களா, ஆதி?"

"மகாவிற்கு பிடிக்காததை ஏம்பா செய்யறே? நம்ம மகாப்பா! அவள் மனம் எவ்வளவு உயர்ந்ததுன்னு இதிலிருந்து தெரியுதா? உயர்வு தாழ்வே நம்ம மகாவுக்குத் தெரியாது! பிடிக்காதுப்பா!" என்று ராஜேஸ்வரி சந்தோசமாய் சொன்னார்.

"மேடம்... நான் பகலில் ஒரு நாள் வந்து பார்ப்பதாகச் சொன்னேனே! ஆதியை கூட்டிட்டுப் போய் காட்டச் சொல்றீங்களா? இல்லத்தைச் சுற்றிப் பார்க்க எனக்கு அனுமதி உண்டா?"

"என்ன மகா இப்படிக் கேட்டுட்டே! உனக்கில்லாத அனுமதியா..? உரிமையா..? ஆதி போய் காட்டுப்பா!" ராஜேஸ்வரி சொன்னார்.

ஒவ்வொரு பகுதியாய் அழைத்துப் போனான்.



"ஐய்யோ... ரோஸ் எல்லாம் சூப்பரா இருக்கே!" என்று கூற...

"அக்கா... அந்தச் செடிகளையெல்லாம்... எங்க அண்ணாத்தான் வைத்தார்!" அங்கு நின்ற சிறுமி பெருமையாய் சொல்ல...

"அப்படியா? ஆதி சார் வைத்த செடிகளா? அப்படின்னால் எனக்கு ரொம்பவே பிடிக்கும்! இந்தச் செடியில் மலர்ந்த மலர்களை பறிக்க... அதை என் தலையில் சூடிக் கொள்ள பூரண உரிமை உண்டு! அப்படித்தானே, ஆதி சார்?"

மகாலஷ்மி லேசாய் கண் சிமிட்டிக் கேட்டாள். ஒரு பூவை கிள்ளி காதோரம் சொருகிக் கொண்டாள்.

அந்த ரோஜா... அவளுக்கு கூடுதல் அழகைக் கொடுத்தது.

"அண்ணா... அண்ணா..." என்று அந்தப் பிள்ளைகள் பாசமாய் அழைப்பதைக் காண இனிமையாய் இருந்தது. அவர்களிடம் பாசமாய்... அவன் சிரித்தபோது... அந்த சிரிப்பு அவளின் இதயத்தைக் கொள்ளைக் கொண்டது.

"என்கிட்ட மட்டும்தான் எரிந்து எரிந்து விழுவீங்களா, ஆதி? என்னிடமும் இந்த அழகு சிரிப்பை கண்டினியூ பண்ணக் கூடாதா? கொள்ளை அழகு தெரியுமா, உங்கள் சிரிப்பு! இப்போ உங்களை என்னவெல்லாமோ செய்யணும் போல இருக்கு! ஆனால் அதைச் சொன்னால் அடிக்க வருவீங்க!" என்று கூறி ரசனையோடு சிரித்தவளின் கால்களை ஓடி வந்து கட்டிக் கொண்டாள், கௌசல்யா.

மகாலஷ்மி... கௌசல்யாவை அள்ளி அணைத்துக் கொண்டாள்.

''நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க!'' மழலையாய் கூற...

''உனக்கு தெரியுது! உன் டாடிக்குத் தெரியலையே!'' சொல்லி விட்டு ஒரு ஏக்கப் பெருமூச்சு விடவும்...

ஆதித்யன் முறைத்தான்.

''இவர்களை என் பள்ளியில் சேர்க்கும் செய்தியை போனிலேயே கூறி இருக்கலாம். உங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில்... ஆசையில் தான் வந்தேன்! புரிஞ்சிக்கங்க, அன்பு!''

''உன்னை எதுக்கு புரிஞ்சுக்கணும்?''

''இந்த மாதிரி அமுல் பேபி கேள்வியெல்லாம் கேட்கக் கூடாது. வயசு பையனா நடந்துக்கங்க! அப்படியே தெரியலைன்னாலும் சொல்லித் தரேன்! என்ன சம்மதமா?''

அவள் மலர்ச்சியோடு கேட்க... ஆதித்யன் விவரிக்க முடியாத வலியில் முறைக்க...

''இதுக்கு... இதைப் பார்க்கத்தான் வந்தேன், அமுல் பேபி!'' என்று சொன்னவள் வெட்கத்துடன் பார்வையை தழைய விட்டாள்.

''என்னங்க ஆதி இது? கட்டிடங்கள் அனைத்தும் ஓடுகளாலும், கூரைகளாலும் வேய்ந்து... தரமற்றதாக இருக்கிறது! டாடி இதையெல்லாம் கண்ணுறவே இல்லையா? பிள்ளைகள் இந்த பனிக் காலத்திலும் மழைக் காலத்திலும் ரொம்பவே கஷ்டப் படுவார்களே!''

''என்ன செய்ய? இது இவர்களின் விதி!''

''இதற்கு ஏதாவது செய்கிறேன்!'' என்று வேகமாய் போனவள்... நாகேந்திரனிடம் பேச... இன்ஜினியரையும், மேஸ்திரியையும் மறுநாளே அனுப்பி வைத்தார், அந்த நல்ல மனிதர்.



எந்த இடத்தில் கட்டிடம் கட்டலாம் என்று குறித்துக் கொண்டு அவர்கள் வெளியேற...

மாலை கல்லூரி விட்டு வந்தவனுக்கு இந்த செய்தியை ராஜேஸ்வரி அம்மாள் சொல்ல... அகமகிழ்ந்துப் போனான்.

அதற்கு அடுத்த நாள் பிள்ளைகளின் நோய்... மற்ற உபாதைகளுக்கு... தனது மருத்துவ மனையிலேயே இலவசமாய் சிகிச்சை அளிப்பதாய் வாக்குறுதிக் கொடுத் தாள்.

அவன் பாடம் நடத்தும்போது... கால்கடுக்க... வராண்டாவில் அவன் அறியாமல் நின்று... அவன் பாடம் நடத்தும் அழகையும்... அவனின் குரல் வளத்தையும்... இனிய வர்ணனைகளையும், கருத்துக்களையும் கேட்டு ரசிப்பாள். இந்த நிகழ்ச்சி தினம்தோறும் வாடிக்கையாக நடந்தது.

காலையானால் அவனைப் பார்த்த பின்பு தான் வேலையை தொடங்குவாள். மாலையானால் அவனைக் கண்டு... ஏதாவது பேசிவிட்டுத் தான் ஹாஸ்பிட்டலுக்கே செல்லுவாள்.

ஆதித்யனை அடிக்கடி கூப்பிட்டு அனுப்புவாள்.

இதில் சந்தேகம்... அதில் சந்தேகம் என்று எதையாவது உளறுவாள்.

அவன் விளக்கினால்... அவன் சொல்வதை கவனியாமல்... அவனையே வைத்த விழி எடுக்காமல்... கண்கள் மலர பார்த்துக் கொண்டிருப்பாள்.

அவன் கோபம் கொண்டு திரும்புவான்.

அவளை அறியாமலேயே... அவன் நேசிக்கும் கௌசல்யாவின் மீது இயல்பான பாசம் ஏற்பட்டது.

அவளுக்கு மட்டும் ஏதாவது பரிசுப் பொருள் வாங்கிப் போய் கொடுத்தால்... அவளை ஒத்தப் பிள்ளைகள் ஏங்கிப் போவார்கள் என்று, அவர்களுக்கும் வாங்கிப் போனாள்.

பெரும்பாலும் சில ஞாயிறுகளின் மாலைப் பொழுதை அங்கேயேக் கழித்தாள்.

ஆசிரமத்துக் கட்டிடம் வேகமாய் வளர்ந்தது. அதைப் போலவே அவளுடைய இதயத்திலும்... காதல் கட்டிடம் பலமாய்... வலுவாய்... உறுதியாய்... உண்மையாய் எழுந்துக் கொண்டிருந்தது.

ஆதித்யனிடம் என்னத்தான் குறிப்பு கொடுத்தாலும்... வலியச் சென்று அன்பைப் பொழிந்தாலும்... அவன் உணருவதாய் தெரியவில்லை!

மகாலஷ்மி என்னத்தான் மயக்கினாலும்... ஆதித்யன் மயங்குவதாய் தெரியவில்லை!

முக்கியமான பொறுப்பில் இருப்பதால்... நினைத்த நேரம்... அவன் மேல் ஆசை வரும் நேரமெல்லாம்... அவனோடு பேசி மகிழ முடியவில்லை.

ஹாஸ்பிட்டலில் இருந்து சீரியஸ் கேஸ் வந்தாலோ... பள்ளி முதல்வரிடம் கூட சொல்லிவிட்டுப் போக மாட்டாள். ஆதித்யனிடம் சொல்லி விட்டுப் போவாள். போகிற போக்கில் செல்போனில் பள்ளி முதல்வரிடம் செய்தியைச் சொல்லி... கல்லூரியைப் பார்த்துக் கொள்ளச் சொல்லுவாள்.

அவன் விலக விலக...

அவன் முறைக்க முறைக்க...

அவன் கோபம் காட்டக் காட்ட...

அவன் அலட்சியப் படுத்தப் படுத்த...



அவள் எரிந்து விழ விழ...

அவள் மேல் உள்ளக் காதல் இன்னும் எண்ணெய் ஊற்றிய விளக்காய்... ஓங்காரமாய் எரிந்தது.

அவளால் அந்தக் காதல் அவஸ்தையை அதற்கு மேல் மூடி வைக்க முடியாதது போலத் தோன்றியது.

'ஐ லவ் யூ... ஐ லவ் யூடா மடையா...!' என்று அவனைப் பார்த்து கத்தி... கலாட்டா செய்து... கட்டியணைத்து... முத்தமிட ஆசை வந்தது.

சமய சந்தர்ப்பத்துக்காய் காத்திருந்தாள்.

அவள் காத்திருப்பதற்கு பலன் கிடைக்காது என அறியாமல்.

# 8



அன்று மாலை...

கல்லூரி விட்டு அனைவரும் செல்ல... ஆதி பூங்காவிற்கு சென்று... அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் படுத்துக் கொண்டான்.

இது அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சி!

கொஞ்ச நேரத்தில்... ஆட்கள் யாரும் இல்லாததை உறுதி செய்து கொண்டு... பூங்காவிற்கு சென்றாள்.

ஆதித்யன் கண் மூடி படுத்திருப்பதை ஆசையாசையாய் அள்ளிப் பருகி விட்டுக் கூறினாள்.

"இந்த போஸ் கூட ரொம்ப நல்லாயிருக்கு!"

ஆதித்யன் திடுக்கிட்டு விழித்து... எழுந்தமர்ந்தான்.

''உங்களிடம் ஒரே தொல்லையாப் போச்சே!'' என்று சலித்துக் கொண்டு நடந்தவன் முன்பு கை நீட்டி மறித்தாள், மகாலஷ்மி.

''நான் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும், ஆதி!'' மகாலஷ்மி நேருக்கு நேராய் நின்று... தணிவான குரலில்... ஆதியின் கண்ணோடு கண் நோக்கி கூற... ஆதியே தடுமாறிப் போனான்.

இனிக்கும் மாலைப் பொழுது!

அழகே உருவாய் கொண்ட பெண் வந்து... எதிரே கை நீட்டி மறித்து... கண்ணோடு கண் நோக்கினால் எந்த ஆண் தான் மயங்க மாட்டான்! தடுமாற மாட்டான்! தத்தளிக்க மாட்டான்! தரை மட்டமாக மாட்டான்!

ஆதி மட்டும் விதிவிலக்கா என்ன?

ஆதித்யன் சில நொடிகளில் தன்னை சமாளித்துக் கொண்டு...

''என்ன விஷயம்? அபிஷியலா? அல்லது பர்சனலா? அபிஷியலா இருந்தால் நாளைப் பத்து மணிக்கு மேல் பேசலாம்!

பர்சனல்... நமக்குள்ள என்ன இருக்கு? ம்?'' என்று அலட்சியமாய் கேட்க...

''உங்களுக்கு வேண்டுமானால் என்னிடம் பேச விஷயம் இல்லாமல் இருக்கலாம்! ஆனால் எனக்கு இருக்கு! பேசணும், ஆதி! நான் பேசியே ஆகணும்! கட்டாயமாய்! உட்காருங்க! இல்லேன்னால் என் செயல்கள் அத்தனையும் பைத்தியத்தின் செயலாய் இருக்கும்! பரவாயில்லையா?''



மகாலஷ்மி கேட்க... அவன் அப்படியே நின்றான்.

''உங்களிடம் நான் பேசிட்டேன்னால்... எனக்கு மனப் பாரம் குறையும்! உட்காருங்க, ஆதி! இங்கே நான் கரஸ்பாண்டண்டோ... நீங்க புரொபசரோ இல்லை. நல்ல நண்பர்கள்! என்னைக் கொஞ்சம் புரிஞ்சிக்கங்க, ஆதி! ப்ளீஸ்...''

மகாலஷ்மி அழாதக் குறையாய் கூற... அவன் அமர்ந்தான். அவளும் அமர்ந்தாள்.

''எனக்கு எப்படிச் சொல்றதுன்னு தெரியலே, ஆதி! ஆனால் சொல்லாமலும் இருக்க முடியலே! என்னுள்ளே அடச்சி அடச்சி வைக்கவும்... என் மனதில் பாரம் தாங்காமல் தவிக்கிறேன், ஆதி! நான் சொல்வதை நீங்க புரிஞ்சிக்கணும், ஆதி! எவ்வளவு குறிப்பு கொடுத்தாலும் புரிஞ்சிக்காத ஜென்மமா இருக்கீங்க, ஆதி! அல்லது புரியாதது போல நடிக்கறீங்களா, ஆதி?

அவள் கொஞ்சம் கோபமாய் கேட்டாள்.

''நீங்க என்னை நம்பணும், ஆதி! வெளிநாட்டில் இருந்து வந்ததும்... பொழுது போகாமல் காலேஜிற்குள் நுழைந்தேன்! ஒவ்வொரு வகுப்பா கவனிச்சிட்டு வந்தப் போ... நீங்க நடத்திய இலக்கியத்தின் அழகு கெடாமல்... நல்ல குரல் வளத்தோட... எளிமையான சொற்களை கையாண்டு நடத்திய விதமே... என்னை ஈர்த்து விட்டது. அந்த ஈர்ப்பில்தான் ஸ்டூடண்ட் என்று பொய் சொல்லி நுழைந்தேன்! முதல் பார்வையிலேயே உங்களை வாரி சுருட்டி... என் இதயத்தில் வைத்துக் கொண்டேன்! உங்களின் குரல்... விழிகளின் ஸ்பரிசம்... ஆண்மை நிரம்பிய தோற்றம்... எல்லாமுமாய் என்னை உங்களிடம் விழ வைத்து விட்டது! அந்த நொடியே உங்களுள்

விழுந்து விட்டேன்! எழவே முடியாத அளவு! அன்றிலிருந்து என்னுள் உங்கள் மேலான நேசம்... முளைவிட்டு... கிளை பரப்பி... மொட்டு விட்டு... மலர்ந்து... மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது.'' அவள் கண்கள் பளபளக்க கூறி முடிக்க...

''இது என்ன வீண் உளறல்? உன் உளறலைக் கேட்க... நான் ஒன்றும் மடையனல்ல!''

ஆதித்யன் சீறினான்.

''உளறல் இல்லை, ஆதி! உண்மையான நேசம் கொண்ட மனதில் இருந்து வரும்... சத்தியமான வார்த்தைகள்! அதனால்தான் மீண்டும் வெளிநாடு செல்லவில்லை! ஒரேயடியாய் அடம் பிடித்து... இந்த கல்லூரிக்கு கரஸ்பாண்ட்ண்டாய் வந்தேன்! என் டாக்டர் தொழிலையும் திறம்படச் செய்து கொண்டு... கல்லூரியையும் பொறுப்பாய் ஏன் நிர்வகிக்கிறேன்... தெரியுமா? அப்பா எங்கே கல்லூரி நிர்வாகத்தை செம்மையாகச் செய்யவில்லை என்று... மீண்டும் தன்னிடம் பிடுங்கிக் கொள்வாரோ என்று பயந்தே அதிகமாகக் கஷ்டப் படுகிறேன்! நான் இத்தனை கஷ்டப்பட வேண்டுமா ஆதி... என் வசதிக்கு? எல்லாம் உங்களுக்காக... உங்களை நாள் முழுக்க அருகில் இருந்து பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான்! உங்கள் மேல் உள்ளக் காதலால் தான்!'' மகாலஷ்மி அன்போடு கூற...

''காதலா... ம்கூம்... இதெல்லாம் வெறும் இனக் கவர்ச்சி!'' அவன் மறுத்தான்.

''எனக்கென்ன வயசு பதினாறா, ஆதி? என்ன ஆதி பேசறீங்க? இதுவரை எத்தனை ஆண்களைக் கண்டிருக்கிறேன். இது போல் யார் மேலும் ஒரு பற்று...



பிடிப்பு... பார்த்த உடனே நேசமெல்லாம் வந்ததில்லே, தெரியுமா?''

''என்னிடம் இதுபோல் இனியொரு முறை பேசாதே, பிடிக்கவில்லை!'' என்று அவன் ஒருமைக்கு தாவ...

''என்னையா? என் காதலையா?'' அவள் கேட்க...

''உன்னையும், உன் காதலையுமே!'' அவன் சட்டென்று சொல்ல...

''என்னைப் பிடித்தாலும்... பிடிக்கவில்லை யென்றாலும் நீங்கள் காதலித்தே ஆக வேண்டும்!'' பட்டென்று மகாலஷ்மி சொல்ல...

''கட்டாயப்படுத்துவதால் காதல் வந்து விடாது!''

''நிஜமா சொல்லுங்க? என்னைப்பிடிக்கவில்லை? என் முகத்தை... என் கண்ணை நேராப் பார்த்து சொல்லுங்க, ஆதி?''

''பிடிக்கலே... பிடிக்கலே...!'' அவன் கத்த...

''ஆனால் எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு! ஐ லைக் யூ, ஆதி! ஐ லவ் யூ ஆதி! ப்ளீஸ் என்னைப் புரிஞ்சிக் கங்களேன். உடனே சொல்லணும்ன்னு அவசியமில்லே! யோசிச்சே சொல்லுங்கப்பா!'' அவள் கெஞ்சினாள்.

''யோசிக்க எதுவுமே இல்லை!''

''என்னால் நீங்க இல்லாமல்... எனக்கு வாழ்க்கையே இல்லை!

''நாகேந்திரன் சார் என் மேல் நிறைய மதிப்பும் மரியாதையும் வச்சிருக்கார். அதைக் கெடுக்கறாப்போலான செயலில் இறங்காதே! போய் உன் வேலையைப் பார்!''

''எனக்கு நீங்க வேணும்!'' அவள் சிறு குழந்தையாய் அடம் பிடிக்க...

"நான் பொருளோ... பொன்னோ... அல்ல! நீ நினைக்க உடனே உங்க கிட்ட இருக்க ஏராளமான பணத்தைக் கொட்டி வாங்க!...

"இங்கே பார் மகா! மரியாதையா இப்படி உளறுவதை நிறுத்திட்டுப் போயிடு! இல்லேன்னால் நான் கோபத்துல மரியாதையில்லாமல் பேசிடுவேன்!"

"பேசுங்களேன்! நான் ஒண்ணும் குறைஞ்சிட மாட்டேன்! ப்ரியம் உள்ள இடத்தில்தான் சலுகையா கோபம் காட்ட முடியும்! உங்களுக்கு என்மேல் ப்ரியம்தானே?"

"மண்ணாங்கட்டி! போடி தூரே!" கத்தினான்.

"எனக்கென்ன குறை?"

"குறையே இல்லேங்கிறதுதான் குறை!"

"புரியும்படி பேசுங்க!"

"புரியும்படி உனக்கு விளக்கணும்ன்னு அவசியமில்லே! நேரத்துல ஹாஸ்பிட்டலுக்குப் போய் உருப்படியா நாலு பேரோட நோயைத் தீர்க்கப்பார். வெட்டிப் பேச்சு பேசிட்டு நிற்காதே! வழியை விடு! நான் போகணும்!"

"ஆதி... எனக்கு நீங்க வேண்டும், ஆதி! என் காதலனாகவும்... கணவனாகவும்! ப்ளீஸ் ஆதி... இந்த மகாலஷ்மியை புரிஞ்சிக்கங்க! வெட்கத்தை விட்டு... என்னைக் கவர்ந்த முதல் ஆண் நீங்கதான்... முதன் முதலில் என்னை சலனப் படுத்தியவர் நீங்கதான்... என்னை சஞ்சலப் படுத்தியவர் நீங்கதான்னு சொல்றேன்! புரிஞ்சிக்கவே மாட்டேன் என்கிறீர்களே, ஆதி! ஒரு பெண்ணான நான்... என் வெட்கத்தை, நாணத்தை விட்டு காதலிக்கறேன்னு சொல்றேன். இப்படி கல்லா



இருக்கறீங்களே, ஆதி! என் உயிர்... என் சுவாசம்... எல்லாமே.. எல்லாமே நீங்கதான், ஆதி! என் ஆதி இல்லாமல்... என்னால் வாழவே முடியாது!" என்று கூறியவள்... அவன் எதிர்பாராத தருணத்தில் அருகில் வந்தவள்... அப்படியே கட்டியணைத்து... கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவன் எரிமலையானான்.

சட்டென்று தன்னை அணைத்துக் கொண்டிருந்தவளை பிரித்து... தூரே நிறுத்தியவன்... தன் பலம் கொண்ட மட்டும் இழுத்து வேகமாய் அறைந்தான்.

அவள் அதிராமல்... அவன் கையைப் பற்றி "இந்த உரிமைத்தான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு, கண்ணா!" அவன் கையில் முத்தமிட்டாள்.

அவன் விக்கித்து நின்று விட்டான்.

# 9



வானம் இடியும் மின்னலும் சூறாவளி காற்றுமாய் உறுமிக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் வானம் பொத்துக் கொண்டு மழையைக் கொட்டியது.

மகாலஷ்மியின் இதயத்திலும் இடிதான்... மின்னல் தான்... சூறாவளி காற்றுதான்!

காரணம் ஆதித்யன்!

தனது காதலைச் சொல்லி எத்தனை கெஞ்சியும்... தனது மனதை திறந்து காட்டியும்... அவன் கடைசி வரை

மறுப்பாய் பேசிவிட்டுச் சென்றதைத் தாங்க முடியாமல்... தவித்தாள்! கலங்கினாள்!

அறுபதுக்கு மேலான நோயாளிகளைப் பார்த்தாயிற்று. வேலையிருக்கும்போது மனம் சாந்தமாய் இருந்தது. தனித்து இருக்கும்போது மனம் தவித்தது. நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தாள். கண்களில் ஆதித்யன் வந்து நின்றான்.

'உன்னைப் பிடிக்கலே! பிடிக்கலே!' என்று கத்தினான். அவளை அறியாமலேயே கண்கள் கசிந்தது.

'ஆதி... எனக்கென்ன குறை?'

'ஏன் என்னைப் பிடிக்கவில்லை?'

'முதன் முதலாய் என் சிந்தையை சிதற அடித்தவன், நீதானே!'

'முதன் முதலாய் என்னுள் உன்னைக் கண்ட பின் தானே சலனம்... சஞ்சலமெல்லாம்!'

'முதன் முதலாய் என்னுள் பரவசத்தை ஏற்படுத் தியவன், நீதானே!'

'என்னைக் கவர்ந்த முதல் ஆண் நீதான்! கடைசி ஆணும் நீதான்! எப்பேர்ப்பட்ட மன்மதனே என் முன் வந்து நின்றாலும் என் மனம் தடுமாறாது! தடம் புரண்டு போகாது! என்னைப் புரிந்து கொள்ள மாட்டாயா... என் கண்ணா? என் மனதின் ஆசைகளை அறிந்து கொள்ள மாட்டாயா... என் உயிரே?'

'என்னுள் நேசம் ஏற்படக் காரணமானவனே... நெருப்பாய் மாறலாமா?'

'என்னுள் புதுவித உணர்வுகளை உண்டாக்கியவனே... சூறாவளியாகவும்... சுனாமியாகவும் சுழன்று தாக்கலாமா?'



'ஆதி... நேசம் ஒருவழிப் பாதை அல்ல...! அது இரு வழிப் பாதை என்று தெரியாதா?'

'ஆதி... என் இதயத்தைத் திறந்து காட்டவா? அதில் உன் பாதச் சுவடுகள்தானே பதிந்துள்ளது. உன் நினைவு களில் தானே என் நெஞ்சம் நிறைந்துள்ளது!'

'என் அன்பிற்குரியவனே... என்னைப் புரிந்து கொள்ள மாட்டாயா?'

'என்னுள் விழுந்த முதல் வித்தை... விழுது விட வைக்காமல்... வெந்நீர் பாய்ச்சி கருக வைக்கிறாயே! இது நியாயமா?'

''ஆஹா... கைதேர்ந்த சிற்பி ஒருவனால் செதுக்கப் பட்ட சிலையாய்... ரசனையுள்ள ஓவியன் ஒருவனால் வரையப்பட்ட பாவையாய்... கூடுதலான நேரம் எடுத்துக் கொண்டு பிரம்மன் படைத்த பேரழகியாய்... ஆஹா அத்தனை அழகும் ஒருவரிடமே கொட்டிக் கிடக்கிறதே! என்ன அநியாயம்?''

ரசனையுடன் கூடிய வர்ணனையோடு... இனிமையான குரலோடு... அவன் உள்ளே நுழைந்தான், ஆறடிக்கு குறையாத அழகனாய்!

கண் மூடிக் கிடந்தவள் திடுக்கிட்டு கண் விழிக்க... கண்களுக்குள் இருந்த நீர் மணிகள்... கன்னத்தில் உடைந்து... வழிந்து ஓட...

''டாக்டரம்மாவுக்கு உடல்நிலை சரியில்லையா? எங்களது உடம்பிற்கு வைத்தியம் பார்த்துக் கொள்ள வந்தால்... இங்கே டாக்டரம்மாவுக்கு வைத்தியம் பார்க்க வேண்டும் போல உள்ளதே! ஆமா... டாக்டரம்மாவுக்கு சுரமா? தலைவலியா?'' அந்த வம்புக்காரன் கேட்க... அவள் எரிச்சலானாள்.

"ஹலோ... யார் சார் நீங்க? உங்களை யார் உள்ளே விட்டது? கேட்டுட்டு வரணும்ன்னு என்ற நாகரீகம் கூடவா தெரியாது? பார்த்தால் படித்தவர் போல இருக்கீங்க! சென்ஸ் இல்லையா? ஏய் நர்ஸ்... எங்கேப் போய் தொலைந்தாய்?" மகாலட்சுமி கத்தினாள்.

கர்ச்சீப் கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"நர்ஸ் இல்லையே டாக்டரம்மா! கத்தி வீணாக உங்கள் எனர்ஜியை வேஸ்ட் பண்ண வேண்டாம்!"

"சரி... நீங்க யார்?" வேகமாய் கேட்டாள்.

"நான் ஒரு பேஷண்ட்!"

"என்ன பேஷண்ட்? சொல்லுங்க?" எரிச்சலோடு கேட்டாள்.

"நீங்கதான் கண்டு பிடிக்கணும்!"

"வாட்? என்ன விளையாடறீங்களா?"

"மாமா பெண்தான்! விளையாடலாம் தான்! ஆனால் எதிராளியின் அனுமதி வேண்டுமே! ஆமா... விளையாட அனுமதி உண்டா? என்ன விளையாட்டு விளையாடலாம்? சாய்ஸ் ஈஸ் யுவர்ஸ்!" அவன் கன்னத்தில் குழி விழ சிரிக்க...

"ஏய் மிஸ்டர்... என்ன திமிரா? இல்ல மெண்டல் ஹாஸ்பிட்டல்ல இருந்து தப்பித்து வந்துவிட்டாயா?"

"ஆஹா இன்னும் கொஞ்சம் விட்டால் பைத்தியம்ன்னே என்னை முத்திரை குத்தினாலும் குத்திடுவீங்க போலத் தெரியுதே!" அவன் மலர்ந்து சிரிக்க...

"சீரியஸா கேட்கிறேன்! யார் சார் நீங்க?" கெஞ்சலோடு கேட்க...

"நான் ஒரு பேஷண்ட்!"



"சரி சொல்லுங்க! உடம்புக்கு என்ன?" மகாலஷ்மி சீரியஸாகக் கேட்டாள்.

"அதை நீங்கதான் கண்டு பிடிக்கணும்!" அவன் கடகடவென சிரித்தான்.

"சாமி... விளையாட்டு வேண்டாம்! சீரியஸா கேட்கிறேன்! சொல்லுங்க? என்ன பண்ணுது? என்ன நோய்?" அவள் கையெடுத்துக் கும்பிட்டாள்.

"சரியா சாப்பிட முடியலே! தூங்க முடியலே!"

"இந்தப் படுக்கையில ஏறிப்படுங்க!" அவள் சொல்ல... அவன் படுத்தான்.

அவள் ஸ்டெதாஸ்கோப் கொண்டு நெஞ்சில் அங்கங்கே வைத்து ஆராய்ந்தாள்.

"வேலைப் பார்க்க முடியலே! சிந்திக்கவே முடியலே!" குறும்போட கூற...

அவள் அவனை ஆத்திரமாய் பார்க்க...

"எனக்கு வந்திருப்பது... காலாகாலத்துல வரக் காதல் நோயான்னு கண்டு பிடிங்க, டாக்டர்? நல்ல மருந்தாக் கொடுங்க டாக்டர்!

'இவன் வம்புக்காரன்! ஏதோ வம்பு பண்ணவே வந்திருக்கிறான்!' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

"நல்லா கவனியுங்க, மிஸ்டர்! இங்கே காதல் நோய்க்கு மருத்துவம் பார்க்கப்படும்னு போர்டு போட்டிருக்கா? இல்லையே! அதை கவனிக்காமல் உள்ளே நுழைஞ்சிட்டீங்க போல! இந்த ஹாஸ்பிட்டல்ல உடல் சம்பந்தமான நோய்க்குத்தான் மருத்துவம் பார்க்கப்படும்! மன சம்மந்தமான நோய்க்கெல்லாம் மருத்துவம் பார்க்கத்

தெரியாது! அதுவும் இல்லாமல் நான் ஹார்ட் ஸ்பெஷ லிஸ்ட்! தெரியுமா?''

''அப்படியா? டாக்டர்... டாக்டர்... என் இதயம் உங்க கிட்ட இருக்கா? இல்லையா? இல்ல இதயமில்லாமல் இருக்கேனான்னு பாருங்க! என்னால் என் இதயத்தை ஒருத்தி களவாடிட்டுப் போயிட்டாள்!'' அவன் எழுந்து கொண்டான்.

''தொலைத்தப் பொருளை தொலைத்த இடத்தில் தான் தேடணும்!'' மகாலஷ்மி இடக்காக சொல்ல...

''ஆமாம்! அதான் சரியான இடத்துக்கு வந்திருக்கேன்! கொடுத்துடுங்க, டாக்டர்? என் இதயத்தைக் கொடுத் துடுங்க, டாக்டர்? என் இதயம் உங்கக்கிட்டதான் இருக்கு! என் இதயத்தை திருடியவள் நீங்கதான்! என் இதயம் கவர்ந்த கள்ளி நீங்க தான்!'' அவன் உளற...

''ப்ளீஸ் மிஸ்டர்... சீரியஸாக் கேட்கிறேன்! யார் நீங்க? நீங்க சொல்லலேன்னால் இன்னும் கொஞ்ச நேரத்தில் எனக்கு பைத்தியம் பிடிச்சுடும்! என்னைக் காப்பாற் றுங்கள்!'' அவள் கெஞ்ச...

''என்னைத் தெரியலையா?''

''ம்கூம்...'' அவள் தலையசைத்தாள்.

''நான் நவநீத்...!'' அவன் சொல்ல...

''ஓ... கலெக்டர்! நிஜமாவா? இந்த ஜீன்ஸ் பேண்ட், டீ சர்ட்ல... ஏதோ வம்பு பண்ண வந்த ரவுடின்னு இல்லே நினைச்சிட்டேன்! விழுப்புரம் மாவட்ட செய்தியில உங்களை நிறைய முறைப் பார்த்திருக்கேன்! ஆனாலும் இந்த கெட்டப்புல எனக்கு அடையாளமே தெரியல... தெரியுமா?'' அவள் ஆச்சரியமாய் சொன்னாள்.



''ஒரு மாவட்டத்தை நிர்வகிக்கற கலெக்டர் நடந் துக்கறாப்போலவா நடந்துகிட்டீங்க? அநியாயம் சார்! இது கொஞ்சம் ஓவர் தான்! இதுவரைக்கும் போட்ட கெட்டப்பு லேயே இந்த பொறுக்கி கெட்டப் தான் முதல் இடத்தைப் பெறும்ன்னு நினைக்கிறேன்!''

''நீங்க என் தூரத்து உறவுதான்! உங்க கிட்ட கொஞ்சம் விளையாடிப் பார்க்கக் கூடாதா?''

''விளையாடலாம்! ஆனால் இப்படியா காதல் நோய்... இதயம் இருக்கா இல்லையான்னு விளையாடுவாங்க! ஆமா என்ன இந்த நேரத்துல?''

''இந்த கள்ளக்குறிச்சி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில புதுசா கட்டிய கட்டிடம் இன்று திறப்பு விழா! அந்த பங்ஷன்ல கலந்துட்டு... அப்படியே பழைய ப்ரண்டைப் பார்த்துட்டு... உங்களைப் பார்க்க வந்தேன்!''

''இந்த ட்ரஸ்லதான் ஸ்கூலுக்குப் போனீங்களா?''

''ஆனாலும் உங்களுக்கு வாய்க் கொழுப்பு அதிகம் தான், மகா! யாராவது இப்படிப் பொறுக்கி போல... பொறுப்பான கலெக்டரா இருந்துட்டு பங்ஷன்ல கலந்துக்குவாங்களா? உங்களுக்காக போட்ட வேஷம் இது! இப்போதைய பெண்கள் நாகரீகம் என்ற பெயரில் சாயம் போன பேண்ட்டும், இது போல டீ சர்ட்டுலேயும் வந்தால் தானே திரும்பிப் பார்க்கறீங்க! அதான்!'' நவநீத் சொல்லிவிட்டு அழகாய் சிரிக்க...

அவள் தலையில் அடித்துக் கொண்டாள்.

''உட்காருங்க! என்ன சாப்பிடறீங்க? காபி? கூல்ட் ரிங்ஸ்?''

"மகாலஷ்மி... பயங்கரமா பசிக்குதுங்க! சாப்பிட்டாக வேணும்!"

"சரி எந்த ஓட்டலுக்குப் போகலாம்? அபிப்ராயம் சொல்லுங்களேன்?"

"ஒரு கலெக்டர் சாதாரணமா ஓட்டலுக்கு எல்லாம் போய் சாப்பிட முடியுமா? அப்புறம் போற வர ஆளெல்லாம் என் அங்கேயே சல்யூட் பண்ற போர் கூட மனு எழுதிட்டு வந்து நீட்டலாம்! அந்த இனிமையான தொல்லையெல்லாம் எனக்கு ஏற்படணுமா?"

அவன் மௌனமாய் யோசிக்க...

"என்ன யோசனை?"

"சாப்பாட்டை இங்கே வரவழைக்கவா?"

"இந்த மருந்து நெடியில சாப்பிட முடியுமா, மகா? உங்க வீட்டுக்கு என்னைக் கூப்பிட மாட்டீங்களா?" அவன் கேட்க...

"நிஜமாவா கேட்கறீங்க?"

"பின்னே பொய்யா? அங்கிளைக் கூடப் பார்க்கணும்!"

"எதுக்கு?"

"அவர்கிட்ட நான் ஒரு மனு கொடுத்திருந்தேன்! அது சம்மதமா?"

"ஆஹா... மனுதாரரே மனுக் கொடுத்தாரா? என்ன ஆச்சரியம்? என்ன?"

அவன் மௌனமாய் இருக்க...

"நீங்க சொல்ல வேண்டாம்! வாங்க போகலாம்!"

கார் டிரைவருக்கு உத்தரவு இட்டு விட்டு... மகாலக்ஷ்மியின் காரில் ஏறினான் நவநீத்.



வீட்டில் நவநீத்துக்கு பயங்கர வரவேற்பு கிடைத்தது. நாகேந்திரன் ஓடி வந்து அன்போடு கட்டிக் கொண்டார். சாரதா பார்த்துப் பார்த்து பரிமாறினாள்.

அவன் திருப்தியாய் உண்டான்.

பின் நாகேந்திரன்... நவநீத்தை தன் அறைக்கு அழைத்துப் போனார்.

"மணி பத்தாகுதேப்பா! இரவு தங்கிட்டுப் போகலாமே!"

"இல்லே அங்கிள்! அம்மா, தங்கையெல்லாம் காத்திருப்பாங்க! டாடி! வேறு ஊரில் இல்லை! நான் போகணும்!"

"சரி உங்க விருப்பம்!"

"அங்கிள் நான் ஒரு விஷயம் சொன்னேனே... அதைப் பற்றி யோசித்தீர்களா?"

"எனக்கு பூரண விருப்பம், நவநீத்! ஆனால் மகாவின் விருப்பம் வேண்டுமல்லவா?"

"என்ன சொல்றாங்க? நான் வேண்டாம் என்கிறாங்களா?"

"ஐய்யோ... அதெல்லாம் இல்லேப்பா! கல்யாணத்துக்கு என்ன அவசரம்? கொஞ்ச நாள் ஆகட்டும் என்கிறாள்."

"நான் காத்திருக்கிறேன், அங்கிள்!"

"மகாவிடம் இது விஷயமா பேசறேன், நவநீத்!"

"தேங்க்ஸ், அங்கிள்! அங்கிள்.. அம்மா இன்னும் ஒன்று கூட ப்ரியப்படுகிறார்கள்! என் தங்கை தீபாவிற்கு அருணை முடிக்கலாமா என்று கேட்கிறார்கள்! உங்கள் வீட்டில் பெண் எடுக்கவும், கொடுக்கவும் என்னைப் பெற்றவர்களுக்கு விருப்பம் அங்கிள்! அப்படியே அருணிடமும்

கேளுங்கள்! நான் கிளம்பறேன், அங்கிள்! நல்ல பதிலாய் எதிர்பார்க்கிறேன், அங்கிள்! மகாலஷ்மியிடம் பக்குவமாய் பேசுங்கள், அங்கிள்! அவளை எனக்கு ரொம்பவே பிடித்திருக்கிறது! மகா எனக்கு வேணும், அங்கிள்! ப்ளீஸ் அங்கிள்... உங்களின் நல்ல பதிலுக்காய் காத்திருப்பேன், அங்கிள்!'' என்று உருகலோடு கூறினான். பின்...

நவநீத் சொல்லிக் கொண்டு கிளம்பினான்.

நாகேந்திரனும் சாரதாவும் மனதிற்குள் பெரிய கற்பனை கோட்டையே கட்டினார்கள். அது மண் கோட்டையாய் இடிந்து விழுந்து, சரியப் போகிறது எனத் தெரியாமல்!



# 10

இனிய காலைப் பொழுது.

மகாலட்சுமி, அருண் இருவரும் தோட்டத்திலேயே காலை ஓட்டத்தை முடித்துக் கொண்டு... அங்கு போடப் பட்டிருந்த பென்சில் அமர்ந்து வியர்வையை டவலால் ஒற்றி எடுத்தனர்.

அப்போது நாகேந்திரன் அங்கே வந்து மகாலஷ்மியின் அருகில் அமர்ந்தார்.

வேலைக்காரி காபி எடுத்து வந்து நீட்ட... மூவரும் அருந்தினர். அவள் அங்கிருந்து அகன்ற உடன் தொண்டையை சரி செய்து கொண்டு பேச ஆரம்பித்தார், நாகேந்திரன்.



''மகா... நேற்று நவநீத் கல்யாண விஷயமாய் மீண்டும் ஞாபகப்படுத்துகிறார்ம்மா! மகாலஷ்மியிடம் பேசுங்கள்... நல்ல பதிலாய் சொல்லுங்கள்... என்று கெஞ்சுகிறார். உன் மேல் அளவுக்கதிகமான பிரியம் வைத்திருக்கிறார். அடுத்ததாய் அவருடைய தங்கையை நம் அருணுக்கு மணம் முடிக்க அவர்கள் வீட்டில் பிரியப்படுகிறார்களாம்! என்ன சொல்ல, மகா?''

அருண் முகம் இருண்டது.

மகாவோ குஷியாகி ''ஏன் டாடி யோசிக்கறீங்க? அருணுக்கு நவநீத்தோட தங்கையை உடனடியா பேசி முடிச்சிடுங்க!'' என்றாள்.

''டாடி... எனக்கென்ன அவசரம்? முதலில் இவளை தள்ளி விடும் வேலையைப் பாருங்கள்!'' கோபத்தோடு சொன்னான்.

''ம்கூம்... முதலில் உனக்குத்தான் திருமணம்! நீ தான் பெரியவன்!''

''பெரியவன் தான்! ஒரே ஒரு வயதுதான் வித்தியாசம்! அதுவும் இல்லாமல் பெண் பிள்ளையை வீட்டில் வைத்துக் கொண்டு... ஆண் பிள்ளைக்கு திருமணம் செய்வார்களா?''

''அதெல்லாம் செய்யலாம்!'' மகாலஷ்மி வாதிட...

''மகாவுக்கு வயசாகிகிட்டே போகுது! அது உங்களின் கண்களுக்குத் தெரியலையா? கருத்தில் படவில்லையா? என் திருமணத்துக்கு என்ன அவசரம்? முதலில் மகாவை கலெக்டர் கிட்ட தள்ளி விடற வேலையைச் செய்யுங்க, டாடி! படிச்சி முடிச்சிட்டாள்! பணத்துக்கு அலையப் போறீங்களா? இல்லை மாப்பிள்ளைக்கு அலையப் போறீங்களா? எதுவுமே இல்லை! நல்ல மாப்பிள்ளை!

கேளுங்கள்! நான் கிளம்பறேன், அங்கிள்! நல்ல பதிலாய் எதிர்பார்க்கிறேன், அங்கிள்! மகாலஷ்மியிடம் பக்குவமாய் பேசுங்கள், அங்கிள்! அவளை எனக்கு ரொம்பவே பிடித்திருக்கிறது! மகா எனக்கு வேணும், அங்கிள்! ப்ளீஸ் அங்கிள்... உங்களின் நல்ல பதிலுக்காய் காத்திருப்பேன், அங்கிள்!'' என்று உருகலோடு கூறினான். பின்...

நவநீத் சொல்லிக் கொண்டு கிளம்பினான்.

நாகேந்திரனும் சாரதாவும் மனதிற்குள் பெரிய கற்பனை கோட்டையே கட்டினார்கள். அது மண் கோட்டையாய் இடிந்து விழுந்து, சரியப் போகிறது எனத் தெரியாமல்!



## 10

இனிய காலைப் பொழுது.

மகாலட்சுமி, அருண் இருவரும் தோட்டத்திலேயே காலை ஓட்டத்தை முடித்துக் கொண்டு... அங்கு போடப் பட்டிருந்த பென்சில் அமர்ந்து வியர்வையை டவலால் ஒற்றி எடுத்தனர்.

அப்போது நாகேந்திரன் அங்கே வந்து மகாலஷ்மியின் அருகில் அமர்ந்தார்.

வேலைக்காரி காபி எடுத்து வந்து நீட்ட... மூவரும் அருந்தினர். அவள் அங்கிருந்து அகன்ற உடன் தொண்டையை சரி செய்து கொண்டு பேச ஆரம்பித்தார், நாகேந்திரன்.



''மகா... நேற்று நவநீத் கல்யாண விஷயமாய் மீண்டும் ஞாபகப்படுத்துகிறார்ம்மா! மகாலஷ்மியிடம் பேசுங்கள்... நல்ல பதிலாய் சொல்லுங்கள்... என்று கெஞ்சுகிறார். உன் மேல் அளவுக்கதிகமான பிரியம் வைத்திருக்கிறார். அடுத்ததாய் அவருடைய தங்கையை நம் அருணுக்கு மணம் முடிக்க அவர்கள் வீட்டில் பிரியப்படுகிறார்களாம்! என்ன சொல்ல, மகா?''

அருண் முகம் இருண்டது.

மகாவோ குஷியாகி ''ஏன் டாடி யோசிக்கறீங்க? அருணுக்கு நவநீத்தோட தங்கையை உடனடியா பேசி முடிச்சிடுங்க!'' என்றாள்.

''டாடி... எனக்கென்ன அவசரம்? முதலில் இவளை தள்ளி விடும் வேலையைப் பாருங்கள்!'' கோபத்தோடு சொன்னான்.

''ம்கூம்... முதலில் உனக்குத்தான் திருமணம்! நீ தான் பெரியவன்!''

''பெரியவன் தான்! ஒரே ஒரு வயதுதான் வித்தியாசம்! அதுவும் இல்லாமல் பெண் பிள்ளையை வீட்டில் வைத்துக் கொண்டு... ஆண் பிள்ளைக்கு திருமணம் செய்வார்களா?''

''அதெல்லாம் செய்யலாம்!'' மகாலஷ்மி வாதிட...

''மகாவுக்கு வயசாகிகிட்டே போகுது! அது உங்களின் கண்களுக்குத் தெரியலையா? கருத்தில் படவில்லையா? என் திருமணத்துக்கு என்ன அவசரம்? முதலில் மகாவை கலெக்டர் கிட்ட தள்ளி விடற வேலையைச் செய்யுங்க, டாடி! படிச்சி முடிச்சிட்டாள்! பணத்துக்கு அலையப் போறீங்களா? இல்லை மாப்பிள்ளைக்கு அலையப் போறீங்களா? எதுவுமே இல்லை! நல்ல மாப்பிள்ளை!

இவளை விரும்புகிறவரும் கூட! நவநீத்தை விட இவளுக்கு நல்ல மாப்பிள்ளை நீங்க தேடிட்டுப் போனாலும் கிடைக்க மாட்டார். அதிர்ஷ்டம் ஒரு தடவை தான் கதவைத் தட்டும். நாம் சட்டென்று கதவைத் திறந்துடணும்! இல்லையேல் தூரே தூரே விலகி ஓடி விடும்!'' அருண் சொல்லி முடிக்க...

கண்களில் கனல் தெறிக்க முறைத்தாள், மகாலஷ்மி.

''உன் வேலையைப் பார்!''

''மகா... நீயுமே உன் வேலையைப் பார்ப்பது நல்லது!''

''நான் என் வேலையைத்தான் பார்க்கிறேன்! அண்ணாவுக்குக் காலாகாலத்துல கல்யாணம் ஆகணும்ன்னு ஒரு தங்கை விரும்பறது தவறா? பொண்ணு டாக்டருக்குப் படித்தவளாம்! நீ வெறும் டிகிரி மட்டும்தான்! உன்னை விரும்பி... உனக்கு மணம் முடித்து வைக்க... அவர்கள் பிரியப் படும்போது... இந்த நல்ல வாய்ப்பை தவற விடலாமா, அண்ணா?''

''ஏய் அடுத்தவர்கள் விஷயத்தில் தேவையில்லாமல் மூக்கை நுழைக்காதே!'' அருண் மகாலஷ்மியிடம் அதிகமான கோபத்தை உமிழ்ந்தான்.

''அருண்... ஏன் இத்தனை கோபம்? அவள் உனக்கு கெடுதியா சொல்கிறாள்?'' நாகேந்திரன் அருணிடம் கேட்க...

''பின்னே என்ன டாடி? இவள் எதுக்காக கல்யாணத்தை தள்ளிப் போடுகிறாள்? அவள் இஷ்டத்துக்கு விட்டு விட்டு... அவளுக்கு திமிர் ஜாஸ்தியாயிடிச்சி!''

''சரி. இது விஷயமா ரெண்டு பேரும் சண்டைப் போட்டுக்க வேண்டாம்! போய் நல்லா யோசிங்க! பிறகு மெதுவா பதில் சொல்லுங்க!''



அருணும் மகாலஷ்மியும் சண்டைக் கோழியாய் சிலிர்த்துக் கொண்டு அங்கிருந்து அகன்றனர்.

நவநீத்... அழகன்தான்! கம்பீரமானவன் தான்! நிரம்ப கற்றவன் தான்! நல்ல வேலையில் உள்ளவன் தான்! ஒரு மாவட்டத்தையே திறம்பட நிர்வகிக்கிறவன் தான்!

ஆனால் உள்ளே ஆதித்யன் உயிராய், ஓவியமாய் இருக்கும்போது... எப்படி நவநீத்தை மணந்துக் கொள்ளுவாள்?

ஆதித்யன் அவளை முழுமையாய் ஆட் கொண்டு இருக்கும்போது... அவன் மேலான நேசம் நெஞ்சில் வேரோடி விட்ட பின்பு... எப்பேர்ப்பட்ட மன்மதனே வந்தாலும் அவளால் ஒத்துக் கொள்ள முடியாது.

அவள் மட்டுமல்ல... காதலில் விழுந்த அத்தனைப் பேரும் செய்யும் செயல் தானே இது!

இரண்டு நாளில் ஆதித்யன் மகாலஷ்மியிடம் தனிமையில் அகப்பட்டுக் கொண்டான்.

''ஆதி... யோசித்தீர்களா?'' என்று மொட்டையாய் கேட்க...

''எதைப் பற்றி?''

''உங்கள் மேலான எனது நேசத்தைப் பற்றி!''

''எனக்கு உன் மீது நேசம் இல்லை! அதனால் அதை அன்றே மறந்து விட்டேன்!'' அவன் சாதாரணமாய் சொல்ல...

''பொய் சொல்லாதீர்கள், ஆதி! காதலை தன்னுள்ளே போட்டு புதைத்துக் கொள்ள முடியாது! விதை எவ்வாறு பூமியை பிளந்து செடியாய் வெளிவருகிறதோ... அது போல நேசமும் மனதைக் கிழித்துக் கொண்டு என்றாவது வெளிவந்து விடும். அதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.''

''அநாவசியமானப் பேச்சு வேண்டாம்! நான் போகிறேன்!'' அவன் அவசரப்பட...

''ஒரு நிமிடம் நில்லுங்கள்! நான் உங்களிடம் இன்று பேசியாக வேண்டும். நவநீத்தை தெரியுமா?''

''எந்த நவநீத்?''

''கலெக்டர் நவநீத்!''

''ரொம்ப நல்லாத் தெரியும்! அருமையான மனிதர். இரண்டு முறை சந்தித்து இருக்கிறேன். அடுத்ததாய் நம்ம காலேஜ் என்.எஸ்.எஸ். கேம்பின் போது வந்து கலந்து கொண்டு இருக்கிறார். அருகில் அமர்ந்து பேசியிருக்கிறேன்! கலெக்டர் என்ற தலைக்கனம் கொஞ்சமும் இல்லாமல் எளிமையாய் பழகுகிறவர்! பேசுகிறவர்! ஆமாம் அவருக்கென்ன?'' ஆதித்யன் கேட்க...

''அந்த மனிதருக்கு என்னை மணந்து கொள்ள விருப்பமாம்! அப்பாவிடம் என்னை திருமணம் செய்து கொடுக்க சொல்கிறார். அடுத்ததாய் அவரின் தங்கையை எனது அண்ணாவுக்குக் கொடுக்கப் பிரியப்படுகிறார்கள்!''

''ரொம்ப சந்தோசம்! அழகான மாப்பிள்ளை! அருமையான, வித்தியாசமான மனிதர். அவரோடு வாழ கொடுத்து வைத்திருக்க வேண்டும்!''

''எனக்கு உங்களோடு வாழத்தான் பிடித்திருக்கிறது!''

''மடச்சி போல பேசாதே! நல்ல வாய்ப்பு! நழுவ விட வேண்டாம்!''

''என் நெஞ்சு முழுக்க நீங்க இருக்கும்போது... எப்படி வேறு ஒருவரை மணப்பேன்? நீங்க புரிஞ்சிக்கவே மாட்டீங்களா ஆதி?'' என்று கோபமாய் கேட்க...

''இந்த வீண் பேச்செல்லாம் வேண்டாம்! எப்பேர்ப்பட்ட மாப்பிள்ளை கட்டிக்கக் காத்திருக்கும்போது...



வீணாக இந்த அநாதையை நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம்!''

''என்னை மறுக்க என்ன காரணம்? நீங்க கல்யாணமே செய்துக்கப் போறதில்லையா?''

''செய்துக்குவேன்!''

''அது நானா இருந்தால் என்ன? எனக்கு அழகில்லையா? படிப்பில்லையா? நல்ல குடும்பத்தில் பிறக்காதவளா? அல்லது நடத்தை சரியில்லாதவளா?''

அவள் இப்படிக் கேட்டதுதான் தாமதம்...

''ஏய்...'' என்று சீறினான்.

''என் மீது அன்பு இருப்பதால் தானே இத்தனை கோபம்? ப்ரியம் இருப்பதால்தானே இத்தனை சீறல்? சரிதானே! சொல்லுங்க ஆதி? உங்களை மணக்க எனக்கு தகுதியில்லையா?''

''ஆமாம்!'' பட்டென்று சொல்ல...

''என்ன தகுதி, ஆதி?'' மகாலஷ்மி கத்தலோடு கேட்டாள்.

''என்னை மணந்து கொள்பவள்... ஒன்று அநாதையா இருக்கணும்! அல்லது விதவையா இருக்கணும்!''

''என்ன ஆதி பேசறீங்க? நான் என்ன செய்வேன்? கடவுள் என்னை அநாதையா இருக்காப்போல படைக்கலையே! அது என் தப்பா? நீங்க பேசறது சரியில்லே தெரியுமா? உங்களை மணந்துக்க அநாதையாகவும்... விதவையாக மட்டும் தான் இருக்கணுமா? வேற ஏதாவது தகுதியை சொல்லுங்களேன் ஆதி?''

''ஊனமான பெண்ணாய் இருந்தால் மணந்துக் கொள்வேன். கை, கால் ஊனமானவளோ அல்லது

கண்களிரண்டும் தெரியாதவளாய் இருந்தாலோ கட்டிக்க எனக்கு பரிபூரண சம்மதம்!''

ஆதித்யன் சொல்லி முடிக்க... மகாலஷ்மி மலர்ச்சியோடு சொன்னாள்.

''இது முடியும் ஆதி! இது என்னால் முடியும் ஆதி!'' அவள் சொல்ல...

''என்ன உளறுகிறாய்?'' அவன் மிரண்டு போனான்.

''எனது கையையும் காலையும் ஒடித்துக் கொண்டு ஊனமுள்ளவளாய் என்னால் ஆக முடியும், ஆதி!''

''ஏய் கிறுக்கி... என்ன பேசறே?''

''அல்லது எனது இரண்டு கண்ணையும் குருடாக்கிக் கொள்ள எனக்குத் தெரியும், ஆதி!''

''ஏய்... ஏய்...'' அவன் கோபமாய்க் கத்த...

''உங்களை மணந்துகொள்ள மகிழ்ச்சியோடு ஊனமாவேன், ஆதி! உங்களை அடைய சந்தோசமாய் என் கண்களை குருடாக்கிக் கொள்வேன், ஆதி!'' அவள் சொல்ல... அவன் பயந்து போனான்.

''நான் உங்களை உயிருக்குயிரா நேசிக்கிறேன், ஆதி! என் நேசத்தின் ஆழம் உங்களுக்குப் புரியலே! என் பாசத்தின், அன்பின், ஆசையின் அளவு புரியாமல் ஏதேதோ பேசறீங்க! நான் உங்களை அடையாமல் விட மாட்டேன்! எனக்கு நீங்க வேணும், ஆதி! இந்த ஜென்மத்துக்கு மட்டுமல்ல! ஏழேழு ஜென்மத்துக்கும் எனக்கு காதலனாகவும் கணவனாகவும் நீங்க வேணும்! நிச்சயமாக!''

மகாலஷ்மி அழுத்தம் திருத்தமாய் சொல்லி விட்டுச் செல்ல... ஆதி பேயறைந்த கணக்காய் நின்றான்.



## 11



மகாலஷ்மி உள்ளே நுழையும் போது... அப்பா சத்தமிட்டுக் கொண்டிருந்தார்.

''ஏன்டா... உனக்கு புத்தியே கிடையாதா? - நம்ம அந்தஸ்து என்ன? நம்ம உயர்வு என்ன? நம்மோட அந்தஸ்துக்கும் உயர்வுக்கும் ஏற்றாற் போல... ஒரு பெண்ணைப் பார்த்து கட்டி வைக்கலாம் என்று இருந்தால்... எவளையோ காதலிச்சிட்டு வந்து நிற்கிறாயே!''

அருணைத்தான் நாகேந்திரன் திட்டிக் கொண்டிருந்தார்.

''ஏன் இப்படி என் மானத்தை வாங்கறே? வெள்ளைத் தோலைப் பார்த்ததும் மயங்கி விட்டாயா? தோல் வெள்ளையா இருந்தால் போதுமா? மனம் வெள்ளையா இருக்க வேண்டாமா? நான் விசாரிச்ச வரைக்கும் அந்தப் பொண்ணுக்கு நல்ல குணமிருக்கறதாவும் புத்தியிருக்கற தாவும் தெரியலே! நீ எதைப் பார்த்துதான் மயங்கினே! அறிவு கெட்டவனே! மடையா... மடையா!'' சுதியேறியது, அவரது குரலில்!

''எனக்கு அவளை ரொம்பப் பிடிச்சிருக்குப்பா!'' அருண் பயந்து கொண்டே சொன்னான்.

''என்னடா பிடிச்சிருக்கு? உன்னைப் போலத்தானே, நம்ம மகாலஷ்மியும்! அவள் எப்படி நல்லப் பிள்ளையாய் இருக்கிறாள்?''

மகாலஷ்மியின் மனம் வாடியது. அப்பாவின் நம்பிக்கையை இப்படி காற்றில் பறக்க விடுகிறோமே!

அவருக்கு என் விஷயம் தெரிந்தால்... எந்த அளவு இடிந்துப் போவாரோ என்று கலங்கினாள்.

"நானும் சின்னதுல இருந்து பார்க்கிறேன். படிப்புலன்னா லக்காவும்... புத்தியில கட்டையாவும் வளர்ந்திருக்கியே!"

"ஸாரி... ஸாரிப்பா..." அவன் முனகினான்.

"விசாரித்த வரைக்கும் பொண்ணும் வாயாடி! அப்பனும் ஆயியும் சரியான ரவுசு பிடிச்ச ஜனங்களாமே! எப்படிடா விழுந்தே? கருமம்! கருமம்!"

"அப்படியெல்லாம் இல்லேப்பா!"

"அப்போ நம்ம மானேஜர் பொய் சொல்றாரா?"

"ஒண்ணுக்கும் இல்லாதவனிடம் கூட பெண் கேட்டு நிற்பேன்! அது போல கழிசடைகள் கிட்டே எல்லாம் போய் பெண் கேட்டு நிற்க மாட்டேன்! அவளை மறந்துடு!"

"ப்ளீஸ் டாடி..!"

"நவநீத் தங்கைதான் உனது மனைவி! நல்லா மனசுல வச்சுக்கோ!"

"என்னால் முடியாது டாடி! நேசித்த பெண்ணை அம்போன்னு விட்டுட்டு... அடுத்தவளை மணக்க மாட்டேன்!"

"எதிர்த்துப் பேசற அளவு துணிச்சல் வந்துடிச்சா?"

"டாடி..."

"நீயா பேசறியா? இல்லே அவள் உனக்கு பாடம் நடத்தி... இப்படி பேச வைத்தாளா? கல்யாணத்துக்கு முன்பே இப்படி உன்னை ஆட்டி வைப்பவள்... அது முடிந்து விட்டால் இன்னும் என்னென்ன விளைவுகளை செய்வாளோ! நீயும் அவளின் பேச்சை கேட்டுக்



கொண்டு... எப்படி குதிப்பாயோ! அதனால் நான் ஒரு நாளும் இதுக்கு ஒத்துக் கொள்ள மாட்டேன்! அவளை மறந்துவிட்டு... வேறு வேலையிருந்தால் பார், அருண்!"

"இது ஒன்றுக்கு மட்டும் மறுத்துடாதீங்க. டாடி! நோ சொல்லிடாதீங்க, டாடி! ப்ளீஸ்..." அருண் கெஞ்சினான்.

"என்னடா நோ சொல்லாதீங்க? நம்ம மகாலஷ்மியைப் பார்! படிச்சது டாக்டருக்குன்னாலும் டாக்டர் தொழிலிலும் கெட்டியா இருக்கா! கல்லூரியையும் பொறுப்பா நிர்வகிக்கிறா! அவளுக்கு இருக்க அறிவுல... புத்தியில... ஒரு டென் பர்சன்டாவது இருக்க வேண்டாம்?"

அப்பா கூறவும் மகாவின் முகம் கூம்பிப் போனது.

"உன்னைப் போல் எல்லாம் என் பொண்ணு தப்பு பண்ண மாட்டா, அருண்! நான் காட்டற... நல்ல... உயர்ந்த அந்தஸ்துல உள்ள பிள்ளையைத்தான் பண்ணிப்பா. என் மானத்தை அவள்தான் கட்டிக் காப்பாற்றப் போகிறாள்!"

நாகேந்திரனின் நம்பிக்கைக்கு... பயந்து... அச்சத்துடன் அவரை நோக்கினாள் மகாலஷ்மி!

"என் செல்லக் குட்டி... வாடா...! உன் அண்ணா பண்ணிட்டு வந்த காரியத்தைப் பார்த்தாயா? அவன் கிட்ட கை நீட்டி சம்பளம் வாங்கற மிஸ்ஸை காதலிச்சிட்டு வந்திருக்கான். துரைக்கு அவளைக் கல்யாணம் பண்ணி வைக்கறதாம்! கேட்கிறான்!"

மகா அருகில் போனாள்.

பின்னர் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசினாள்.

"நீங்க என்ன டாடி செய்யப் போறீங்க? அவன் நேசித்த பெண்ணை கட்டி வைக்கப் போறீங்களா? இல்லை...

அவள் முடிக்கும் முன்னர் நாகேந்திரன் சொன்னார்.

''எப்படிம்மா? எப்படி? இவன் போய் கண்ணைத் தொறந்துகிட்டே சாக்கடையில விழுவான்! அதை எப்படி பார்த்துட்டு இருக்க?''

''அண்ணா... இதுவரை எதுவுமே உங்களிடம் பிரியப் பட்டு கேட்டதில்லையே, டாடி?''

''பொண்ணு, பொருளா இருந்தால் வாங்கித் தந்துட லாம்! இது வாழ்க்கைம்மா! நல்ல வாழ்க்கையை ஏற் படுத்திக் கொடுப்பதுதானே... ஒரு நல்லத் தகப்பனுக்கு அழகு?''

''அப்போ அவன் இஷ்டப்பட்ட பெண்ணைக் கட்டி வைக்க மாட்டீங்களா?''

''மாட்டேம்மா! அவனுக்கு இந்த வயசுல நல்லது எது? கெட்டது எது?ன்னு தெரியாதும்மா! நாம்தான் கெட்டதை விலக்கி... நல்லதை ஏற்படுத்தித் தரணும்!''

சாரதா எல்லாவற்றையும் காது கொடுத்து கேட்டுக் கொண்டிருந்தவள்... வாயில் முந்தானையை வைத்து அழுகையை அடக்கிக் கொண்டிருந்தாள்.

''அண்ணா பாவம்ப்பா!''

''கல்யாண விஷயத்துல பாவ புண்ணியம் பார்க்கக் கூடாது மகா! பாவம் பார்ப்பது நாமே அவனை பாழும் கிணற்றில் இடித்துத் தள்ளுவதற்கு சமம், தெரியுமா?''

''நாளைக்கு உங்க இஷ்டப்படி... நல்லப் பெண்ணா பார்த்து கட்டி வைத்தாலும்... அவன் அவளோட சந் தோசமா வாழ மாட்டான்!''

''ஏன்?''



''மனசுல ஒருத்தி இருக்கும்போது... கட்டிகிட்ட வளோட எப்படி குதூகலமா குடும்பம் நடத்த முடியும்?'' மகாலஷ்மி கேட்க... அவன் யோசித்தான்.

''அதற்காக என்ன செய்ய?''

''டாடி... அந்தப் பெண்ணோட வாழப் போறது, அவன்தானே! அவன் இஷ்டத்துக்கே விட்டுடுங்க! நீங்க பார்த்து கட்டி வைக்கற பெண்ணிடம்... சின்ன குறை இருந்துட்டாலும் கடைசி வரை அதைப் பெரிது படுத்தி உங்களால்தான்... உங்களால்தான் குற்றம் சொல்லிட்டே இருப்பான்! தேவையா? யோசிங்க, டாடி! இத்தனை வயசாகுது! எது நல்லது? எது தீயதுன்னு அண்ணாவுக்கும் தெரியும்! அவன் ஆசைப்பட்ட பெண்ணையே திருமணம் செய்து வைத்து... சந்தோசமா வாழ வழி பண்ற வேலையைப் பாருங்க!''

''ஆமாங்க! அவன் விருப்பத்துக்கே விட்டுடுங்க! மகாலஷ்மி சொல்றதுதான் சரிப்படும்!''

சாரதா... இவ்வளவு நேரம் மௌனமாய் கண்ணீர் சிந்தியவள்... கண்களைத் துடைத்துக் கொண்டு அருகில் வந்து சொன்னாள்.

''அந்தப் பொண்ணு மேல அண்ணா பைத்தியமா இருக்கான். பிரிக்க வேண்டாம்! ப்ளீஸ் டாடி!'' மகாலஷ்மி கெஞ்சினாள்.

''என்னமோ போ! நீயும் அவன் கூட கூடிட்டு எதையாவது உளறு! நல்லப் பெண்ணாய் இந்த வீட்டுக்கு மருமகளாய் வந்தால்... குடும்பத்தை பிரிக்க மாட்டாள். உன்னோடவும் சுமூகமான உறவு கொண்டாடுவாள்.''

''அண்ணி எப்பேர்ப்பட்ட மோசமா இருந்தாலும்... எனக்கு நீங்களும் அம்மாவும் இருக்கீங்களே, டாடி! அது

போதும், டாடி! அண்ணாவும் அவங்களை அப்படியெல்லாம் விட்டுட மாட்டான். நம்ம வீட்டுக்கு வந்தால் அவங்களும் திருந்தலாம், இல்லையா?''

மகாலஷ்மி மனம் மகிழக் கூறினாள்.

''சரிம்மா! சீக்கிரமே இவனுடைய திருமணத்தை முடிச்சிடலாம்! பிறகு உடனே உன்னோடதையும் செய்துடலாம்! அப்புறம் ஏன்டா முகத்தை உம்முன்னு வச்சிருக்கே? அதான் சம்மதிச்சிட்டேனே! சந்தோசமா இரேன்!''

''அண்ணா கவலைகளையெல்லாம் மறந்து... அண்ணியோட ஓடி பிடிச்சி விளையாடறதா கனவு கண்டுட்டு தூங்கு!'' மகாலஷ்மி சிரிப்போடு கூற...

அருண் மலர்ந்தான்.

''ஆஹா... அப்படியே மாப்பிள்ளை களை வந்துடிச்சி... இல்லையா டாடி?''

''தேங்க்ஸ் மகா... தேங்க்யூடா...!'' என்று அருண் அவளின் கைகளை கெட்டியாய் பிடித்துக் கொண்டான்.

தன் காதலுக்கு... என்றாவது அருண் உதவி தேவை என்று... டாடியிடம் அவனுக்காய் பரிந்து பேசியது... அவளுக்கே சிரிப்பை வரவழைத்தது.

திருமண நாள் வந்தது.

ஊரிலேயே மிகப் பிரமாண்டமான தங்களுடைய மகாலஷ்மி திருமண மண்டபத்திலேயே கல்யாணத்தை வைத்திருந்தார், நாகேந்திரன்.

நொடிக்கு ஒரு முறை ஆதி... ஆதி... என்று அழைத்து ஆதித்யனுக்கு வேலை வைத்துக் கொண்டிருக்க... அவனும் சளைக்காமல்... அலுக்காமல் செய்தான்.



''ஏன் டாடி... அவருக்கே எவ்வளவு வேலைன்னு வைப்பீங்க? உங்களுக்கு வேறு யாருமே கண்ணில் படலையா?''

மகாலஷ்மிதான் அவனுக்காய் பரிந்து கொண்டு வந்து கேட்டாள்.

''ஆதி தாம்மா பொறுப்பா செய்வார்!''

''அதுக்காக அளவே இல்லையா? போங்கப்பா.''

நாகேந்திரன் அங்கிருந்து அகன்றதும்... ஆதித்யன் செல்ல ஆயத்தமாகும்போது... அவன் முன்பு கைகள் இரண்டையும் நீட்டி மறித்தாற் போல நின்றாள்.

இரவு பெண் அழைப்பு எல்லாம் முடிந்து... எல்லோரும் அங்கிருந்த அறைகளில் உறங்கச் சென்றுவிட... மண்டபத்தின் ஒரு பகுதியில்... யாருமில்லாத தனிமையில்... மகாவிடம் ஆதித்யன் வசமாய் மாட்டிக் கொண்டான்.

''என்ன இது? யார்ன்னா பார்க்கப் போறாங்க, மேடம்!''

''பார்க்கட்டுமே!'' அலட்சியமாய் சொன்னாள். எல்லோரும் உறங்கப் போயாச்சி!''

''ஏதாவது வேலையாய் உள்ளே வந்து விட்டால்... நம்மை ஜோடியாய் இந்த நேரத்தில் கண்டு விட்டால்... ஏதாவது களங்கம் கற்பித்து விடுவார்கள், மேடம்! என் பேர் கெட்டாலும் கூடப் பரவாயில்லை. உங்க பேர் கெடக் கூடாது! நாகேந்திரன் சார் மரியாதையாக வாழ்பவர்!''

''போதுமே... அப்பா மேல் உள்ள அக்கறை! கொஞ்சம் எனக்காகவும் அக்கறைப் படக்கூடாதா? எனக்காகவும்... என்னைப் பற்றியும் சிந்திக்கக் கூடாதா? நான் ஏங்கிட்டு இருக்கேன்! எப்போடா எனக்கும் இப்படி ஒரு நாள்

வரும்ன்னு நீங்கள் ஒரு கனவும் காண்பது இல்லையா? என்ன மனுசன் நீங்க? எப்போடா ஒரு பொண்ணை வளைச்சி வீழ்த்தலாம்! காதலிக்கலாம்! கட்டிக்கலாம்! தொட்டுக்கலாம்ன்னு அவனவன் அலைவான்! உங்களுக்கு அப்படி ஒரு சந்தர்ப்பம் வலுவில் வந்து கிடைத்தாலும் பயன்படுத்திக்காமல்... ச்சே! இந்த அமுல் பேபிக்கு முதலிரவுலகூட நான் சொல்லித் தரணும் போல!''

மகாலஷ்மி அழகாய் கண்ணடித்து சொல்ல... ஆதி ஆத்திரமானான்.

''விரசமா பேசாதே! எனக்கு கெட்ட கோபம் வரும்!'' கத்தினான்.

''ஆமாம்.. இந்த அமுல் பேபிக்கு கோபம் வந்து... அப்படியே என்னைக் கட்டி உதட்டுல, கன்னத்துலன்னு முத்தமிடப் போறீங்களா?'' ஆதங்கமாய் கேட்க...

''ச்சை...! அலையாத...! அப்படி ஒரு நினைப்பு இருந்தால் மாற்றிக் கொள்! நான் உன்னைக் காதலிப்பேன்னோ... என் கையால தாலி ஏறும்ன்னோ... இந்த ஜென்மத்துல கனவுகூட கண்டுடாதே!''

''அப்போ அடுத்த ஜென்மத்துல என்னைக் கட்டுப் பீங்களா? ஆனால் அடுத்த ஜென்மம் வரைக்கும் காத்திருக்க முடியாதுப்பா! இந்த ஜென்மத்திலேயே என்னைத் தொட்டு தாலிகட்டப் போறீங்க?''

''பைத்தியமே! உளறாதே!''

''இது உளறல் அல்ல! உண்மை! இந்த ஜென்மத்திலேயே... என்னை மணந்து... கட்டித் தங்கமே... கண்ணே... மணியேன்னு கொஞ்சப் போறீங்க! ஆதியைத்



தவிர வேறு ஒருவன் என்னைத் தொட வருவானா? தாலி கட்ட அனுமதிப்பேனா? இந்த மகாவை அப்படியெல்லாம் கேவலமா நினைச்சிடாதீங்க, அத்தான்! இந்த மகா உங்களுக்குத்தான்! என் கண்ணான ஆதி எனக்குதான்! அதை மாற்ற ஆண்டவானாலும் முடியாது, அத்தான்! இந்த மகாவோட ஆட்டத்தை இனிதானே பார்க்கப் போறீங்க, மச்சான்! என் தொல்லையை தாங்க முடியாமல்... அம்மா மகாலஷ்மி... உன்னைச் சரணடைந்தேன்னு சொல்லப் போறீங்க! அப்படியே என் தொல்லைகளுக்கு அச்சாரமாய்... காணிக்கையாய். ஒரு இச் மட்டும்... ஓ.கே.வா?''

அவன் எதிர்பாராத தருணம் தூண் மறைவில் இழுத்து வைத்து... அவன் கன்னத்தில் முத்தமிட்டாள், மகாலஷ்மி! ஆதித்யன் செய்வதறியாது நின்று விட்டான்.



# 12

மகாவின் தொல்லைகளுக்கு அளவேதான் இல்லாமல் போனது.

பியூனை விட்டு அழைக்க.. வேலையிருப்பதாய் கூறி.. முடிந்ததும் வருவதாய் சொல்லி அனுப்பினான்.

அவன் நிறைய நாட்கள் இவ்வாறு கூறி தப்பித்து இருக்கிறான். அதனால்...

''போ.. போய் பெரிய சந்தேகமாம்! உங்களை அழைக்காமல் போனால் திட்டுவார்கள் என்று அழைத்து வா!'' அவள் உத்தரவிட...

மீண்டும் பியூன் வந்து நிற்க.. இவனுக்கு ஏதாவது சந்தேகம் வந்துவிட்டால் நல்லதில்லை என்று ஆதி அங்கே வந்தான்.

''யெஸ் கமீன்...'' என்று கூறி.. எதிர்சீட்டை காட்டினாள். அவனும் பல்லைக் கடித்துக் கொண்டு அமர்ந்தான்.

''டாடி எதுனா சந்தேகம்னா உங்களைத் தானேக் கேட்கச் சொன்னார். நீங்க இப்படி ஓடி ஓடி ஒளிந்தால் என்ன அர்த்தம்? எனக்கு ஒருநாளைக்கு ஆயிரத்தெட்டு சந்தேகம் வருது. அதில் ஒரு சந்தேகம்...'' நிறுத்திவிட்டு அவனை ஆழ்ந்து நோக்கினாள்.

''ஆமா... வெள்ளைச் சட்டை, கறுப்பு பாண்ட் என்ன உங்கள் அக்மார்க் முத்திரையா? வயசு பையன் போலவா உடுத்திட்டு வரீங்க? கலர் கலரா உடுத்தி.. உங்களைப் பார்க்கணும் போல ஆசையா இருக்கே, ஆதி! நாளை முதல் நல்லா.. மாடனா.. கலர் ட்ரஸ்ல வந்து கலக்கறீங்க. புரியுதா?''

''இதுதான் உன் சந்தேகமா? என்னைக் கலர்கலரா உடுத்திட்டு வரச்சொல்ல... நீ யார்? ட்ரஸ் என் பர்ஷனல் விஷயம்! அதில் தலையிட கல்லூரி நிர்வாகத்திற்கோ... தாளாளருக்கோ உரிமையில்லை!'' ஆதி கோபத்தில் சீறினான்.

''எதுய்யா பர்சனல் விஷயம்? நான் ஆசைப்பட்டா.. அது நடக்கணும்! கண்டிப்பாக! நோ கமாண்ட்ஸ்... நோ ஆர்கிமெண்ட்.. ஓ.கே..? தட்ஸ் ஆல்!''

''மேடம்... திஸ் ஈஸ் டூ மச்! வாட் நான்சென்ஸ் யுவர் டாகிங்? கைநீட்டி சம்பளம் வாங்கினா... நாங்கள் என்ன



உங்க கொத்தடிமையா? ஓவராப் போறீங்க! இது நல்லதில்லே! என்கிட்ட அதிகம் வச்சிக்க வேண்டாம்! இந்த ஆதி யார்ன்னு காட்ட வேண்டி வரும்! தெரியுமா?''

ஆதித்யன் எரிமலையாய் சீறினான்.

''பைத்தியம் நல்லா முத்திப் போச்சு! வைத்தியம் செய்தாத்தான் உருப்படுவே!''

''என் பைத்தியத்துக்கு மருந்தே நீதான், கண்ணா!''

''ஏய்.. ஏய்...'' அவன் பாய...

''நான் யார்ன்னு தெரிந்தும் இவ்வளவு அதிகாரமா பேசற உரிமை உங்களுக்கு மட்டும் தான். இதுவே வேறு ஒருவன் இப்படி சொல்லியிருந்தால் கொலை.. கொலை விழும்!''

மகாலஷ்மி சுட்டு விரல் நீட்டி எச்சரித்து.. பின் கலகலவென சிரித்தாள்.

''சந்தேகமாம் சந்தேகம்!'' ஆதி எரிச்சலோடு அறையை விட்டு வெளியேறினான்.

''போ.. போ... மச்சான்! இன்று நாள் முழுக்க என்னை மறக்கமாட்டாய் அல்லவா?'' என்று சத்தமாய் கூறி.. மகாலஷ்மி மந்தகாசமாய்.. மயக்கத்துடன் புன்னகைத்தாள்.

ஆசிரமத்தில் வளரும் சில பிள்ளைகள் இப்படித்தான் சமுதாயத்தின் மீதும்... சமுதாய மக்கள் மீதும் வெறுப்பாய் இருப்பார்கள்.

அன்பு, ஆசை, நேசம், பற்று என்று எதுவும் அற்று கடமைக்காய் வாழ்வார்கள். சாதாரண நிகழ்வுகளானால்

எளிதாய் மறந்து... அடுத்த வேலையைக் கவனிப்பார்கள்.

மகாலக்ஷ்மியும் ஆதித்யனின் மனநிலையை நன்கு புரிந்து கொண்டு... அதற்கு தகுந்தாற் போலக் காயை நகர்த்த திட்டமிட்டாள்.

அவளை அவன் லேசில் மறக்காமல்.. நாள் முழுக்க நினைத்துக் கொண்டிருக்க.. ஏதாவது ஏடா கூடமாய் பேசி... அவன் மனதில் வெறுப்பை விதைப்பாள். அவனும் அன்று முழுக்க.. இவளை நினைத்து... இவள் மேல் ஆத்திரம் கொண்டு.. வெறுப்பு கொண்டு அலைவான்.

அவன் தன்னை ஆசையோடு நினைக்கவில்லை என்றாலும்... ஆத்திரத்தோடாவது நினைத்துக் கொண்டிருக்கிறானே என்று சந்தோசப்பட்டாள்.

விருப்புக்கும் வெறுப்புக்கும் இடையே இடைவெளி அதிகமில்லை என்று படித்திருக்கிறாள், மகாலக்ஷ்மி.

அதிகப்படியான விருப்பு.. ஒரு நாள் அதிகப்படியான விருப்பமாய் மாறலாம் என்ற நம்பிக்கையில்.. அவனின் அமைதியாய் இருக்கும் இதயக்குளத்தில்... அவ்வப்போது கல்லெறிந்துக் கொண்டிருந்தாள்.

'இறைவா.. என் நம்பிக்கை வீணாகக் கூடாது! என்னவன் என்னை நேசிக்க வேண்டும்...! என்னைச் சுவாசிக்க வேண்டும்...! பூஜிக்க வேண்டும்...! மாலையிட வேண்டும்...! மதி மயங்கிப்போக வேண்டும்...! என் அன்புக்காக, பாசத்துக்காக என்னிடம் முறையிட வேண்டும்...! என்னிடம் யாசிக்க வேண்டும்...!'



'இது நடக்குமா?'

'என்னில் கலந்த நேசமே.. எனக்காக இரங்கி... என்னிடம்... என் ஆதித்யனை கொண்டு வந்து சேர்ப்பாயா?'

'அவனைப் பார்த்த முதல் நாளே... அவன் மேல் பைத்தியமான கதை தெரியுமா, உனக்கு?''

அவளிடமிருந்து வேதனையான மூச்சுக்காற்று வெளிப்பட்டது.

அன்று இரவு...

மகா தூக்கம் வராமல் தவித்தாள். ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு பக்கங்களைப் புரட்டியவளின் கண்கள்.. ஒரு பக்கத்தில் நிலைத்து.. ஆச்சரியத்தைத் தேக்கி நின்றது.

கவிதையின் வரிகளில் கண்களை ஓடவிட்டாள்.

**''அன்பே,**
**உன் விழி விளக்கால்**
**சுட்டுவிட்டாய், என் இதயத்தை!**
**விழியினால் சுட்டப் புண்**
**விபரீதம் விளைவிக்கிறது!**
**புற்றாய் புறப்படும் முன்**
**புதுப்பிறவி தந்துவிடு!**
**மீண்டும்,**
**உன் விழியை மலராக்கி...**

காதல் பார்வை பார்த்து...
புன்னகை என்ற மருந்தைப் போட்டுவிடு!
- ஆதித்யன், கல்லூ[illegible]

ஆதித்யனின் கவிதைதான் அந்த வார இதழில் மலர்ந்து இருந்தது.

'வாரே... வா..! மாமா... மாட்டினேடா! என்கிட்டே வசமா மாட்டினே!'

'நேசத்தை ரசிச்சி, ருசிச்சி கவிதை எழுதத் தெரியுமா... ஆனால் நேசம் மட்டும்தான் பிடிக்காதா?'

'என்ன கொடுமையிட இது!'

'இப்படி ஒரு கவிதையை எழுதி.. திரும்ப திரும்ப படிக்க வைத்து.. என் இரவு தூக்கத்தைக் கெடுத்துவிட்டு நீ மட்டும் நிம்மதியாய் உறங்குகிறாயா, ஆதி?'

விடியலுக்காகக் காத்திருந்தாள், இமை மூடாமல்!

ஆனால், இரவுக்கு விடியலுண்டு! அவள் வாழ்க்கைக்கு மட்டும் விடியல் இல்லை என்று தெரியாமல்!



# 13

ஆதித்யன் முதல் பாடவேளை இலக்கணத்தை நடத்திக் கொண்டிருக்கும் போது.. வகுப்பறையின் வாயிலில் வந்து நின்றாள், மகாலஷ்மி.

மகாலஷ்மியின் கம்பீரமான... மிடுக்கான தோற்றப் பொலிவு கண்டு.. ஆதி ஒரு நிமிடம் அசந்து போனான். பின்னர் சமாளித்து ''யெஸ் மேடம்!'' என்றான்.



''நல்ல கவிதைகள்..!'' அவள் இழுக்க...

''பிடிச்சிருக்கா... [illegible] கவிதைகளா? [illegible]!'' [illegible] விட்டு...

''பரிதி... கொஞ்ச நேரம் அமைதியா இருக்க..'' [illegible] அவள் பின்னே சென்றான்.

அறைக்குள் சென்றதும்.. அந்த வார இதழை... அவன் கவிதை வந்த பக்கம் திருப்பி.. மேஜையின் மேல் [illegible] போட்டாள்.

அவளின் ஆத்திரம் அவனுக்கு புதிதாய் இருந்தது.

''ஏன் உருகி உருகி, மருகி.. மருகி.. காதல் கவிதைகள் எல்லாம் எழுதுவார்! ஆனால் காதலிக்க மட்டும்தான் பிடிக்காதா? இது என்ன ஆதி அநியாயம்? காதலிக்கிற அல்லது காதலில் தோற்ற... ஒருவனால் மட்டும்தான்.. இந்த அளவு காதல் ரசம் சொட்ட... அழகாய்.. அழுத்தமாய்.. கருத்துடன் சொல்ல முடியும்! என்ன ஆதி... பேசாமடந்தையாயிட்டீங்க! வசமா மாட்டினீங்களா?''

அவனிடம் குற்றம் கண்ட முறையில் பேசிக் கொண்டிருந்தாள்.

''இப்போ தெரியுது.. இந்த அழகான மண்டையில்... கறுப்பாய் களிமண் இருப்பது!'' என்று ஆதித்யன் சொல்ல.

''அழகான மண்டைன்னு ஒத்துட்டீங்களே! அதுவே இந்த ஆயுசுக்கும் போதுமே! கவிதையில் மட்டும்தான் காதலை சொல்வீங்களா? என்கிட்ட சொல்லமாட்டீங்களா?'' என்று குற்றம் சாட்டினாள்.

''மரணத்தைப்பற்றி அறிய செத்து யாரும் பார்க்கத் தேவையில்லை! அப்படித்தான் காதலும்! காதலிக்கறவ

னாலும்... காதல் தோல்வி அடைந்தவனாலும் மட்டுமே கவிதை எழுத முடியும்ன்னு சொல்றது சுத்தப் பொய்! சில பைத்தியங்கள் இப்படி உளறுவதால்... நீங்களும் உளறரீங்க!''

''அப்போ உங்கள் கவிதையும், காதலைப் பற்றிய வர்ணனைகளும்.. வெறும் ஏட்டுச் சுரக்காய் மட்டும் தானா?''

''புரிஞ்சாச் சரி!'' அவனுக்கே சிரிப்பு வந்தது. சிரித் தான்.

''நான் இதை ஒத்துக்க மாட்டேன்! உங்க மனசுல என் மேல் காதல் இருக்கு! நீங்களும் என்னைக் காதலிக்கறீங்க! சரி.. சரி.. அந்த முறைப்பு வேண்டாம். மெதுவாகவே ஆழமா... அழுத்தமா.. நம்ம நேசத்துக்கு வித்திடுங்க! ஒன்றும் அவசரமில்லே! கூல் பேபி.. கூல் அமுல் பேபி.. கூல்யா.. எனக்கு நிறைய வேலையிருக்கு! என் தொல்லைகளுக்கு 'தொடரும்' போட்டு... இப்போ உங்களை அனுப்பி வைப்பேனாம். ஒன்றும் அவசரமா ஓடிப்போய் கிளாஸ் எடுக்க வேண்டாம்! ஓ.கே. வா?'' அவள் மலர்ந்து சொல்லவும்...

அவனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

''ஏய்.. நீ... ஒரு நாள் இல்லே.. ஒரு நாள் செமத்தியா என்கிட்ட உதைப்படப்போறே! ஆனால் அது கூடிய சீக்கிரமே நடக்கும். உன் பைத்தியம் இன்னும் முத்தும் போதுதான் வைத்தியம் செய்யணும்!''

அவன் எரிமலையாய் வெடித்து விட்டு வெளி யேறும்போது.. வெட்கமில்லாமல் காற்றில் முத்தத்தைப் பறக்க விட்டாள், மகாலக்ஷ்மி!



'இன்றையப் பொழுதுக்கு இது போதும்!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

நான்கு நாட்கள் கழித்து... ஆதித்யனுக்கு ஒரு லெட்டர் வந்தது.

அட்டண்டர் அதனைத் தூக்கிக் கொண்டு செல்ல... வழியில் தோன்றிய மகாலக்ஷ்மி...

''என்ன?'' என்று கேட்கவும்...

''ஆதி சாருக்கு லெட்டர், மேடம்! அவரைத் தேடிட்டுப் போறேன்!''

''லெட்டரா...?'' ஆச்சரியப்பட்டாள்.

''நீ என்கிட்ட கொடு. அவரைப் பார்த்து நான் கொடுத்துடறேன்! அவரைத்தான் நானும் பார்க்கப் போறேன்!''

''வேணாம், மேடம்!''

''கொடுப்பா! அது என்ன பெரிய சுமையா? பரவா யில்லை! கொடு...'' என்று கேட்டு வாங்கிக் கொண்டு பூங்காவிற்குப் போனாள்.

லெட்டரைப் பிரித்துப் பார்க்க.. அதில்...

மை டியர் டார்லிங் ஆதிக்கு,

''உன்னவள் எழுதிக் கொள்ளும் மடல்,

நான் நலமாய் இல்லை! உங்களைப் பார்க் காமல்... என்னால் இருக்க முடியவில்லை! எந்த நேரமும் நீங்கள் என்னுடனே இருக்க வேண்டும் என்று என் மனம் ஏங்குகிறது. எப்போதடா மாலைவரும்.. எனது மன்னவனைச் சந்திக்கலாம் என்று.. பொழுதை அலுப்புடன் கழிக்கிறேன்...

"அன்பானவரே... உங்களுக்கு என்போலெல்லாம் தோன்றவில்லையா? உங்களுக்காக.. நேற்று முழுக்க... காத்திருந்து காத்திருந்து.. கண்கள் பூத்ததுதான் மிச்சம்! உங்கள் மேல் பயங்கர கோபத்தில் உள்ளேன்! பொய்யில்லை நிஜம் தெரியுமா? இன்று வந்தால் நிறையவே தருவேன், உதையை அல்ல.. முத்தங்களை...!

"ஏய் கண்ணா.. இரண்டு நாட்களுக்கு முன்பு... என் தோழிகளிடம் அவமானப்பட்டேன்! என் தெரியுமா? உதட்டுக் காயம் தான்! பாத்ரூமில் இடித்துக் கொண்டேன் என்று சொல்லியும் அவர்கள் நம்பாமல் என்னிடம் கண்சிமிட்டி.. கள்ளப் பார்வை ஒன்றை உதிர்க்கின்றனர். எல்லாம் உன்னால்தான்! சுத்த மோசம்...!

"இன்று மாலை நாம் வழக்கமாய் சந்திக்கும் பார்க்கில் காத்திருப்பேன், கண்ணா! நீங்கள் வரவில்லையென்றால் நான் ராட்சசியாய் மாறிவிடுவேன்! நான் ராட்சசியாய் மாறினால் நீங்கள் தாங்க மாட்டீர்கள்!"

இப்படிக்கு
உங்களின் இதயத்தைக்
கொள்ளைக் கொண்ட கள்ளி,
ரக்ஷனா.

கடிதத்தைப் படித்து முடித்த... மகாலஷ்மியின் கண்கள் கலங்கியது. அவளின் சின்ன இதயம் சுருதி தப்பி வேக வேகமாய் அடித்துக் கொண்டது.

விழிகளில் ஆறாய் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு... அங்கிருந்து வேக வேகமாய் வர...



அவள் வந்த வழியில்... பூங்காவின் சிமெண்ட் பெஞ்சில்.. ஒரு மாணவனும் மாணவியும்.. நெருங்கி உட்கார்ந்து சிரித்துப் பேசி.. காதலை பரிமாறிக் கொண்டிருக்க.. அவளுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

'தனக்கு கிடைக்காத நேசம்... எல்லோருக்கும் தங்கு, தடையின்றி கிடைக்கிறதே!'

கொதிப்பின் உச்சிக்குப் போனாள்.

'என்ன செய்கிறோம்!' என்று அறியாமல்.. 'ராஸ்கல்.. இடியட்...' என்று அந்த மாணவனையும் மாணவியையும் அறைந்து தள்ளிவிட்டாள்.

பின்னர் வேகமாய் சென்று தன்னறையில் புகுந்து.. மேஜையில் கவிழ்ந்து முதுகு குலுங்க அழுதாள்.

அடிப்பட்ட மாணவன் நேரே ஓடிப்போய்.. தனது வகுப்பறை மாணவர்களிடம் சொல்ல.. காட்டுத் தீயாய் இந்த செய்தி பரவி.. ஒரு பெரிய படையாய் மாணவர்களும் மாணவிகளும் அவளின் அறை முன்பு வந்து நின்று கோஷமிட்டனர்.

"கல்லூரி நிர்வாகம் ஒழிக!"

"தாளாளர் மகாலஷ்மி ஒழிக!"

"இது கல்லூரியா...? அல்லது கொலை களமா?"

"காதலுக்கு தடை விதிக்கும் இது கல்லூரியா? அல்லது சுடுகாடா?"

"டவுன் டவுன் காலேஜ் கரஸ்பாண்டண்ட்!" என்ற கோஷங்கள் விண்ணைப் பிளக்க எழும்ப... அட்டண்டர் மகாலஷ்மிக்கு விஷயத்தை சொல்ல.. தலைகுனிந்து கேட்டுக் கொண்டிருந்தவள்... கண்களைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

மகாலஷ்மி என்ன செய்வது என்று புரியாமல் விழித்தாள்.

மாணவர்கள் கட்டுக்கடங்காமல் ஆர்ப்பாட்டம் செய்ய.. மகா முன்னே வந்து.. தனது தவறை உணர்ந்து.. ''ஸாரி...'' என்று கையெடுத்து கும்பிட்டும் அவர்கள் அடங்கவில்லை! அசரவில்லை!

கல்லூரி ஜன்னல்கள் மீதும், மகாவின் மீதும் கல்லெறிய ஆயத்தமாக.. அனைத்து புரொபசர்களும் வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருந்தனர். அவளுக்காக முன் வந்து கலவரத்தை அடக்க வரவில்லை.

ஆதி முன்னே வந்தான். மகாவைப் பார்க்க பாவமாய் இருந்தது.

ஆதித்யன் முன்னாடி தோன்றவும்.. அதைக் கண்ட மாணவர்கள் சத்தம் போடுவதை நிறுத்தினர். ஏனென்றால் ஆதித்யன் மேல் அத்தனை மாணவர்களுக்கும் மதிப்பு, மரியாதை, பற்று!

''மாணவர்களே அமைதி.. அமைதிப்பா! உங்களுடைய பிரச்சனை என்ன? நீங்கள் வீணான நிகழ்சிக்காக கலாட்டா செய்வதாய்.. எனக்கு தோன்றுகிறது! மகாலஷ்மி மேடம் நேசிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை! இந்த வயதில் இது தப்பு என்று அறிவுறுத்தவே.. அறிவுரை கூறாமல்.. உணர்ச்சிவசப்பட்டு.. அறியாமல் அடித்து விட்டார்! அவர் ஒன்றும் காதலுக்கு எதிரி அல்ல! காதலியுங்கள், மாணவர்களே.. ஆனால், அதற்கு முன்பு உங்கள் தகுதிகளை உயர்த்திக் கொள்ளுங்கள்! நேசத்தை எப்போது செய்ய வேண்டும் என்று ஒரு வரன்முறை இருக்கிறதல்லவா...?



''வேகாத வெயிலில் வெந்து.. நொந்து.. இரத்தம் காய உழைத்து அல்லவா.. உங்களை, உங்களுடைய பெற்றோர்கள் படிக்க வைக்கிறார்கள்! அதனையும் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்...''

''காதலுக்கு எப்பேர்ப்பட்ட எதிர்ப்பு வந்தாலும்... அந்த எதிர்ப்பினைச் சமாளித்து.. அவளை மணந்து காப்பாற்ற பணம் வேண்டும். காதல் மட்டுமே வாழ்க்கையல்ல! காதலோடு நிலையான சம்பாத்தியமும் வேண்டும்! அப்போது அவர்களை துரத்தி துரத்தி காதலியுங்கள்! அவர்கள் எங்கேயும் போய்விட மாட்டார்கள். அவர்கள் உங்களுக்காக காத்திருப்பார்கள். என்ன மாணவர்களே.. நான் சொல்வது புரிகிறதா?''

ஆதித்யன் புன்னகையோடு மாணவர்களைப் பார்த்து கேட்க...

''சார் சொல்வதில் கூட அர்த்தம் இருக்கிறதடா...''

''படிக்கற காலத்தில் படிப்பை மட்டுமே பார்க்க வேண்டும்!''

''ஒரு பெண்ணை காலமெல்லாம் காப்பாற்ற.. நிலையான வருமானம் கட்டாயம் வேண்டும்! படிப்பை நல்லமுறையில் முடித்தால்.. நல்ல வேலையும் கிடைக்கும்!''

''ஆதி சார் போல அமைதியாய்.. சிந்தித்து ஆலோசனைக் கூறத் தெரியாமல்.. நம் மகாலஷ்மி மேடம் தெரியாமல் கை ஓங்கிவிட்டார்கள்!'' என்று ஆளாளுக்கு ஒரு கருத்தைக் கூறி... எல்லோரும் சமாதானமாகி...

''ஸாரி மேம்.. வெரி வெரி ஸாரி மேம்...'' என்று மகாலஷ்மியைப் பார்த்து சொன்னவர்கள்...

''தேங்க்யூ சார்...'' என்று ஆதித்யனைப் பார்த்து சொல்லிவிட்டு.. எல்லோரும் அவரவர் வகுப்பறையை நோக்கிச் சென்றனர்.

அங்கே இருவர் மட்டுமே நிற்க...

''எல்லாம்... எல்லாம்... உங்களால் வந்த வினை! என்னைப் புரிஞ்சிக்கங்க, ஆதி! இப்படி சித்ரவதைப் படுத்தாதீங்க! என் மனசை.. என் இதயத்தை.. ஏன் இப்படி கசக்கி புழியறீங்க? என் உணர்வுகளை ஏன் இப்படி உதாசீனப்படுத்துகிறீர்கள்...?

''என்னை, என் விருப்பத்தை புரிஞ்சிக்கங்க, ஆதி! எதையும் நான் ஆசைப்பட்டு கிடைக்காமல் மனம் வெதும்பியது இல்லை! என்னை இந்த அளவு நோகடிக்க வேண்டாம்! நான் எந்த விதத்தில் குறையாய் உள்ளேன்? அநாதையாய் பிறக்காதது என் தப்பா...? என் தப்பா சொல்லுங்க?''

மகாலஷ்மியின் கண்களில் நீர் சுரந்தது.

"இது என்ன புது பூகம்பம்?" அவள் லெட்டரைக் காட்டிக் கேட்டாள்.

''இது நிஜமா? இது ஒண்ணும் உண்மையில்லையே! பொய்யின்னு சொல்லுங்க, ஆதி! ப்ளீஸ்...'' அவள் கெஞ்ச...

ஆதித்யன் எதுவும் சொல்லாமல் அவ்விடம் விட்டு அகன்றான்.



அன்று கல்லூரி விட்டது அவனைப் பிடித்துக் கொண்டாள். கம்ப்யூட்டர் முன்பு உட்கார வைத்து வேலை மேல் வேலையாய் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

மாலை ஆறு மணியானதும்...

''நான் கிளம்பணும், மகாலஷ்மி!'' என்று அனுமதி கேட்டவனை அலட்சியப்படுத்தி.. ஏழுமணி வரை பிடித்து வைத்துக் கொண்டாள்.

அவன் ஆசிரமம் செல்கிறானா என்று அவன் பின்னோடே காரை மெல்ல ஓட்டிக் கொண்டு வந்தாள்.

அவன் டூவீலரோடு உள்ளே சென்றதை கண்ட பின்னர்தான் அவள் மருத்துவமனைக்கே சென்றாள்.

ஆதித்யன் கல்லூரி விட்டதும் வேறு எங்கும் செல்லாமல் ஆசிரமம் செல்ல.. இதுவே தினந்தோறும் தொடர.. நிம்மதியானாள்.

இந்த நிம்மதி பலகாலம் நிலைக்காது என அறியாமல்!



## 14

அன்று காலேஜ் விட்டபோது.. நன்றாக மழை வலுத்துக் கொண்டது. நல்ல சூறாவளி காற்று சுழற்றிச் சுழற்றி வீச... அதோடு மழையும் தோழமையுடன் கை கோர்த்துக் கொண்டு.. பூமிப் பெண்ணை நிலைகுலைய வைத்தது.

ஆதித்யன் ரெயின் கோட் எடுத்துவர மறந்துவிட்டான். மழையும் நிற்பதாய் இல்லாமல்... அசுரத்தனத்துடன்

பொத்துக் கொண்டு கொட்ட... கொஞ்ச நேரம் நின்று நின்று பார்த்தவன்... ஹீலரை கிளப்பிக் கொண்டு... மழையில் நனைந்த வண்ணம் சென்றான்.

அதைக் கண்ட மகாலஷ்மி.. காரைக் கிளப்பிக் கொண்டு போய் அவனருகே நிறுத்தி...

''ஆதி சார்.. வாங்க சார்... கார்ல போகலாம்! இடியும், மின்னலும், காற்றும், மழையும் அரக்கத்தனமா இருக்கு. ரொம்ப நனையறீங்களே! கமான் குயிக்...'' அவள் அவசரப்படுத்த...

''நனைஞ்சா கரைஞ்சுட மாட்டேன்! நான் என்ன சர்க்கரையா? நனைந்தால் வீணாகிப்போக! நான் நனைந்தால் உங்களுக்கென்ன? என் மீது யாரும் அக்கறை காட்ட வேண்டாம்!'' அவன் எரிந்து விழ...

''என்னவர் மீது அக்கறைக் காட்டாமல்... பின் யார் மீது அக்கறைக் காட்டுவதாம்? என்னோடு மல்லுக்கு நிற்கற நேரமா, ஆதி இது? நம்மோட மேட்டர் இதுவரைக்கும் யாருக்கும் தெரியாமல் இருக்கு! இன்று அதை தெரியப்படுத்த... நீங்களே ஒரு நல்ல சந்தர்ப்பத்தை, சூழ்நிலையை உருவாக்கி தரீங்களே! சந்தோசம், ஆதி! நான் கை பிடித்து காரிலே ஏற்றணுமா? இல்லே, மரியாதையா நீங்களே வரீங்களா...?'' என்று மிரட்டவும்...

ஆதித்யன் பயந்து போய்... ஒரு கட்டிடத்தின் முன்பு ஹீலரை நிறுத்தி... பூட்டி விட்டு வந்து.. வேண்டா வெறுப்பாய் காரில் ஏறி.. முன் சீட்டில்... அவளருகே அமர்ந்தான்.

''நானும் நீங்களும் வேறல்ல! அப்படி நான் நினைக்கும்போது.. நீங்க மட்டும் என்னை வேற்று மனுஷாளாய்..



வேம்பாய் நினைத்து வெறுக்கலாமா, ஆதி? நல்லாவா இருக்கு... நீங்க செய்யறதெல்லாம்? ஆண்தான் காதலுக்காக.. காதலியிடம் போராடுவான்...! கெஞ்சுவான்...! மிரட்டுவான்...! நம் தேசத்தில்... எல்லாம் மாறி.. தலைக்கீழாய் நடக்கிறதே! நான் உங்களிடம் உருகி உருகி.. மருகி மருகி... மண்டியிட்டு... காதலை யாசகமாய் கேட்கிறேன்...!

''உங்களுடைய இருவிழிப் பார்வைக்காக தவமிருக்கிறேன்! நீங்கள் மனமிரங்கி வரம் தர மாட்டேன் என்கிறீர்களே! நீங்கள் இப்படி வெறுக்க வெறுக்க.. மறுக்க மறுக்க.. என்னைத் தவிக்கவிடத் தவிக்கவிட... உங்களை அடையணும்ன்னு வெறியே வருது தெரியுமா? ஒரு நாளைக்கு இதன் விளைவைப் பார்ப்பீர்கள்! எங்காவது தள்ளிட்டுப்போய்.. உங்களுக்கு பதிலா... நான் உங்க கழுத்துல தாலியைக் கட்டி... ரேப் பண்ணினாலும் பண்ணிடுவேன்! ஜாக்கிரதை! சொல்லிட்டேன்!''

மகாலஷ்மி கண்களை உருட்டி.. ஆவேசமாய் மிரட்ட...

அவனுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. அவன் இதமாய் இதழ் பிரித்து சிரிக்க...

''சிரிக்கறீங்களா...? கற்பு போயிடிச்சே.. என் கற்பு போயிடிச்சேன்னு ஒருநாள் கதறிட்டு ஓடப்போறீங்க... பாருங்க! லெட்டரா எழுதறீங்க? லெட்டர்! அதெல்லாம் உங்க வேலைத்தானே? பொய்தானே? என்னை கலங்கடிக்கத்தானே அப்படி செய்தீங்க?''

இதயம் வெடிக்க கத்தினாள்.

''நான் சொல்றதைக் கேளு, மகா! அந்த லெட்டர் எனக்கு நானே எழுதியதுதான்! உண்மையல்ல தான்! அதிலிருந்து

உனக்கு வெறி அதிகமாயிடிச்சி! அந்த வெறியில தான்.. சந்தோசமா இருந்த மாணவன், மாணவியைக் கண்டு பொறாமையில் அறைந்து தள்ளி.. வம்பை விலைக்கு வாங்கினே! நான் அன்னைக்கு அந்த பிரச்சனையில ஈடுபடலன்னால்... பெரிய ஸ்ட்ரைக் நடத்தியிருப்பாங்க ஸ்டூடண்ஸ்! நீ என்ன ஆடினாலும் நான் உனக்கு கிடைக்க மாட்டேன்! எனக்கு மனைவியா வரத் தகுதியானவள் ஒரு அநாதையோ.. விதவையோ.. வஞ்சிக்கப்பட்டவளோ தான்! அந்த முடிவில் என்றுமே மாற்றமில்லை! எந்த விதத்திலாவது உன்னை நான் டிஸ்டப் பண்ணியிருந்தால்.. அதற்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன்! உனக்கேற்ற நல்ல வரனைப் பார்த்து திருமணம் செய்து சந்தோசமா இரு! ஆஸ்ரமம் வந்துடிச்சி! ரொம்ப நன்றி! நான் வருகிறேன்!''

மழை வெளியே நின்றுவிட்டது.

கார் நின்றதும் இறங்கி அவன் உள்ளேச் செல்ல.. மகாலஷ்மி விம்மி.. வெடித்து அழுதாள். அப்படியே ஸ்டீரிங் வீலில் முகம் புதைத்து அழுதாள்.

''வாப்பா, ஆதி! கௌசல்யாவுக்கு காய்ச்சல் அதிகமாகி கொதிக்குது! வண்டி எங்கே? அதுயென்ன கார்? யார் அது? மகா பொண்ணா? அவளோடவா வந்தே? உன் வண்டியையும் அங்கே விட்டுட்டு வந்துட்டே! நம்ம வேனும் பழுதாகி இருக்கு! மகாலஷ்மி ஆஸ்பிட்டலுக்குத்தான் போவாள். அவளோடே போய் நம்ம கௌசல்யாவை 'மகா ஆஸ்பிட்டல்'லேயே காட்டிட்டு வந்துடேன்! இன்று இரவு பார்க்காமல் விட்டுவிட்டால்.. விபரீதமா போய்விடும்!''



ராஜேஸ்வரி அம்மாள் சொல்ல..

ஆதித்யனுக்கு உடம்பெல்லாம் பதறியது. நடுங்கியது. அப்படியே. ஓடிப்போய் கௌசல்யாவை அள்ளிக் கொண்டு வெளியே வர...

மகாலஷ்மி இன்னும் போகாமல் இருந்தது நிம்மதியாய் இருந்தது.

மகாலஷ்மி கண்களைத் துடைத்துக் கொண்டு செல்ல ஆயத்தமாகும் போது.. ஆதித்யன் கையில் குழந்தையோடு ஓடிவர... அவசரமாய் கதவைத் திறந்து விட்டாள்.

''என்ன?''

''கௌசல்யாவிற்கு ஓவரான சுரம்ங்க!'' என்று அவன் சொல்லும்போதே கண்கள் கலங்கியது.

''ஆதி.. என்ன இது? வெறும் காய்ச்சலுக்கு இப்படிக் கலங்கலாமா?''

காரை விரைந்து ஓட்டினாள்.

''மகா என்மேல் இருக்கும் ஆத்திரத்தில்.. கோபத்தில் பிள்ளையை தண்டிச்சுட மாட்டீயே? எனக்கு உங்கள் மேல் நம்பிக்கை இல்லை! நீங்க இவளுக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்க வேண்டாம்! வேற ஆஸ்பிட்டலுக்கு போறேன்! டாக்டர் மகுடமுடியிடம் காட்டிக் கொள்கிறேன்! அங்கேப் போய் இறக்கி விடுங்க!''

''புத்தி போகுது பார்! உங்களைப் போல என்னையும் நினைச்சிட்டீங்களா? எனக்கு உங்கள் மீதோ.. உங்களைச் சார்ந்தவர்கள் மீதோ கோபமில்லை! உங்க அறியாமை மீதுதான் கோபம்! உங்க பைத்தியக்கார எண்ணத்தின்

மீதுதான் கோபம்! உங்க பைத்தியக்காரக் குறிக்கோளை மீது தான் கோபம்! அந்த உண்மையை புரிஞ்சிக்கங்க, ஆதி! நீங்க அன்பு செலுத்தற குழந்தைதன்னே.. கௌசல்யாவின் மீது... கூடுதலான பற்றும் பாசமும் எனக்கிருக்கு! அதை தெரிந்து கொள்ளாமல் ஏதாவது உளறித் தொலைக்காதீங்க!''

மகாலஷ்மி கடுமையாய் பேசினாள்.

ஆஸ்பிட்டலில் அவளுக்கு ட்ரீட்மெண்ட் நடந்தது.

''கொஞ்ச நேரம்... சுமார் ஒரு மணி நேரம்.. தங்கிப் போகலாம்! என் ரெஸ்ட் ரூமில் இருங்க! நான் நோயாளிகளை... அவர்கள் அறைக்கு சென்று.. விசிட் செய்துவிட்டு.. மற்ற டாக்டர்ளைப் பார்த்து, பேசிவிட்டு வருகிறேன்! பாலும் பிரட்டும் வரும்! அவளுக்கு கொடுங்க! நானும் சீக்கிரமே வர முயற்சி செய்கிறேன்!''

அவளறையில் விட்டுவிட்டு.. ஒரு ரவுண்ட் போனான்.

அடுத்த அரைமணி நோத்தில் ஆதி முன்பும், கௌசல்யா முன்பும் நின்றாள்.

கௌசல்யா எழுந்து, அமர்ந்து.. அவனோடு விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்க்க.... கண்களுக்கு நிறைவாய் இருந்தது.

கௌசல்யா அருகில் போய் மகாலஷ்மி அமர்ந்தாள்.

''நீங்கதான் எனக்கு வலிக்காமல் ஊசிப் போட்டதா?'' மழலையாய் கேட்க...

''யார் சொன்னா?'' புன்னகையோடு கேட்க...

''டாடிதான் சொன்னார்! எனக்கு வலிக்கவே இல்லையே! தாங்க்ஸ், டாக்டர்!'' என்று சொன்ன கௌசல்யா..



மகாலஷ்மியை கட்டி ஆசையோடு முத்தமிடவும் சிலிர்த்து விட்டாள்.

''உன் முத்தமே இவ்வளவு ஸ்வீட்டா இருக்கே! இதுவே உன் டாடி...'' என்று சொல்லிக் கொண்டு போனவளை இடையில் நிறுத்தினான்.

பின் கத்தினான்.

''ஸ்டாப் இட் ஐ ஸே! குழந்தை முன்னாடி எப்படி, எதைப் பேசணும்னு சென்ஸ் இல்லையாங்க? என்னங்க மகா.. இது? கேவலம்! ச்சே!''

ஆதித்யன் முகம் சுளித்தான்.

''இந்த டாடி ரொம்ப மோசம், டாக்டர்!'' என்று கௌசல்யா அலுத்துக் கொள்ள...

''உனக்குமா?'' என்று கண் சிமிட்டினாள்.

''தினமும் காலேஜ் போகும்போது.. மாலை கட்டாயமா.. மம்மி வாங்கி வருவதாய் சொல்லியே... ஒவ்வொரு நாளும் ஏமாற்றுகிறார், தெரியுமா?''

''ஏமாற்றுவதில்தான் உன் டாடி மன்னராச்சே!''

ஆதித்யனை அர்த்தமுடன் விழியோடு விழி நோக்கி விட்டு.. மகா தொடர்ந்தாள்.

''மம்மியைக் கடையில காசு கொடுத்து வாங்க முடியாது. கல்யாணம் பண்ணித்தான் கூட்டி வரணும்! உன்னை உன் டாடி நல்லா ஏமாத்தறார்! நீயும் என்னைப் போல் ஏமாறுகிறாயே! ஆசிரமத்து டீ.வியில கல்யாண சீன் எல்லாம் பார்த்தது இல்லையா?''

''வாயை மூடுங்க, மகா! சின்ன குழந்தைகிட்ட எதெல்லாம் பேசணும்ன்னு விவஸ்தை இல்லையா?''

ஆதித்யன் கேட்டதை காதில் வாங்கிக் கொள்ளாமல்... கௌசல்யாவிடம் கேட்டாள்.

"உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா, கௌஷி?"

"ஐய்யோ... ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு!"

"அப்போ என்னை மம்மின்னு கூப்பிடேன்!" மகா ஆசையோடு சொல்ல...

"மம்மின்னு கூப்பிட்டால் என் டாடியை கல்யாணம் செய்துப்பீங்களா?" என்று அழகாய் கேட்க...

மகாலஷ்மி கௌசல்யாவை இழுத்து... அன்போடு இறுக்கிக் கொண்டாள்.

"கட்டாயமா..." என்றாள்.

"மகா.. அறிவில்லையா? பிஞ்சு குழந்தைகிட்ட என்னென்ன பேசறதுன்னு தெரியாதா? டாக்டர் சும்மா சொல்றாங்க! நீ எதையாவது நம்ம அம்மாகிட்டப் போய் சொல்லிடாதே! உனக்கு நிறைய பொம்மையும் சாக்லெட்டும் வாங்கித் தருகிறேன்!"

அவளுக்கு பிரியமானதை வாங்கிக் கொடுத்து... ஆசிரமம் திரும்ப... கௌஷி எல்லாவற்றையுமே மறந்தேப் போனாள்.

## 15



"என்னங்க ஆதி.. இந்த காலத்தில் ஒரு செல்போன் கூட வச்சிக்காமல் இருக்கீங்களே! நாய், கழுதை, குதிரை



கழுத்திலெல்லாம் கட்டித் தொங்க விடற அளவு.. செல்போன் விலை குறைஞ்சிருக்கு! ஒன்று வாங்கி வைத்துக் கொள்ளக் கூடாதா? உங்களோட நினைச்ச நேரத்துல பேச முடியல, தெரியுமா? சதா உங்க நினைவோடே இருப்பதால் தூங்க முடியல.. சாப்பிட முடியல... சில இரவுகளை கஷ்டப்பட்டு கடக்கிறேன்! அப்போ எல்லாம் உங்களிடம் போன் இருந்தால் நான் பேசுவேன்! என் தூக்கத்தைக் கெடுத்த உங்க தூக்கத்தையும் கெ்டுப்பேன்! கிட்டத்தட்ட இருபதாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறீங்க! உங்களுக்காக ஒரு செலவும் பண்ணிக் கொள்ளாமல்.. எல்லாவற்றையும் ஆசிரமத்துக்காகவே செலவழிக்கறீங்களா?" மகாலஷ்மி கேட்க...

"ஆஸ்ரமம் தான் என் உயிர் நாடி, மூச்சு எல்லாம்!" என்று பதில் சொன்னான் ஆதித்யன்.

"இருங்க! யார் வேண்டாம் என்றா? தேவைக்கு ஒரு செல்போன் கூட வாங்கிக் கொள்ளாமல்..." என்று சலித்துக் கொண்டு சென்ற மகாலஷ்மி...

ஒரு நாள் ஆஸ்ரமத்துக்கு வந்து... ராஜேஸ்வரி அம்மாளின் முன்பு.. ஆதியிடம் ஒரு செல்போனை நீட்டினாள்.

"ஹேப்பி பர்த்டே, ஆதி சார்! இந்தாங்க... இதைப் பிடியுங்க!" என்று அழகான செல்போனை நீட்ட...

"ஏன் பிறந்தோம்ன்னு வெந்து, நொந்து இருக்கும் போது.. பர்த்டே கொண்டாட்டம், பரிசு எல்லாம் இல்லாததுதான் குறைச்சல்!" என்று ஆதித்யன் முகம் வாடிச் சொல்ல...

“இந்த ஆதி எப்பவுமே இப்படித்தாம்மா! வாழ்க்கையில ஒரு பிடிப்பும் இல்லாமல் இருக்கான்! நல்லா ட்ரஸ் பண்ணிக்கச் சொல்லி கெஞ்சிப் பார்த்தேன்! உனக்குன்னு மனைவி, குழந்தைன்னு இருக்கணும்ன்னு தலை தலையா அடிச்சிக்கிறேன்! இவன் கேட்கவே மாட்டேங் என்கிறான்...!

“ஆதி.. மகா ஆசையா வாங்கி வந்து கொடுக்கும் போது... இப்படி வாங்காமல் அவமானப் படுத்தலாமா? வாங்கிக்கோ! இல்லேன்னால் மகாவின் மனசு கஷ்டப் படும்...!

“எந்த நேரமும் சதா ஏதாவது எண்ணத்தோடே இருக்கிறான்! நல்லா இருக்கான்.. அப்படியே திடீரென சில சமயம் பிள்ளைங்க கிட்ட எரிஞ்சி விழறான்! இவன் போக்கே சரியில்லம்மா!”

ராஜேஸ்வரி சொல்லி முடிக்க...

“பிடிங்க, ஆதி!” அவன் கைப்பற்றி... அவன் மூடியிருந்த விரல்களைப் பிரித்துவிட்டு.. உள்ளங்கையில் செல்போனைத் திணித்தாள்.

அதிலிருந்து எந்த நேரம் என்று கணக்கு பாராமல் போன் செய்தாள்.

திடீரென நள்ளிரவில் போன் செய்து,

**‘பாலுங் கசந்த தடி! - சகியே**

**படுக்கை நொந்த தடீ!**

**கோலக் கிளிமொழியும் - செவியில்**

**குத்த லெடுத்த தடீ!**

என்று பாரதியார் பாடலைப் பாடுவாள்.



அவன் வகுப்பறையில் இருக்கும்போது...

“உன்னிடம் மயங்குகிறேன்.. உள்ளத்தால் நெருங்குகிறேன்” என்று பாடுவாள்.

மகாவின் தொல்லைத் தாங்காமல் ஒருநாள் ராஜேஸ்வரி அம்மாளிடம் கொடுத்தான்.

“வயதான காலத்தில் போன் மணி அடிச்சா.. உங்கள் அறையிலிருந்து.. ஆபீஸ் ரூமிற்கு சென்று ரொம்பவே கஷ்டப்படறீங்க! எனக்கு இது தேவையில்லம்மா! உங்களுக்குத் தான் அவசியமே!” என்றான்.

ஆசிரம கட்டிடம் முடிவடைந்து.. நாகேந்திரன் வந்து திறப்பு விழாச் செய்தார்.

ஆசிரமக் குழந்தைகளுக்கு போர்வை, ஆடை என்று மகாலஷ்மி அனுப்பி வைத்தாள்.

மகாலஷ்மியின் ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் நிறைய செய்த நாகேந்திரன்.. இந்த ஆண்டு மகாவோடு சென்று.. நிறைய நன்கொடைகளையும் நன்மைகளையும் செய்துவிட்டு வந்தார்.

அந்த கல்வியாண்டு.. ஆசிரமப் பிள்ளைகளை... மகாலஷ்மி மெட்ரிகுலேசன் பள்ளியில் அனைவரையும் சேர்த்துக் கொள்ள...

இதையெல்லாம் கண்ணுற்ற நாகேந்திரனின் மருமகள்... அருணின் மனைவி கீதா ஆத்திரப்பட்டாள்.

ஏற்கனவே வீட்டில் உள்ளோரை ஒரு பொருட்டாய் நினைக்கமாட்டாள். நாகேந்திரனிடம் மட்டும் அவளுக்கு பயம்! அவளுக்கு அருண் மட்டுமே முக்

ம் அருணை தன்னு மயக்கி.. முந்தானையில் முடிந்து கொண்டாள்.

அடிக்கடி அவனிடம் எதையாவது கூறி.. அவனின் மனதை தன்வசக் முயன்றுக் கொண்டிருந்தாள்.

"மாமாவுக்கு அறிவே இல்லையா? எதுக்காக அந்த ஆஸ்ரமத்துக்கு கொட்டி கொட்டி அளக்கிறார்?

"மகாவோட அழும்புக்கு அளவே இல்லையா? மேலும் கட்டிட வசதி செய்துத் தரப் போறாராம்! தேவையா, அருண்? மகாவோட சேர்ந்துட்டு.. மாமாவும் எதுக்கு இப்படி பண்றாரு... அந்த அநாதைங்களுக்கு செலவிடறார்!

"இவ்வளவுக்கும் மேலா... உங்களை மட்டம் தட்டி.. மகாவை உயர்த்தி பேசியிருக்கலாம்! உங்களுக்குன்னு தான் ஒருத்தி வந்த பிறகும்.. ஏன் உங்களை இப்படி தாழ்வாய், கேவலமாய் பேசுகிறார், மாமா! எனக்கு பொறுக்கவே முடியல, அருண்! என்னையே பேசறாப் போல கஷ்டமா இருக்குப்பா!"

அருணிடம் சொல்லுவாள். ஆனால், அவன் அதற் கெல்லாம் பதிலே சொல்லமாட்டான்.

"அதுவென்னங்க உங்ககிட்ட மட்டும் குறை கண்டு பிடிச்சிட்டு? மகாவை உயர்த்திப் பேசி.. உங்களைத் தாழ்த்தி பேசலென்னால் அவருக்கு பொழுதே போகாதா?

"நிஜமாவே நீங்க அவருக்கு பொறந்தீங்களா? அல்லது ஏதாவது அநாதை ஆசிரமத்துல இருந்து... எடுத்து வந்து வளர்த்தாங்களா? இவ்வளவு இழிவா உங்களை நடத்து றாரே!



"மகாளை எதுக்கு அப்படி கொஞ்சறார்? இழுத்து மடியில போட்டுக்கிறதும்.. கன்னத்துல தட்டறதும்.. கட்டியணைக்கிறதும்.. முத்தமிடறதும்.. சகிக்கலே, தெரியுமா? ச்சே! பார்க்கவே அருவெறுப்பா இருக் குங்க!"

"நாங்க எல்லாம் அப்படித்தான் இருப்போம்! அவள் எங்க வீட்டு மகாராணி. அவளைக் கொஞ்சாமல்... தெருவில் போறவளையா கொஞ்சுவாங்க?" அருண் கோபத்தோடு கேட்க...

"நாங்கலெல்லாம் எங்க அப்பாவை, அண்ணாவை தொட்டுப் பேசியே எத்தனை வருஷமாச்சி!"

"சீதா.. போய் உள்ளே வேலையிருந்தாப் பார்!" என்று அலட்சியப்படுத்திவிட்டு.. அவனும் மகாலஷ்மியை கொஞ்ச வந்துவிடுவான்.

சீதாவிற்கு வயிறெல்லாம் எரியும்!

அன்று ஒருநாள் இரவு.. அருகில் இருந்த சீதாவை அவன் ஆசையோடு அணைக்க...

"விடுங்க.. விடுங்க.. போங்க.. போய் உங்க மகாவை யும், அம்மாவையும் அணைச்சிக்கங்க! என்கிட்ட எதுக்கு வரீங்க?" என்று நாக்கில் நரம்பில்லாமல் கூற... மறு விநாடியே அருண் அவளின் கன்னம் பழுக்க ஓங்கி அறைந்துவிட்டான்.

கொஞ்ச நாள் கழித்து மீண்டும் சாத்தான் வேதம் ஓத ஆரம்பித்தது.

"உங்கப்பா பிசினஸையெல்லாம்.. மகாலஷ்மி பேரி லேயே செய்கிறாரே, ஏன்? இதை நினைத்து ஒருநாளும்

வருத்தப்பட்டதில்லையா?'' என்று கீதா அருணிடம் நெருங்கி அமர்ந்து கேட்க...

''வேண்டாததை எல்லாம் நினைச்சி... மண்டையைப் போட்டு குழப்பிக்காதே, கீதா!'' அவன் சலித்துக் கொள்ள...

''உங்களுக்கு அவமானமா இல்லையா?''

''கீதா.. எதுனா வேலையிருந்தால் பார்! இப்படியே திண்ணு திண்ணுட்டு பீப்பாய் போல உப்பிப்போறே! உன் அழகுக்காகத்தான் உன்னை நான் கட்டிக்கிட்டதே! உன் அழகை பராமரிக்க சிந்திப்பதை விட்டுட்டு.. கண்டதையெல்லாம் சிந்திக்காதே! அது உனக்கு தேவையில்லாததும் கூட!''

''ஆனால், என் ப்ரண்டுங்க எல்லாம் கேட்கும் போது எனக்கு அவமானமா இருக்கு!'' என்று கீதா சொல்ல...

''எய்....'' என்று கத்த..

''என் வாயை எதுனா சொல்லி மூடிடுங்க? இப்படியே போனால்.. உங்க தங்கச்சி மேலுள்ள பாசத்தால.. உங்க அப்பா எல்லாச் சொத்தையும்.. அவ பேர்லே எழுதி வச்சாலும் வச்சிடலாம்! அப்புறம் திருவோடை எடுத்துட்டு.. நாம்ம ரெண்டு பேரும், நமக்கு பிறக்கப் போற குழந்தையோட பிச்சையெடுக்கப் போகலாம், சரிதானே? சந்தோசம் தானே?'' வெடித்தாள், கீதா.

நான்கு நாட்கள் பேசாமல் இருந்தாள். படுக்கையையும் தள்ளிப் போட்டாள்.

ஐந்தாள் நாள் இரவு.. அவன் பார்க்க பார்க்க உடைகளைக் களைந்துவிட்டு... மெல்லிய இரவு ஆடையை



அணிந்துக் கொண்டு.. அவனுக்கு முதுகு காட்டிப் படுக்க... அருண் அம்பேல்!

அவளை இழுத்து.. அருண் தாபத்தோடு அணைக்க...

''விடுங்க... விடுங்க! சொல்றேனே, காதுல விழலையா?''

''என் கீதாக் குட்டிக்கு.. என் மேல் என்ன கோபம்?''

''விடுங்க!'' திமிறினாள்.

''உங்களுக்கு நான் முக்கியமில்லை! அலுத்துட்டேன் போல!'' பொய்யான கோபம் காட்டினாள்.

''என் செல்லமே.. என்ன பேசுகிறாய்? உன்னை மணக்க.. அப்பாவிடம் எவ்வளவு கெஞ்சினேன், தெரியுமா? உன் மேல் அவ்வளவு நேசம்!''

''பொய் சொல்லாதீங்க, அருண்! அன்னைக்கு என் அழகுக்காக தான் கட்டிட்டதா சொன்னீங்களே!''

''அது சும்மாடா! உன் மேல் உள்ள கோபத்தால் சொன்ன வார்த்தைகள்!''

''என்னை விட உங்களுக்கு.. உங்க அப்பா, அம்மா, மகாலஷ்மிதானே முக்கியம்! உயர்வு! ஒஸ்தி!''

''என்ன இது பைத்தியக்காரத்தனம்? அவங்களோட நீயும்தான் என் உயிர்!''

''அவங்களைவிட... நான் உங்களுக்கு ஸ்பெஷல் இல்லையா?'' என்று சிணுங்க...

''சரி... நீ ஸ்பெஷல்தான்! முக்கியம்தான்! இல்லேன்னால் தண்டிச்சுடுவீயே, கண்ணே!'' என்று அருண் சிரிக்க...

''நமக்கு எதைத் தரப் போகிறார்? நமக்கு என்ன சொத்து? பின்னாடி கொடுப்பதை.. இப்பவே இது உங்களுக்குன்னு சொல்லிட்டால்.. சந்தோசமா இருக்கும், இல்லையா? பொண்ணு பாசத்துல அத்தனையையும் அவ பேர்ல எழுதி வைக்கறதுக்குள்ள... நாம முழிச்சிடணும்! உங்களுக்கான சொத்தை.. உங்க பேர்ல எழுதி வைக்க சொல்லுங்க, அருண்?'' அவள் அவன் கன்னத்தில் முத்தமிட்டு.. மீண்டும் கேட்டாள்.

''அருண்.. ப்ளீஸ்... நான் சொன்னால் கேட்பீங்க தானே?'' அவள் குழையவும்...

அருண் முந்தானை போதையில் ''ம்...'' என்றான்.

அடுத்த நாள் காலை..அனைவரும் டைனில் ஹாலில் உணவு அருந்த.. அம்மா பரிமாறினாள்.

கீதா அருணிடம் 'கேளுங்கள்' என்று ஜாடைக் காட்டினாள்.

''டாடி... நான் ஒன்று சொல்வேன்! தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது! உங்களுக்கும் வயசாகிகிட்டேப் போகுது! என்ன என்ன சொத்து என்று.. எனக்கும் மகாவுக்கும் சொல்லி... எங்கள் பெயரில் எழுதி வைத்து விடலாமே! தெரிஞ்சிக்கணும்ன்னு ஆசையா இருக்குப்பா!''

அருண் சொல்ல.. நாகேந்திரன் அவனை வேதனையோடு பார்த்துவிட்டு கேட்டார்.

''உனக்கு தெரிஞ்சிக்கணும்ன்னு ஆசையா? இல்ல உன் பொண்டாட்டிக்கா?''

''ஏன் டாடி... அவளை வம்புக்கு இழுக்கறீங்க? நானேவாகத்தான் கேட்கிறேன்!''



மகாலஷ்மி உள்ளுக்குள் நொருங்கிப் போனாள்.

''பார்த்தால் நீயா கேட்பதுபோல தெரியலையே! இதுவரைக்கும் இது பற்றி சிந்திக்காதவன்... கேட்காதவன்.. புதுசா இப்போ கேட்கிறாயே! ஆச்சரியமா இருக்கு! குப்பையில் இருந்ததை கோபுரத்தில் கொண்டு வந்து உட்கார வைத்தால்... அப்புறம் எப்படி இருக்கும்? ம்? அது தன் புத்தியைத்தான் காட்டும்!''

நாகேந்திரன் கீதாவை பார்த்து கேட்க...

''மாமா.. கொஞ்சம் நாகரீகமா பேசுங்கள்!'' என்றவள்... அருணைப் பார்த்து...

''என்னங்க.. மாமா என்னை கேவலமா பேசறார்! கல்லா பார்த்துட்டு இருக்கீங்களே!'' என்று கத்தினாள்.

''டாடி.. லிமிட்டோட பேசுங்க! அவளை அவமானப் படுத்தினால்.. கையைக் கட்டிட்டு பார்த்துட்டு இருக்க மாட்டேன்!''

''என்னடா பேசறே?'' சாரதா கை ஓங்கி வர...

''எப்பவோ செய்யறதை... இப்பவே செய்தால் என்ன?''

''எப்படியோ உன் பொண்டாட்டி... நம்மையும், நம்ம வீட்டையும் பிரிக்கப் பார்க்கிறாள்! பெத்த பிள்ளை நீயுமே அவளுக்கு துணைப் போறே!'' என்று சாரதா விம்ம...

அருண் வாயை மூடிக் கொண்டான்.

''என் பொண்ணுக்கு.. எதுவுமே கொடுக்காமல் வெளியே அனுப்பினாலும்.. அவள் திறமைக்கும், புத்திசாலித்தனத்துக்கும் நாளைக்கே கோடீஸ்வரியா ஆகிக் காட்டுவாள். அவளை அப்படி வளர்த்திருக்கேன்!

உங்களால் ஒன்றும் இல்லாமல் வெளியே போய்.. முன்னேறி காட்ட முடியுமா?''

நாகேந்திரன் கேட்க...

''தேவையில்லாததை எல்லாம் ஏன் பேசறீங்க, மாமா?''

''சரி விஷயத்துக்கு வரேன்! மகா.. உனக்கு என்னம்மா வேண்டும்?''

''பார்த்தீங்களா? நீங்க முன்ன பிறந்தீங்களா? இல்ல இவள் பிறந்தாளா? உங்களுக்கு மரியாதை இவ்வளவு தான்'' கீதா சொல்ல...

''சும்மா இரு, கீதா!'' அவளை அடக்கினான்.

''மகா.. உனக்கு என்ன வேண்டும்?''

''எனக்கு எதுவுமே வேண்டாம், அண்ணா! எனக்கு என் அப்பாவை, அம்மாவை மட்டும் கொடுத்திடுங்க! மீதி எல்லாத்தையும் நீங்களே எடுத்துக்கங்க! எது இல்லாமல் வேணாலும் இருந்திடுவேன்! என் தாயும் தகப்பனும் இல்லாமல் இருக்க மாட்டேன்!''

அருண் நெகிழ்ந்துப் போனான்.

மகாலஷ்மியின் கண்கள் நீரால் நனைய...

சாரதா முதுகு குலுங்க விம்மினாள்.

நாகேந்திரன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டார். இதயத்தின் மத்தியில் சிறிதாய் ஏற்பட்ட வலி.. பெருகிக் கொண்டே சென்றது.



# 16

வழக்கமான கல்லூரி பூங்கா.

ஆதித்யன் அங்கே அமர்ந்திருக்க..கொஞ்ச நேரத்தில் மகாலஷ்மி அங்கே செல்ல...

''வந்துட்டையா? எங்கடா காணலையேன்னு பார்த்தேன்!'' என்று நக்கலோடும், ஒருமையிலும் சொல்ல...

''ஆஹா.. நான் காணலையேன்னு நினைச்சதே.. என் நேசத்துக்கு கிடைத்த முதல் வெற்றியாச்சே! குட் ஆதி! தெளிவா இருந்த இதயக்குளம்.. நான் எடுத்து வீசின கல்லால் கலங்கிடிச்சா? ரொம்ப சந்தோஷம்!''

''ஏய் மகா... என்னைப் பற்றி நீ.. என்ன தான்டி நினைச்சிட்டு இருக்கே?'' அவன் தீங்கங்குகளாய் எரியும் கண்களோடு கேட்க...

'குட் 'டி' போட்டு பேசற... இந்த உரிமையும் பிடிச்சிருக்குடா, கண்ணா!''

''நான் பொல்லாதவன்!''

''அப்படியா நம்ப முடியலையே! பொல்லாதவனுக்கான அடையாளம், செய்கை, செயல் எதுவுமே உங்ககிட்ட இருப்பதாக தெரியலையே!''

''என்னை மாதிரி ஒரு அயோக்கியனை... நீ இது வரைப் பார்த்திருக்க மாட்டே! என் இன்னொரு முகம் தெரியுமா?''

"தெரியாதே! காட்டுங்களேன்! நானும் பார்க்கிறேன்!" நக்கலாய் மகாவிடம் இருந்து பதில் வர.. மேலும் ஆத்திரமானான் ஆதித்யன்.

"நீ நினைக்கறாப்போல.. நான் ஒன்றும் அவ்வளவு நல்லவனில்லே!"

"ஐய்யோடா...!" ஆச்சரியப்படுவது போல நடித்தாள்.

"நான் முழுக்க சிகரெட்டா ஊதித் தள்ளுவேன்!"

"அப்படியா?" அவனின் இளவண்ண ரோஜா நிற உதட்டில் பார்வையைப் பதித்தாள், மகாலஷ்மி.

"சந்தோசமா இருக்கும்போது தண்ணி போடுவேன்!"

"ம்ம்...!"

"பொம்பளையை சைட் அடிக்கறதுன்னா ரொம்பவே பிடிக்கும்! என் அழகில் மயங்கினாள்ன்னா... அவளைத் தனியே தள்ளிட்டுப்போய்.. எது வேணாலும் செய்துட்டு.. கையை கழுவிடுவேன்! அதெல்லாம் தெரியுமா?" என்று சீற...

"நான் காத்துட்டு இருக்கேனே! என்னையும் தள்ளிட்டுப் போய்.. என்ன வேணா செய்யலாமில்லே? அதுக்காகத்தானே.. ஏங்கி..தவிச்சிட்டு இருக்கேன்! உங்க ஆம்பளை தனத்தை என்கிட்டேயும் 'கொஞ்சமா' காட்டலாம் இல்லையா?" புன்னகையோடு கேட்க..

"இவ்வளவு கெட்டப்பழக்கம் இருக்குன்னு சொல்றேன்! விலகிப்போக மாட்டாயா? என்மேல் உனக்கு வெறுப்பா இல்லையா? நீ சீரியஸாகி எதையாவது எடுத்து அடிப்பேன்னு நினைச்சேன்! நீ என்னடான்னா 'ஹாயா' உட்கார்ந்து இருக்கீயே?"



"ஏய் அமுல் பேபி.. நீங்க ஒரு அக்மார்க் குத்தின நல்ல ஆம்பளைன்னு எனக்குத் தெரியும்! ஏன் நீங்கள் சேறையும்.. சகதியையும் வாரி.. உங்க மேலே பூசிக்கிறேங்க? நீங்க கெட்டவன்னு சொன்னால் நம்பிடுவேனா? நான் என்ன கௌசல்யா மாதிரி பாப்பாவா? கௌசல்யா ராஜேஸ்வரி அம்மாவிடம் எதுவுமே சொல்லாமல் ஏமாத்திட்டாளா, இல்லையா?"

"உன்னைத் திருத்தவே முடியாதுடி! ச்சே போடி!" என்று கூறிவிட்டு... நேரே ஆசிரமத்துக்கு வந்துவிட்டான்.

கொஞ்ச நோத்தில் போன் மணி ஒலிக்க.. அவன் எழுந்துப் போனான்.

ராஜேஸ்வரி அம்மாள் ஒரு பிரமுகரைப் பார்க்கப் போயிருந்தார்.

"ஹலோ... சுபாஷ் சந்திர போஸ் ஆசிரமமா? நீங்க யார், சார்? ஆதியா? இங்கே மகாலஷ்மி பாய்சன் சாப்பிட்டுவிட்டு... அவங்க ஆஸ்பிட்டல்ல அட்மிட் ஆகி இருக்காள்! உங்களையே தேடறா! உங்க பேர் சொல்லிப் புலம்பறாள். பொய்யில்லே! ஒரு ஜீவனோட மரண போராட்டத்தில்... கடைசி நேரத்து ஆசையை நிறைவேற்றுங்க! உங்களைப் பார்க்கணும்ன்னு துடியா துடிக்கிறாள். அவள் தோழி டாக்டர் மஞ்சுளா நான்!"

போன் கட்டாகி விட்டது.

ஆதி துடித்துவிட்டான்! கலங்கி விட்டான்!

'மகா.. மகா..' அவன் உள்ளம் அலறியது.

டுவீலரை கண்மண் தெரியாமல் ஓட்டிக் கொண்டு போய்... ஆஸ்பிட்டல் முன்பு நிறுத்தினான்.

'ஏன் இவ்வாறு என் இதயம் பதைக்கிறது?'

'ஏன் எனக்கு இந்த செய்தி நடுக்கத்தை.. கலக்கத்தை.. பதபதைப்பைத் தருகிறது?'

தன்னையே கேட்டும் விடைத் தெரியாமல்... ஒவ்வொரு அறையாய் ஓடினான்.

எதிர்ப்பட்ட டாக்டரிடம்...

"டாக்டர்.. டாக்டர்.. மகா.. மகா..." என்று தடுமாறினான்.

"மகாவுக்கு என்ன? நல்லாத்தானே இருக்காங்க! ஒரு பாய்ஸன் கேஸுக்கு ட்ரீட்மெண்ட் நடக்குது! அதை மேற்பார்வை பார்த்துட்டு இருக்காங்க!" என்று அந்த டாக்டர் கூறிவிட்டுச் செல்ல... அங்கிருந்த பெஞ்சில் பொத்தென்று அமர்ந்தான்.

"என்ன பயந்துட்டீங்களா? அப்படியெல்லாம் பாய்சன் சாப்பிட்டு செத்துடமாட்டேன்! உங்களை மணந்து.. சுமார் அறுபது, எழுபது வருடமாவது உங்களோடு வாழ்ந்துட்டுதான்.. நான் சாவேன், கண்ணா? என் மேல் அன்பு இல்லாதவர்தான்.. இத்தனை அலறி அடிச்சி ஓடிவந்தீங்களா?"

மகாலஷ்மி கேட்க... அவன் எதுவும் பேசாமல் கிளம்பினான்.

'அவளுக்கு ஒன்று என்றால் துடிக்க நான் யார்?'

'நீ வேலை செய்யும் கல்லூரியின் கரஸ்பாண்டண்ட் என்றால் பதைக்காமல் இருக்காதா?'

அவனின் கேள்விக்கு.. அவனுடைய மனம் பதில் சொன்னது.



'கரஸ்பாண்டண்ட் என்பதற்காக மட்டும்தான் உன் இதயம் அழுததா?'

'நல்ல தோழி.. தைரியசாலி.. திறமையான நிர்வாகி!'

'மடையா.. இதுவரை நல்ல நிர்வாகியை பார்க்காதது போல பேசுகிறாயே! நாகேந்திரன் சார் கூட நல்ல நிர்வாகிதான்! அவருக்கென்றால் இவ்வாறு ஓடுவாயா? மாட்டே! மகாவுக்கு ஓடுகிறாய் என்றால் நீ அவளை நேசிக்கிறாய்! அவள் உன் இதயத்தைக் கவர்ந்து விட்டாள்.' அவன் மனம் கூற...

"நோ.. நோ.." என்று நடுரோட்டில் கத்திவிட... அனைவரும் அவனைத் திரும்பிப் பார்த்தனர்.

இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று நினைத்தவனின் எண்ணத்தில் பின்னர் மண் விழுந்தது!



## 17

மதியம் 3.00 மணிக்கு மேல் லெட்டர் பாக்ஸ்ஸை திறந்த அட்டண்டர்.. அத்தனை கடிதங்களையும் எடுத்துக் கொண்டு போய்... ஒவ்வொருவரிடமும் கொடுத்துக் கொண்டே வந்தான்.

மகாலஷ்மி ஒவ்வொரு வகுப்பறையாய் விசிட் செய்துக் கொண்டு வர... எதிர்ப்பட்ட அட்டண்டர்...

''மேடம்.. ஆதி சாருக்கு வெளிநாட்டுல இருந்து ஒரு தபால் வந்திருக்கு! இன்னைக்கு பார்த்து லீவுல இருக்கார். நான் என்ன செய்யட்டும்? அவசரமான தபாலாக்கூட இருக்கலாம். போன் பண்ணி வரச் சொல்றீங்களா? அல்லது இல்லத்துக்கு நானே நேரில் சென்று கொடுத்துவிட்டு வரவா?'' அவன் விளக்கம் கேட்க...

''மாலை இல்லத்துக்கு போற வேலை இருக்குப்பா! நானே கொடுத்துவிடுகிறேன். என்னிடம் கொடு!'' என்று வாங்கிக் கொண்டாள்.

கடிதத்தைப் பிரித்துப் பார்த்தவள் அதிர்ந்தாள்.

அது ஒரு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர்!

சிங்கப்பூரில் உள்ள.. ஒரு தனியார் பள்ளியில்... தமிழ் ஆசிரியராக பணிபுரிய வரச் சொல்லி.. அனுப்பி இருந்த கடிதம் அது!

உடனே காரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

ஆதித்யன் முன்பு நிற்க.. மகாலஷ்மியை கண்டவன்...

''வந்துவிட்டதா வில்லங்கம்!'' என்று கேலியாய் கூறியவன்...

''ஏன் மகா.. நான் நிம்மதியாய் இருப்பது பிடிக்கலையா? இங்கேயும் என் மன அமைதியைக் குலைக்க... புறப்பட்டு வந்துவிட்டாயா?'' என்று கடுப்போடு கேட்டான்.

''உங்களுக்கு ஒரு குட் நியூஸ்! உங்களுக்கு சிங்கப்பூரில் தமிழாசிரியர் வேலை கிடைச்சிருக்கு! அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைக் கொடுக்க வந்தால்... விரட்டுறீங்களே!''



''ஏய்.. அப்படியா? கொடு.. கொடு..'' அவன் ஆர்வத்துடன் அவசரப்படுத்த...

''என்ன அவசரம்? என்னை விட்டு கண்காணாமல் போக.. அவ்வளவு ப்ரியமா?'' அவள் வாடிய முகத்துடன் கேட்க..

''நீ அப்புறம் பேசலாம்! முதலில் ஆர்டரைக் கொடு!''

''என் மேல் அவ்வளவு வெறுப்பா? அவ்வளவு கசப்பா?''

''ஏய்.. ஆர்டரைக் கொடுக்கப் போறீயா? இல்லையா?'' அவன் சப்தம் போட...

''ஏன் ஆதி.. மேலும் மேலும் என்னை நோகடிக்கறீங்க? பெண்களின் மனசை பூவுக்கு ஒப்பிடுவாங்க! ஆனால் நீங்க என் மனசைப் புரிந்து கொள்ளாமல்.. பூகம்பமாகவும்.. புயலாகவும்.. சூறாவளியாகவும் தாக்கறீங்களே! இது உங்களுக்கே நல்லா இருக்கா? நான் இந்த கடிதம் கண்டு.. எப்படி கலங்கினேன், தெரியுமா? நீங்க விலகி விலகிப் போவதையே என்னால் தாங்க முடியலை! ஆனால் இப்படி ஒரேயடியா விலகிப் போக நினைக்கறீங்களே! உங்கள் பிரிவை என்னால் தாளமுடியாது, ஆதி..!''

''எனக்கு மட்டும் நீங்க கிடைக்கலை.. என்ன செய்வேன்னே தெரியாது, தெரியுமா? எங்கே போனாலும்... பின்னாடியே தேடி வருவேன், ஆதி! விடமாட்டேன், ஆதி! என்னை விட்டு எவளையாவது கட்டவோ... நினைக்கவோ செய்தால்.. உங்களைக் கொன்னுடுவேன்! ப்ளீஸ் ஆதி... என் அன்பை.. என் நேசத்தை.. என் பாசத்தை.. புரிந்து கொள்ளுங்கள்! என்னைக் காப்பாற்

றுங்கள்! என்னை என்னிடமிருந்தே காப்பாற்றுங்கள்! மனபாரத்தை தாங்கவே முடியவில்லை!''

மகாலஷ்மி ஆவேசத்தோடு.. கண்களில் கண்ணீர் வழிய சொல்ல...

''கொடு, மகா! கடிதத்தைக் கொடு!''

''கடிதம் வேணுமா? ஆர்டர் வேணுமா?'' என்றவள் பையிலிருந்து ஆர்டரை எடுத்தாள்.

அவன் மகிழ்ந்தான்.

அவன் முகத்துக்கு நேரே தூக்கிக் காண்பித்தவள்... சட்டென்று.. சுக்கு நூறாய் கிழித்து.. அவன் முகத்தில் வீசினாள்.

ஆதித்யன் அதிர்ந்தான்.

மகாலஷ்மி புயலைப்போல அவ்விடம் விட்டு அகன்றாள்.

எத்தனை ஆசையோடு செய்த செயல்! எல்லாம் வீணாகிப்போயிற்றே!

ராட்சசி.. இதன் மதிப்பு தெரியாமல் கிழித்து எறிந்து விட்டாளே!

மாதம் ஒன்றரை லட்சம் சம்பளமுள்ள தமிழாசிரியர் வேலையல்லவா..! பாதகி.. ஒரு நொடியில் உருவில்லாமல் செய்து விட்டாளே!

எத்தனை திமிர்! ஒரு பெண்ணுக்கு இவ்வளவு அகம்பாவம் இருக்கலாமா? ஆணவம், செருக்கு ஏற்படலாமா?

'சிங்கப்பூரில் தமிழாசிரியராய் பணிபுரிய.. நல்ல தமிழ்ப்புலமையும்.. படிப்பும்.. குரல் வளமும்.. திறமையும்



உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். தங்குமிடம், உணவு... எங்கள் நிறுவனமே அதற்கான செலவை ஏற்றுக் கொள்ளும். மாதம் ஒன்றரை லட்சம் சம்பளம். தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.'

யோசித்தான். நல்ல சம்பளம். அப்படியே ஆசிரமத்துக்கு அனுப்பிவிடலாம்! மகாலஷ்மியின் தொல்லையிலிருந்தும் விடுபடலாம் என்று நினைத்து செய்த வேலைதான், அது! இங்கே இருந்தால் அடிக்கடி சீண்டியும்.. மயக்கும் பார்வையாலுமே.. என்னை வீழ்ச்சியுற செய்தாலும் செய்துவிடுவாள். இந்த மனதை கட்டுப்படுத்துவது சிரமமாக இருக்கிறது. ஏதாவது கோபப்படுத்தி... கோபப்படுத்தியே... அவளை நாள் முழுக்க நினைக்க வைக்கிறாள்.

வெறுப்பு ஒரு நாள் விருப்பாய் மாறாமல் இருக்க.. அவளை விட்டு தூரே விலகிச் சென்றுவிடுவது நல்லது என்று தோன்றவும் எழுதிப் போட்டான்.

வேலைக்கான ஆர்டரும் வந்து.. சதிகாரி இப்படி கிழித்தெறிந்து விட்டாளே!

மகாலஷ்மி செய்தது அகம்பாவத்தால்... ஆணவத்தால்.. செருக்கால் என்று நினைத்துக் கொண்டிருந்தான், ஆதி.

அவள் செய்தது அன்பால்.. அவன் மேல் உள்ள அபரிமிதமான அன்பால்.. என்று எப்போதுதான் புரிந்துக் கொள்வானோ!

மகாலஷ்மியின் வீட்டில்... சாரதா, நாகேந்திரன் இருவரும் மகாலஷ்மிக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து வைக்க.. நிரம்பவே ஆசையோடு இருந்தனர்.

கீதா வேறு, அருண் பெயரில், சொத்துக்களைப் பிரித்து எழுதச் சொல்லி.. சதா நச்சரித்துக் கொண்டே இருந்தாள்.

''மாமா.. எங்களுக்கான சொத்தை எப்போதான் பிரிச்சித் தரப்போறீங்க?'' என்று நாகேந்திரனிடம் அன்று கேட்க...

''என்ன அவசரம், கீதா? மகாலஷ்மிக்கு ஒரு கல்யாணத்தை முடிச்சிட்டு.. பிறகு இதற்கான ஏற்பாடு செய்யலாமே!''

''இவளை இன்னும் எத்தனை நாளைக்கு வீட்டிலே வச்சி கொஞ்சிட்டு இருப்பதாக நினைப்பு? மாமா.. மகாவுக்கும் வயசாகிட்டேப் போகுது! சீக்கிரமே கல்யாணத்தை முடிங்க!'' என்று கீதா சொல்ல.. மகா சண்டைக்குப் போய்விட்டாள்.

''நான் தான் எனக்கு எதுவுமே வேண்டாம் என்று சொன்னேனே! எல்லாச் சொத்தும் உங்களுக்குத்தான்! அதை எதுக்கு அருண் பேர்ல மாற்றணும்? ஏன் எங்க டாடி பெயர்ல இருந்தால் என்னவாம்? நான் போட்டிக்கு வர்ல! நீங்க பயப்பட வேண்டாம்!''

''இப்போ அப்படித்தான் சொல்வேம்மா! அப்புறம் உன் மனம் மாறாதுன்னு சொல்ல முடியுமா?''

''நான் ஒன்றும் உங்களைப் போல பச்சோந்தி இல்லை! நேரத்துக்கு நேரம் நிறம் மாறுவதற்கு! இந்த பெரும் சொத்து எல்லாமே.. எங்க டாடி சம்பாதித்தது! அவர் பார்த்து உங்களுக்கு கொடுத்தாத்தான் ஆச்சி! அதனால் அப்பாவிடம் இப்படியெல்லாம் முன்னே நின்று கேள்வி கேட்க வேண்டாம்! ஜாக்கிரதை!''



''என் மாமனார்.. அவர்கிட்டே முன்ன நின்று பேச... எனக்கே உரிமையில்லன்னு சொல்ல நீ யார்?''

''நான் அவர் பெற்ற மகள்! எனக்கிருக்க உரிமையை விட உங்களுக்கு ஒரு படி குறைவுதான்! ஞாபகத்துல வச்சுக்கங்க!''

''முதல்ல உன்னை எவன் கிட்டவாவது கட்டிக் கொடுத்து.. இங்கிருந்து உன்னை வெளியேற்றணும்!''

''இது என் வீடு! கல்யாணம் என் விருப்பம்! அதுல தலையிட உங்களுக்கு உரிமையில்லே!''

மகாலஷ்மி சப்தம் போட.. நாகேந்திரன் அடக்கினார்.

''விடும்மா! அவள் தெரியாமல் எதையாவது சொல்கிறாள்! உன் அண்ணிதானே! அண்ணாவுக்காக மன்னிச்சிவிடு!'' என்று மகாவை அவர் சமாதானப்படுத்த.. கீதா முகத்தை தோளில் இடித்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

''மகா..என் செல்லமே.. எனக்கும் உடல்நிலை சரியில்லடா! அடிக்கடி நெஞ்சுவலி வருது!''

''ஆஸ்பத்திரிக்கு வாங்கப்பா! ட்ரீட்மெண்ட் தரேன்! வீட்டுலேயே ஒரு ஹார்ட் ஸ்பெசலிஸ்ட்டை வச்சிட்டு.. நெஞ்சு வலிக்குதுன்னா என்ன அர்த்தம்?''

மகாலஷ்மி வேகமாய் தந்தையைப் பார்த்து கேட்க...

''எனக்கு ட்ரீட்மெண்ட் உன் கல்யாணம் தான்டா! உன்னை மாலையும் கழுத்துமா பார்க்க ஆசையா இருக்குடா! உன்னைக் கல்யாணக் கோலத்துலப் பார்த்துட்டு சாகணும்!''

''என்னப்பா நீங்க?'' என்று மகா அதட்ட...

''நீ படிக்கற காலத்துல யாரையாவது விரும்பியிருந்தியா.. ஏதாவது உன் நேசம் தோற்றுப் போயிருக்கா? கல்யாணத்தை இந்த அளவு தள்ளிப்போட.. என்ன காரணம்டா?''

''உங்களுக்கு கற்பனை வளம் ஜாஸ்தி, டாடி!''

''அப்படி இப்போ யாரையாவது விரும்புறியா?'' என்று நாகேந்திரன் கேட்க...

'சொல்லிவிடலாமா...?'

'நான் ஆதியை காதலிக்கிறேன் என்று அப்பாவிடம் போட்டு உடைத்து விடலாமா?'

'சொன்னால் அப்பா எக்கச்சக்க ஆசையை மனதில் நிரப்பிக் கொள்வார். ஒரு வேளை.. ஆதி இதற்கு மறுத்து விட்டால்.. அப்பா நொருங்கிப்போவார்! அது அவரின் உடல்நிலையைப் பாதிக்கலாம்!'

'அல்லது ஆதி.. அப்பாவின் வற்புறுத்தலுக்கு கட்டுப்பட்டு.. என் கழுத்தில் மாலை சூடலாம்! ஆனால் கட்டாயத்தின் பேரில்.. ஒரு பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டியவன்... எவ்வாறு சந்தோசமாய் இருப்பான்?'

'அநாதையாய் பிறந்ததையே நினைத்து.. உள்ளுக்குள் உருக்குலைந்து போகிறவனை.. பாவம் மேலும் வேதனையுறச் செய்யலாமா? அவன் வேதனையை வேடிக்கைப் பார்க்கலாமா?'

'ஆதிக்கு...என்மேல் அன்பு இருக்கிறதா என்று புரிந்து கொள்ளவே முடியவில்லை.'

'விரும்புகிறவனின் விருப்பம் இல்லாமல்... அப்பாவிடம் எதையாவது சொல்லி ஆசையை வளர்க்க



வேண்டாம்! அவன் விருப்பத்தை முடிவாய் அறிந்துக் கொண்டு.. அப்பாவிடம் விஷயத்தைக் கூறலாம்!'

''என்ன மகா மௌனமாயிட்டே! நீ யாரையாவது விரும்புறியாடா? டாடி கிட்ட என்ன தயக்கம்? ம்?''

''ஐய்யோ.. டாடி.. அதெல்லாம் இல்லை! இன்னும் கொஞ்ச நாள் டைம் கொடுங்க! உறுதியா என் சம்மதத்தை தந்துடறேன்! அப்புறமா கல்யாணம் பண்ணி வையுங்க!''

''இந்த அளவு சொன்னியே! இதுவே போதும்டா, மகா!''

நாகேந்திரன் மகிழ்ந்துப் போனார்.

கடைசி முறையாய் ஆதித்யனிடம் முயன்று பார்க்க வேண்டும். சம்மதித்தால் திருமணம்! இல்லையேல் பக்குவமாய் தந்தையிடம் 'திருமணத்தில் நாட்டமில்லை! கடைசிவரை கன்னியாகவே... உங்களோடு காலத்தைக் கழித்து விடுகிறேன்' என்று கட்டாயமாய் சொல்லிவிட வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

அவளின் முடிவு எதுவுமே பலிக்கப்போவது இல்லை என்று தெரியாமல்.

## 18



'சுபாஷ் சந்திரபோஸ்' இல்லத்திற்கு கலெக்டர் ஆபீஸிலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.

அதை எடுத்து பிரித்துப் பார்த்த.. ராஜேஸ்வரி அம்மாள் மகிழ்ந்துப் போனாள்.

'ஆகஸ்ட் 15, சுதந்திர தினத்தன்று.. விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்.. ஆதித்யனுக்கு 'சுற்றுச் சூழல் பாதுகாவலர்' என்ற விருதினை கலெக்டர் நவநீத் வழங்கப்போவதாகவும்... அதனை வந்து பெற்றுச் செல்லுமாறும்..அவனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது.'

அவன் பசுமையை நேசித்ததற்கும்... சுற்றுச் சூழலைப் பாதுகாத்ததற்கும் அவ்விருது வழங்குவதாய் இருக்க...

ஆதித்யன் வருகைக்காகக் காத்திருந்தார், ராஜேஸ்வரி அம்மாள்.

அவன் இத்தனை நாளும் கஷ்டப்பட்டதற்கு பலன்.

இன்று கலெக்டர் கையால் விருது வாங்குபவன்... நாளை கவர்னர் கையால்.. பிரதமர்.. குடியரசு தலைவர் கையால் வாங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

இத்தனை சிறப்பான பிள்ளை என்று தெரிந்திருந்தால்...அவன் தாய்.. அந்த இல்லத்தில்... அநாதையாய் போட்டு விட்டுப்போய் இருப்பாளா?

ஆண்களிலேயே ஆதித்யன் அபூர்வமானவன்!

அபூர்வமான குணம் படைத்தவன்!

எல்லோருக்கும் நல்லவனாய் இருக்கும் அவன்... மகாலஷ்மியை மட்டும் வஞ்சிப்பதேன்?

வஞ்சியவள்.. வஞ்சிக்கப்பட காரணம்..அவன் வீணாப் போன மனமல்லவா? குறிக்கோள் அல்லவா? கொள்கையல்லவா?

தேவையா? இப்படி ஒரு விபரீதமான எண்ணம் தேவையா?



மாலை வந்ததும்.. அவனிடம் கடிதத்தைக் காட்ட... அக மகிழ்ந்துப் போனான், ஆதித்யன்.

இந்த செய்தி மகாலஷ்மியின் காதுக்கும் எட்டி.. அவள்.. அவனுடைய கைக் குலுக்கி.. தனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்தாள்.

"கிரேட், ஆதித்யன்! ரியலி கிரேட்! வாழ்த்துக்கள், ஆதித்யன்!"

"தேங்க்யூ, மகாலஷ்மி!" ஆதித்யனும் சந்தோசமாகி... நன்றியை கூற...

"கலெக்டர் கையால் விருது வாங்குவது எளிதல்ல. எத்தனை பெரிய விஷயம்! ஆஹா... நைஸ்... பெண்டாஸ்டிக்!"

"கலெக்டர் என்பதைவிட.. உன் வருங்கால கணவர் என்று சொன்னால் சிறப்பாய் இருக்குமே, மகா!" என்று ஆதித்யன் சொல்ல.. சட்டென்று அவளிடம் சினம் மூண்டது.

"ஆதி..என்னா விளையாடறீங்களா?"

"நிஜம் சொன்னால்.. விளையாட்டா?"

"இது போலெல்லாம் பேசாதீங்க, ஆதி!"

"பேசினால் என்ன தப்பு?"

"என் நெஞ்சு முழுக்க.. உங்களை சுமந்துட்டு.. அவரை எப்படி கட்டிப்பேன்? என்னால் முடியாது, ஆதி! இது போலெல்லாம் பேசி... என் இதயத்தை காயப் படுத்தாதீங்க! ஏற்கனவே அது ரணமாத்தான் இருக்கு!"

அவள் வலியோடு சொல்ல.. அவனுக்கே ஒரு மாதிரி இருந்தது.

'ஆகஸ்ட் 15, சுதந்திர தினத்தன்று.. விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்.. ஆதித்யனுக்கு 'சுற்றுச் சூழல் பாதுகாவலர்' என்ற விருதினை கலெக்டர் நவநீத் வழங்கப்போவதாகவும்... அதனை வந்து பெற்றுச் செல்லுமாறும்..அவனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது.'

அவன் பசுமையை நேசித்ததற்கும்... சுற்றுச் சூழலைப் பாதுகாத்ததற்கும் அவ்விருது வழங்குவதாய் இருக்க...

ஆதித்யன் வருகைக்காகக் காத்திருந்தார், ராஜேஸ்வரி அம்மாள்.

அவன் இத்தனை நாளும் கஷ்டப்பட்டதற்கு பலன்.

இன்று கலெக்டர் கையால் விருது வாங்குபவன்... நாளை கவர்னர் கையால்.. பிரதமர்.. குடியரசு தலைவர் கையால் வாங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

இத்தனை சிறப்பான பிள்ளை என்று தெரிந்திருந் தால்...அவன் தாய்.. அந்த இல்லத்தில்... அநாதையாய் போட்டு விட்டுப்போய் இருப்பாளா?

ஆண்களிலேயே ஆதித்யன் அபூர்வமானவன்!

அபூர்வமான குணம் படைத்தவன்!

எல்லோருக்கும் நல்லவனாய் இருக்கும் அவன்... மகாலஷ்மியை மட்டும் வஞ்சிப்பதேன்?

வஞ்சியவள்.. வஞ்சிக்கப்பட காரணம்..அவன் வீணாப் போன மனமல்லவா? குறிக்கோள் அல்லவா? கொள்கை யல்லவா?

தேவையா? இப்படி ஒரு விபரீதமான எண்ணம் தேவையா?



மாலை வந்ததும்.. அவனிடம் கடிதத்தைக் காட்ட.. அக மகிழ்ந்துப் போனான், ஆதித்யன்.

இந்த செய்தி மகாலஷ்மியின் காதுக்கும் எட்டி.. அவள்.. அவனுடைய கைக் குலுக்கி.. தனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்தாள்.

"கிரேட், ஆதித்யன்! ரியலி கிரேட்! வாழ்த்துக்கள், ஆதித்யன்!"

"தேங்க்யூ, மகாலஷ்மி!" ஆதித்யனும் சந்தோசமாகி... நன்றியை கூற...

"கலெக்டர் கையால் விருது வாங்குவது எளிதல்ல. எத்தனை பெரிய விஷயம்! ஆஹா... நைஸ்... பெண்டாஸ்டிக்!"

"கலெக்டர் என்பதைவிட.. உன் வருங்கால கணவர் என்று சொன்னால் சிறப்பாய் இருக்குமே, மகா!" என்று ஆதித்யன் சொல்ல.. சட்டென்று அவளிடம் சினம் மூண்டது.

"ஆதி..என்னா விளையாடறீங்களா?"

"நிஜம் சொன்னால்.. விளையாட்டா?"

"இது போலெல்லாம் பேசாதீங்க, ஆதி!"

"பேசினால் என்ன தப்பு?"

"என் நெஞ்சு முழுக்க.. உங்களை சுமந்துட்டு.. அவரை எப்படி கட்டிப்பேன்? என்னால் முடியாது, ஆதி! இது போலெல்லாம் பேசி... என் இதயத்தை காயப் படுத்தாதீங்க! ஏற்கனவே அது ரணமாத்தான் இருக்கு!"

அவள் வலியோடு சொல்ல.. அவனுக்கே ஒரு மாதிரி இருந்தது.

ஆகஸ்டு 15.

கலெக்டர் அலுவலகமே விழாக்கோலம் பூண்டு இருந்தது. அலுவலகத்துக்கு முன்புறம் இருந்த... பெரிய வளாகத்தில் பந்தல் போட்டு இருந்தனர்.

எக்கச்சக்கமான கூட்டம்!

ஏழு மணியளவில் கலெக்டர் நவநீத் கையால் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

உடனேயே நிகழ்ச்சி ஆரம்பமானது.

அலுவலர்கள், ஆட்சியாளர்கள் என்று ஒரு கூட்டமே மேடையை அலங்கரித்துக் கொண்டு இருந்தனர்.

பொதுமக்கள் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்து இருந்தனர்.

தேச பக்தியை வலியுறுத்தும் நாட்டிய நிகழ்ச்சி.. விழுப்புரம் 'அரசு மகளிர் பள்ளி' மாணவியர்களால் நடத்தப்பட்டது.

'காமராஜ் நகராட்சி பள்ளி' மாணவர்கள் தேசத்திற்காய் உழைத்த.. தலைவர்களைப் பற்றிப் பேசினர்.

'வித்யா மந்திர் மெட்ரிகுலேசன் பள்ளி' மாணவர்கள் தேசப் பற்றை வலியுறுத்தும் நாடகத்தை நடத்திக் காட்டினர்.

பின்னர் விருது வழங்கும் விழா ஆரம்பமானது.

முதல் முதலாய் அழைக்கப்பட்டதே ஆதித்யனைத் தான்.

'சுற்று சூழல் பாதுகாவலர்' என்ற விருதினை பெறுபவர்... கல்லை நகரைச் சார்ந்த ஆதித்யன். அவரை



மேடைக்கு அழைக்கிறேன்.' என்றதும்... எழுந்து கம்பீரமாய் வந்து.. விருதினை வாங்கிக் கொண்டான்.

கலெக்டர் நவநீத் அவனைப் பேசச் சொல்ல...

''நான் 'சுபாஷ் சந்திர போஸ்' இல்லத்தில் வளர்ந்தவன். என்னை நெஞ்சிலே சுமக்கும்.. என்னைப் பெறாத தாய்.. அன்னை ராஜேஸ்வரி அம்மாளுக்கே... இந்த விருது சமர்ப்பணம்...!

''எனக்கு இயற்கையின் மீது இயல்பான நேசம் வர காரணமானவர், அவர்தான்! 'உயிர்களிடத்து அன்பு வேண்டும்' என்று போதித்தவர், அவர்தான்! 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று வள்ளலாரின் போதனைகளை அறிவுறுத்தியவர், அவர்தான்! இந்த விருது கிடைக்க.. என்னுள் விதைப் போட்டவர் அவர்தான்!'' என்று கூற...

அதைக் கேட்க.. ராஜேஸ்வரி அம்மாள் அங்கே இல்லை. காரணம் கொஞ்சம் உடல்நிலை சரியில்லாத காரணத்தால்.. கிளம்பியவரையும் வரவேண்டாம் என்று தடுத்தவன், ஆதித்யன்தான்.

பேசி முடித்து... மேடையை விட்டு இறங்கப் போனவனை.. நவநீத் இழுத்து..அருகில் கிடந்த நாற்காலியில் அமர வைத்தான்.

''மகாலஷ்மி கல்லூரியில் தானே வொர்க் பண்றீங்க? ஆமா, மகா நல்லா இருக்காளா? அவளை நான் கேட்டதாக சொல்ல முடியுமா?''

ஆதித்யன் சரியென்று தலையாட்ட...

''மகா.. என்னோட ஸ்வீட் ஹார்ட்! என் ஸ்வீட் ஹனி!'' என்று நவநீத் மலர்ந்து சொல்ல...

ஆகஸ்டு 15.

கலெக்டர் அலுவலகமே விழாக்கோலம் பூண்டு இருந்தது. அலுவலகத்துக்கு முன்புறம் இருந்த... பெரிய வளாகத்தில் பந்தல் போட்டு இருந்தனர்.

எக்கச்சக்கமான கூட்டம்!

ஏழு மணியளவில் கலெக்டர் நவநீத் கையால் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

உடனேயே நிகழ்ச்சி ஆரம்பமானது.

அலுவலர்கள், ஆட்சியாளர்கள் என்று ஒரு கூட்டமே மேடையை அலங்கரித்துக் கொண்டு இருந்தனர்.

பொதுமக்கள் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்து இருந்தனர்.

தேச பக்தியை வலியுறுத்தும் நாட்டிய நிகழ்ச்சி.. விழுப்புரம் 'அரசு மகளிர் பள்ளி' மாணவியர்களால் நடத்தப்பட்டது.

'காமராஜ் நகராட்சி பள்ளி' மாணவர்கள் தேசத்திற்காய் உழைத்த.. தலைவர்களைப் பற்றிப் பேசினர்.

'வித்யா மந்திர் மெட்ரிகுலேசன் பள்ளி' மாணவர்கள் தேசப் பற்றை வலியுறுத்தும் நாடகத்தை நடத்திக் காட்டினர்.

பின்னர் விருது வழங்கும் விழா ஆரம்பமானது.

முதல் முதலாய் அழைக்கப்பட்டதே ஆதித்யனைத் தான்.

'சுற்று சூழல் பாதுகாவலர்' என்ற விருதினை பெறுபவர்... கல்லை நகரைச் சார்ந்த ஆதித்யன். அவரை



மேடைக்கு அழைக்கிறேன்.' என்றதும்... எழுந்து கம்பீரமாய் வந்து.. விருதினை வாங்கிக் கொண்டான்.

கலெக்டர் நவநீத் அவனைப் பேசச் சொல்ல...

''நான் 'சுபாஷ் சந்திர போஸ்' இல்லத்தில் வளர்ந்தவன். என்னை நெஞ்சிலே சுமக்கும்.. என்னைப் பெறாத தாய்.. அன்னை ராஜேஸ்வரி அம்மாளுக்கே... இந்த விருது சமர்ப்பணம்...!

''எனக்கு இயற்கையின் மீது இயல்பான நேசம் வர காரணமானவர், அவர்தான்! 'உயிர்களிடத்து அன்பு வேண்டும்' என்று போதித்தவர், அவர்தான்! 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று வள்ளலாரின் போதனைகளை அறிவுறுத்தியவர், அவர்தான்! இந்த விருது கிடைக்க.. என்னுள் விதைப் போட்டவர் அவர்தான்!'' என்று கூற...

அதைக் கேட்க.. ராஜேஸ்வரி அம்மாள் அங்கே இல்லை. காரணம் கொஞ்சம் உடல்நிலை சரியில்லாத காரணத்தால்.. கிளம்பியவரையும் வரவேண்டாம் என்று தடுத்தவன், ஆதித்யன்தான்.

பேசி முடித்து... மேடையை விட்டு இறங்கப் போனவனை.. நவநீத் இழுத்து..அருகில் கிடந்த நாற்காலியில் அமர வைத்தான்.

''மகாலஷ்மி கல்லூரியில் தானே வொர்க் பண்றீங்க? ஆமா, மகா நல்லா இருக்காளா? அவளை நான் கேட்டதாக சொல்ல முடியுமா?''

ஆதித்யன் சரியென்று தலையாட்ட...

''மகா.. என்னோட ஸ்வீட் ஹார்ட்! என் ஸ்வீட் ஹனி!'' என்று நவநீத் மலர்ந்து சொல்ல...

அதனைக் கேட்ட.. ஆதித்யனுக்கு ஆத்திரமாய் இருந்தது.

'எதனால் இந்த ஆத்திரம்?'

எத்தனை முயன்றாலும் விடைத்தான் தெரியவில்லை, அவனுக்கு!

ஆதித்யன் ஆசையோடு... ராஜேஸ்வரி அம்மாளின் அறைக்குள் நுழைய..அங்கே அவர் கட்டிலில் படுத்து கண்ணீர் விட்டுக் கொண்டு இருந்தார்.

''ஏன்ம்மா? என்னம்மா?'' என்று பதறினான்.

''ரொம்ப முடியலையாம்மா? ஆஸ்பிட்டலுக்கு போக லாமா? முடியலேன்னால்... மகாவை இங்கு வரவழைக் கவா?''

''அதெல்லாம் வேணாம், ஆதி!'' மறுத்தவளிடம்...

''இந்த விருது உங்களுக்கு சமர்ப்பணம்மா!'' என்று நீட்ட..அதை வாங்கி மடியில் வைத்து குலுங்கி குலுங்கி அழுதார்.

''சந்தோசப் பட வேண்டிய நேரத்துல இப்படி அழறீ யேம்மா!''

ராஜேஸ்வரியின் அழுகை நிற்காமல் இருக்க...

''அம்மா..என்ன நடந்தது? ஏம்மா? சொல்லிட்டு அழுங்கம்மா?'' என்று அதட்டி கேட்க...

''ஆதி.. ஆதி.. அந்த மனுஷன்..'' குலுங்கினார்.

''எந்த மனுஷம்மா...?''

''அவர்..அவர்.. எனக்கு தாலி கட்டியவர்..''



''அப்பாவாம்மா? அவருக்கென்ன?'' ஆசையாய் கேட்க...

''அயோக்கியனைப் போய் அப்பான்னு சொல்றீயே, ஆதி! அந்த மனுஷன் வந்திருக்கார்!''

''அப்படியா?'' ஆதித்யன் சந்தோசமாய் கேட்க...

''எவ்வளவோ திட்டி.. அவரைப் போகச் சொன் னேன்! போக மாட்டேங்கிறார்! அந்த ஆளைப் போகச் சொல்லு, ஆதி! என்னால அவரைப் பார்க்க முடியல! யார் முகத்துல முழிக்கக் கூடாதுன்னு வந்தேனோ... முப்பது வருஷம் கழிச்சி.. துரத்தி வந்து.. விதி என்னை பழிவாங் குது!''

''எங்கேம்மா இருக்கார்?''

''ஆபீஸ் அறையில.. நான் சொல்லச் சொல்ல கேட்காமல்.. படுத்திருக்கார்!''

''அவருக்கு என்னம்மா கஷ்டம்?''

''சம்பாதிக்கும் வரை தேவைப்பட்ட இவர்.. நோய் வந்து படுத்த பின்பு.. தேவைப்படாமல் போயிட்டாராம்! மனைவி, மகன்கள் அடிச்சி துரத்திட்டாங்க! அநாதை யானப் பின்புதான் நான் அவர் கருத்தில் பட்டிருக்கேன்! எங்கெங்கேயோ விசாரிச்சிட்டு வந்து சேர்ந்துட்டார்!''

''பாவம்! நொந்து வந்தவரை.. மேலும் நோகடிக்க லாமா? என்னதான் இருந்தாலும்.. அவர் உங்களை தொட்டு தாலிக் கட்டிய கணவன்! அவர் உயிரோடு இருப்பதால் தானே உங்க நெற்றியில் பொட்டும்.. கூந் தல்ல பூவும் இருக்கு! அவர் கட்டியத் தாலியை இன்னும் கழற்றாம தானே இருக்கீங்க? அது அவர் மேல் அன்பு இல்லாமலா?''

"அவர் மேல் உள்ள அன்பால் இதை அணிந்து கொண்டு இல்லே, ஆதி! சமுதாயப் பாதுகாப்புக்காக இதைப் போட்டிருக்கேன்!"

"அப்படியே கூட இருக்கட்டும். யாருமே இல்லேன்னு அநாதையாய் வந்தவரை.. விரட்டுவது பாவமில்லையா? அநாதைகளின் புகலிடம் தானே.. இந்த சுபாஷ் சந்திர போஸ் இல்லம்!"

"இல்லே, ஆதி! அவரை விரட்டி அடி!"

"உயிர்களிடத்து அன்பு வேண்டும் என்று போதித்தவரே... இப்படி முறை தவறி நடக்கலாமா? உங்களுக்கு துரோகம் செய்த கணவனாய் அவரைப்பார்க்க வேண்டாம்! ஒரு பாவப்பட்ட மனிதனாய் பாருங்கள்!" என்று சொன்னவன் ஆபீஸ் அறைக்குச் சென்றான்.

தலையெல்லாம் நரைத்து.. ஒல்லியான தேகத்தில்.. நோயின் கோரப்பிடியில் சிக்கி.. கிழிந்த நாராய்.. தரையில் படுத்துக் கிடந்தார், சண்முகம்.

ஆதித்யனுக்கு அவரைக் கண்ட உடனே.. பாவமாய் போய்விட்டது. சட்டென்று மனம் குழைந்து விட்டது.

"அப்பா.." என்று அவர் காலடியில் அமர்ந்தவனை... அன்பு பொங்க எழுந்து.. அவனுடைய கைப்பற்றி கொண்டார்.

"நீதான் ஆதித்யனா? ஆதி வரட்டும்.. என் பிள்ளை வரட்டும்.. உன்னைக் கழுத்தைப் பிடித்து வெளியேத் தள்ளுவான்னு சொன்னாள், ராஜேஸ்வரி. என்னை விரட்டி அடிச்சிடுவீயாப்பா? என்னை வெளியேற்றிவிடுவா



யாப்பா? நீங்களும் விரட்டிட்டால்.. போறதுக்கு இடமில்லேப்பா! கடைசியா சுடுகாட்டுக்குத்தான் போகணும்!" என்று சொன்ன சண்முகத்தின் வாயைப் பொத்தினான்.

"நிஜமாப்பா! எனக்கு வேற போக்கிடம் இல்லே! ராஜேஸ்வரிக்கு நான் பெரிய துரோகம் பண்ணிட்டேன்! எல்லாத்துக்கும் காரணம் என்னைப் பெற்றவர்கள்தான்! அப்போ அந்த தப்புக்கு துணைப் போயிட்டேன்! இப்போதான் தெரியுது... ஒரு பெண்ணை.. எந்த அளவு கஷ்டப்படுத்தி இருக்கேன்னு! ராஜேஸ்வரிக்கு நான் செய்ததை.. கடவுள் இப்போ எனக்கு செய்துட்டான்! ராஜேஸ்வரிக்கிட்ட வருவதற்கு தகுதியில்லாதவன் தான்! ஆனாலும் இந்த கட்டையில உயிர் ஊசலாடுதே! அதை போக்கிக்க என்னால முடியலேப்பா!

"அதுவும் இல்லாமல்... ராஜேஸ்வரிக்கிட்ட மன்னிப்பு கேட்கவும்தான் வந்தேன்!"

"என்னப்பா வியாதி?" ஆதித்யன் மென்மையாய் கேட்க...

"எலும்புருக்கி நோய், அடுத்ததா மூட்டு வலிப்பா!"

"ஆதி..அந்த ஆளுகிட்ட என்ன பேச்சி? தூக்கி வெளியே வீசிட்டு வா!" ராஜேஸ்வரி அம்மாள் சத்தம் போட...

"நிஜமாவே.. நான் அப்படி செய்தால்.. உங்களால் தாங்க முடியுமா, அம்மா?" என்று கேட்டதுதான் தாமதம்...

ராஜேஸ்வரி அம்மா வீறிட்டு அழுதார்.



# 19

நரேந்திரன் நெஞ்சு வலியால் துடிக்க...

உடனடியாய் அவர்களுடைய ஆஸ்பிட்டலில் அட்மிட் செய்தார்கள்.

மகாலக்ஷ்மிதான் அவருக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்தாள்.

எடுக்க வேண்டிய அத்தனை டெஸ்டுகளும் எடுத்த பின்னர்... மகாலக்ஷ்மி அதிர்ந்தாள்.

அவருடைய இதயத்தில் இரு வால்வுகள் பழுதாகி இருந்தது.

சாரதா துடிதுடித்துப் போய்விட்டாள்.

அருண் கலங்கிப்போனான்.

"ஏம்மா அழறே.. அப்பாவுக்கு சின்னதா.. ஒரு ஆபரேஷன் செய்து.. பழுதான வால்வுகளை அகற்றிட்டு, செயற்கை வால்வு பொருத்திட்டால்...அப்பா நூறு வயசு கூட வாழ்வார் நீ அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாதே! நான் இருக்க. நீ ஏன் கவலைப்படறே?" என்று அம்மாவைச் சமாதானப்படுத்தினான்.

"ஆபரேஷன் பண்ணினால்.. என் புருஷன் பிழைச்சுக்குவாரா, மகா?" என்று கண்ணீர் சிந்திய சாரதாவிடம்...

"நிச்சயமாம்மா!"

"பொய் சொல்லாதேடி!"



"அவர் உனக்கு புருஷனென்றால்.. எனக்கு, என்னைப் பெற்ற அப்பா! இப்போ ஒரு உண்மையைச் சொல்லட்டுமா? எனக்கு உன்னை விட...எனக்கு டாடியைத்தான் ரொம்ப பிடிக்கும்! அப்படி அவர் மேல உயிரையே வச்சிருக்கற நான்... அவரைச் சாக விட்டுடுவேனா? அழாதும்மா! நானும் எவ்வளவு நேரம் என் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவேன்! அழுதால்... என் மூளை சரியானபடி செயல் படாதும்மா! அண்ணா... மம்மியை கூட்டிட்டு வெளியேப் போ!" என்று மகாலக்ஷ்மி அதட்டும் போது.. நரேந்திரன் கண் விழித்தார்.

அவர் மெல்ல புன்னகைத்தார்.

"டாடி உங்களுக்கு ஒன்னும் இல்லே! சின்னதா இதயத்துல ஒரு ஆபரேஷன் பண்ணிட்டால்.. எங்களோட நூறு வயது வரைக் கெட்டியா வாழலாம். என்ன டாடி... டேட் பிக்ஸ் பண்ணிடவா?"

"இல்லேம்மா! ஆபரேஷன்ல பிழைப்பேனோ...? மாட்டேனோ...? அதனால் முதலில் உன் கல்யாணத்தைப் பார்த்துடணும்மா! நீ கல்யாணம் பண்ணிக்க சம்மதித்தால்தான்.. பிறகு நான் ஆபரேஷன் பண்ணிப்பேன்! இல்லேன்னால்.. நெஞ்சு வலி வந்து செத்துப் போறேன்னு இப்படியே இருந்துடுவேன்!"

"ஐயோ..என்னங்க?" சாரதா அலற...

"ஐயோ.. டாடி...!" அருண் கத்த...

"என்ன பேசறீங்க, டாடி? ஏன் டாடி?" என்று மகாலக்ஷ்மி அழ...

"நீ.. உன் கழுத்துல தாலி ஏறின மறு விநாடியே.. நான் ஆபரேஷன் பண்ணிக்க சம்மதம்! சொல்லு? என்ன செய்யப் போறே?"

"கொஞ்சம் டயம் கொடுங்க, டாடி!" என்று கெஞ்ச...

"என் டயம் நிற்காதேம்மா! அறுவை சிகிச்சை செய்து.. பழுதான வால்வுகளை அகற்றலேன்னால்.. என் உயிருக்கு ஆபத்து தானே?"

"சொல்றேன், டாடி! உடனே சொல்றேன்!" என்று அவ்வறையை விட்டு வெளியே வரவும்.. ஆதித்யன் வந்து சேரவும் சரியாய் இருந்தது.

"சாருக்கு எப்படி இருக்கு, மகா?"

"சொல்றேன்! நீங்க என் கூட கொஞ்சம் வாங்க!"

"அவரைப் பார்த்துட்டு வந்துடறேன்!" அவன் சொல்ல...

"முக்கியமா.. நான் உன்கிட்ட பேசணும், ஆதித்யன்! என் நிலையைக் கொஞ்சம் புரிஞ்சிக்கங்க!" அவள் கெஞ்ச.. அவளோடு போனான்.

அறைக்குள் சென்றதும்.. தந்தையின் உடல்நிலையை விளக்கினாள். அவரின் ஆசையைச் சொன்னாள்.

"என்ன சொல்றீங்க, ஆதி? முக்கியமான தருணம்! முடிவெடுங்க, ஆதி!"

"..........."

"கல்லா இருக்கறீங்களே, ஆதி!"

"..........."

"நீங்க மௌனமா இருப்பதற்கு.. பின்னாடி வருத்தப் படுவீங்க, ஆதி! சம்மதமா? இல்லையா?"



".........."

"என்ன ஆதி பேச மாட்டேங்கிறீங்க? எனக்கு என் அப்பா உயிர் முக்கியம்! உங்களால என்னை கல்யாணம் பண்ணிக்க முடியுமா? முடியாதா?"

அவன் மௌனம்.. அவளைக் கொன்றது.

சட்டென்று பெரும் ஆத்திரம்.. அவள் உள்ளுக்குள்ளே உருண்டு... கோபமாய்.. குரோதமாய் வெளிப்பட்டது.

"ஓ.கே... தேங்க்யூ, ஆதி! நீங்க போகலாம்! கோ அவுட்!" என்று கத்தினாள், மகாலஷ்மி.

ஆதித்யன் முகம் கறுத்து வெளியேறினான்.

மகாலஷ்மி மேஜையில் கவிழ்ந்தாள்.

'ஆதி.. நீ இத்தன மோசமானவனா?'

'என் தந்தை உயிருக்கு போராடுகிறார்.. என்னை மணந்துக்கொள் என்று கெஞ்சியும்.. உன் இதயம் இளகவில்லையே!'

'நிஜமாகவே உன்னுள் என் மேலான நேசமில்லையா?'

'அப்போ உன் மேலான நேசத்தை நெஞ்சில் சுமந்து வாழ்வது.. நான் மட்டும் தானா?'

'என் காதல் ஒருதலையா? கானல் நீரா?'

'ஒரு பெண் வெட்கத்தை விட்டு.. நேசிக்கிறேன் என்று கெஞ்சுவது.. உனக்கு கேவலமாக உள்ளதா?'

'காதலுக்காக காத்திருப்பதா?'

'அல்லது கடமைக்காக பணிந்துப் போவதா?'

'நேற்று வந்த உனக்காக.. என் தந்தையின் ஆசையை நிறைவேற்றாமல் இருந்தால்... நான் என்ன பெண்?

இத்தனை நாளும் பெற்று, கஷ்டப்பட்டு, வளர்த்ததற்கு கை மாறு செய்யாமல் போனால்.. நான் பாவியல்லவா?'

'ஆதி.. எனக்கு இப்போது முக்கியம் காதலல்ல! கடமைதான் முக்கியம்!'

'எனக்கு முக்கியம் நீ அல்ல! என் தந்தை தான்!'

'என் நெஞ்சில் ஒருவனை சுமந்து கொண்டு.. மடியில் ஒருவனை சுமக்கும் கஷ்டத்தை கொடுக்கிறாயே, ஆதி! இது நியாயமா? இது நேர்மையா?'

மகாலஷ்மி அழுது ஓய்ந்துப் போனாள். பின்னர்... அவள் தகப்பனிடம் சென்றாள்.

''டாடி.. நவநீத்தை கட்டிக்க சம்மதம், டாடி! எவ்வளவு சீக்கிரம் என் திருமணத்தை முடிக்க முடியுமோ. அவ்வளவு சீக்கிரம் நடத்தி முடியுங்க...!''

மகாலஷ்மி சொன்னதுதான் தாமதம்.. நாகேந்திரன் எழுந்து அமர்ந்துக் கொண்டார்.

''என் செல்லமே..!'' என்று மகளைக் கட்டிக் கொண்டார்.

''என் தாலியை காப்பாற்றிவிட்டே, மகா! அப்பா இந்த சந்தோசத்திலேயே தேறிடுவார்! உன் கல்யாணம் முடிஞ்ச மறுநாளே ஆபரேஷனை முடிச்சிடணும்ண்டி!'' என்று சாரதா மலர்ந்தாள்.

நவநீத் குடும்பத்திற்கு செய்தி போக....அவர்கள் மகிழ்ந்துப் போனார்கள்.

நல்ல நாள் பார்த்தார்கள். தேதி குறித்தார்கள்.

எல்லோரும் மகிழ்ச்சியாய் போய்.. பத்திரிகை அடிக்கக் கொடுத்தார்கள்.



பட்டுப் புடவை வாங்கினார்கள்.

தாலி, கூரை வாங்கினார்கள்.

கச்சேரி புக் செய்தார்கள்.

எல்லோரின் சந்தோசம் காணக்காண.. மனம் மகிழ்ந்துப் போனாலும்.. மகாலஷ்மி உள்ளுக்குள்ளே கலங்கி அழுதாள்.

ஆதித்யன் மேல்.. குறையாத கோபம்.. வெந்நீர் ஊற்றாய் கொப்பளித்தது.

'எத்தனை நம்பினேன்!'

'எந்த அளவு ஆழமாய் அவனை என் மனதிற்குள் புதைத்துக் கொண்டேன்!'

'கடைசியில் மௌனமாய் இருந்து.. என் மனதை கொன்றுவிட்டாளே!'

'அவனைக் கண்டதும் காதல் கொண்டு.. என் மனம் என்னைப் பழிவாங்கி விட்டதே!'

'என்னுள் கலந்த நேசம்... என் இதயத்தில் நெருப்பாய் தகதகத்து.. என்னைத் தினம் சுட்டுக் கொண்டிருக்கிறதே!'

'எல்லாவற்றையும் மறந்து.. நவநீத்தை என் மனம் முழுமையாய் ஏற்றுக் கொள்ளுமா?'

'உடல் தூய்மையாய் இருந்தாலும்.. உள்ளம் மாசடைந்து.. கற்பிழந்துப்போய் இருக்கிறதே!'

'இது துரோகமா?'

'நல்ல மனிதன், நவநீத்! இப்படி மனதால் மாசுபட்ட.. நான் அவருக்கு எவ்வாறு தகுதியாவேன்/'

'ஒரு ஆண் பிள்ளையை இவ்வாறு ஏமாற்றலாமா?'

"நவநீத்... எத்தனை பெண்ணையானாலும்! [illegible] இல்லையே! ஆசையும் இல்லையே! அந்தந்த [illegible] லையே!"

"ஆமா.. எந்த நேரமும் உதடுகளில் உறைந்த புன்னகை.. [illegible]"

"என் விருப்பத்தை.. ஆசையை அறிந்து ஒவ்வொன்றும் நிறைவேற்றுகிறாரே!"

"இத்தனை தகுதியானவரை, நல்லவரை, [illegible] மனைவியாக அடைய என்ன தகுதி இருக்கிறது?"

"அழகு இருக்கிறது! படிப்பு இருக்கிறது! [illegible] திறமை இருக்கிறது! எல்லாம் இருந்து என்ன புண்ணியம்? [illegible] இருக்க வேண்டியவை இல்லையே! மாசற்ற இதயம் இல்லையே! களங்கமற்ற மனமில்லையே!"

"ஆதித்யன் என்ற அரக்கனால்.. அந்த மனம் களங்கப் [illegible] போய் இருக்கிறதே!"

"ஏதாவது காரணம் கிடைத்து.. இந்த கல்யாணம் [illegible] நிற்காதா?"

மகாலக்ஷ்மி இறைவனிடம் மன்றாடினாள்.

## 20



சூரியனின் வெப்பம் தாளாமல்.. பூமிப் பெண் சுருண்டு போனாள். பூமியின் மேல் கதிரவனுக்கு என்ன



கோபமோ...என்ன வெறுச்சனமோ...தெரியவில்லை. தன்னுடைய நெருப்புக் கதிர்களால் சுட்டெரித்துக் கொண்டிருந்தான்.

சூரியனின் வெப்பத்திற்கு குறையாமல்.. மகாலக்ஷ்மியின் உள்ளேயும் தீ சுவாலைத்தான்!

ஆதித்யனிடம் பத்திரிகையை நீட்டினாள்.

"கட்டாயம் வந்து விட வேண்டும், சார்! மண்டபத்தில் முதல் வரிசையில் அமர வேண்டும்! என்னை மனமார.. அட்சதை தூவி, ஆசீர்வாதம் செய்ய வேண்டும்!" மகாலக்ஷ்மி சொல்ல,

ஆதித்யன் அடிப்பட்ட கண்களால்.. அவளை நோக்கினான்.

"எனக்கு நல்ல கணவர் அமையப் போகிறார்! அந்த காட்சியை.. நீங்கள் கண்கொண்டு காண வேண்டும்!"

மகாலக்ஷ்மி எகத்தாளமாய் சொல்லிவிட்டு நகர.. ஆதி உள்ளுக்குள் வெடித்துச் சிதறினான்.

அவளின் திருமணம் வரை எங்காவது.. கண்காணாத இடத்திற்கு சென்றுவிட... அவனின் மனம் துடித்தது.

அன்று இரவு இல்லத்து ஆபீஸ் அறையில் போன் மணி ஒலிக்க.. ஆதித்தன் ஓடிப்போய் எடுத்தான்.

அமெரிக்காவிலிருந்து ரம்யா பேசினாள்.

ரம்யா.. ஆசிரமத்தில் வளர்ந்து.. ஒரு இஞ்சினியரை மணந்து.. அமெரிக்காவில் வசிப்பவள். அவளிடம் இருந்து தான் போன்.

"ஹலோ ரம்யாவா? என் பட்டு குட்டி! என் செல்லம்! எப்படிடா இருக்கே? உன் வயித்துல இருக்க பையன்...

உன்னை நல்லா உதைக்க ஆரம்பிச்சிட்டானா? சந்தோசம்! எங்களை எல்லாம் என்ன பாடுபடுத்... அதுக்கெல்லாம் சேர்த்து.. உன் பையன் கொடுத்... இரு அம்மாவைக் கூப்பிடறேன்! அம்மா... அம்மா... ரம்யா பேசறாம்மா!" என்று ஆதித்யன் சொல்ல...

ராஜேஸ்வரி மகிழ்ச்சியோடு ஓடிவந்து... ரிசீவரை வாங்கி பேசினார்.

"ஹலோ... அம்மாதான்டா பேசறேன்! நீ நல்லா இருக்கியா? உடம்பை பத்திரமா பார்த்துக்கோ! இந்த மாதிரி நேரத்தில் சந்தோசமா இருக்கணும்! உன் புருஷன் மகிழ்ச்சியா.. உன்னைப் பார்த்துக்கிறாரா?"

ரம்யா அழுதாள்.

"அம்மா.. அம்மா.. உங்களை, அண்ணாவை எல்லாம் பார்க்கணும்மா! உங்ககிட்ட பேசணும்மா! உங்க மடியில தலைவச்சிப் படுத்துக்கணும்! என்னால் உங்களை இந்தியா வந்து பார்க்கலாம்ன்னால் முடியலம்மா... டாக்டர் பயணம் செய்யக் கூடாதுன்னு சொல்றார். ப்ளீஸ்ம்மா.. எனக்காகம்மா.. இங்கே வந்து பத்து நாள் மட்டும் இருந்துட்டு போங்கம்மா! நான் அதுக்கு உடனே ஏற்பாடு பண்றேன்!"

"நான்.. நான்.. எப்படிம்மா? ஆசிரமத்தை விட்டுட்டு வர முடியாது, ரம்யா!"

"அல்லது அண்ணாவையாவது அனுப்பி வையுங்கம்மா!"

"கல்லூரிக்கு அவ்வளவு நாள் எல்லாம் லீவு போட முடியாதே! தவிர, நாகேந்திரன் சார் பெண்... மகாலட்சுமிக்கு திருமணம்! ஆசிரமத்துக்காக அவங்க குடும்பம்



நிறைய செய்திருக்கு! நம்ம ஆதி... கல்யாண வேலையில்... நாகேந்திரனுக்கு உதவணும்மா!"

"ப்ளீஸ்ம்மா..."

"அவன்கிட்ட கொடுக்கிறேன்! என்ன சொல்றான்னு கேளு!"

ரம்யா ஆதித்யனிடம் அழ... அவன் உடனே வர சம்மதித்தான்.

"கண்டிப்பா வரேன், ரம்யா! நிஜமாத்தான்!" சொல்லி விட்டு ரிசீவரை வைக்க... ராஜேஸ்வரி அவனை ஆச்சரியமாய் பார்த்தார்.

"இங்கே கல்யாண வேலையில் உதவுவாய் என்று நாகேந்திரன் சார் நம்பி இருப்பார்!"

"அது அவங்க வீட்டு கல்யாணம்! அடுத்தது... அவங்களுக்கு ஆளுக்கா பஞ்சம்? நான் போய் ரம்யாவைப் பார்த்துட்டு வரேன்!"

ராஜேஸ்வரி அதற்கு மேல் எதுவும் பேசவில்லை.

ஆதித்யனுக்கும் மாற்றம் தேவைப்பட்டது. கடைசியில் தானாகவே இப்படி ஒரு சந்தர்ப்பம் அமைய... அவன் விடுவானா?

ஏனோ... அவளின் கல்யாணத்தில் கலந்து கொள்ள விருப்பம் இல்லை...

இரண்டு நாளில் சென்னைக்குப் பயணமாகி... அங்கிருந்து விமானத்தில்... அமெரிக்கா புறப்பட்டான், ஆதித்யன்.

விமான நிலையத்தில்... ரம்யாவின் கணவன் தினேஷ் காரோடு காத்திருந்தான்.

வயிறு பெருத்து... முகம் பளபளத்த... ரம்யாவைக் காண சந்தோசமாய் இருந்தது.

அவளைக் கண்ட... சந்தோச மிகுதியில்... ஆதித்ய னுக்கு பார்த்துப் பார்த்து... சமைத்துப் போட்டாள்.

ஆனால், அவன்தான் உண்ணவில்லை! சரியாய் உறங்கவில்லை!

சதா யோசனையோடே இருக்க... ஐந்தாம் நாள்... தினேஷ் வேலைக்கு சென்றுவிட... தனிமையில் இருந்த ஆதித்யனிடம் ரம்யா இதமாய் கேட்க...

மகாலஷ்மிக்கும் தனக்கும் இடையே நடந்த சம்ப வங்களை ஆதித்யன் ஒன்று விடாமல் கூறி முடிக்க...

ரம்யா தலையில் அடித்துக் கொண்டாள்.

"என்ன அண்ணா... நீங்க? படிச்சிருந்தும் இப்படி அடி முட்டாளா இருந்திருக்கீங்களே! மகாலஷ்மி... இத்தனை தீவிரமாய்... உங்களை நேசித்து இருக்க... இப்படி செய்துட்டீங்களே! அவங்க காதலோட ஆழம் தெரியாமல் மறுத்து இருக்கீங்களே! அவங்க மனம் என்ன பாடு படும்! வேறு ஒருவரை மணக்க எத்தனை வேதனைப் படு வார்கள்!"

"........................"

"அன்பு காட்ட மட்டும் தானே உங்களுக்குத் தெரியும்! இப்படி உங்களையே நம்பியப் பெண்ணை அழிக்கக் கூட தெரியுமா...?"

"ரம்யா...!"

"பேசாதீங்கண்ணா! பெரிய நல்லது செய்யறதா நினைப்பா? அப்படியே நீங்க விதவையையோ... வஞ்



சிக்கப் பட்டவளையோ... ஊனமானவளையோ... கட்டிட் டாலும் உங்களுக்கு உள்ள விசாலமான மனசு... அவளுக்கும் வேணுமில்லையா? வந்த ரெண்டே நாளில் சுயநலக்காரியாய் தன் வீடு... தன் கணவன்... தன் சம்பாத்தியம்... தன் பிள்ளை... என்று குறுகிய மனப் பான்மை கொண்டு... ஆசிரமத்தில் என்னால் வாழ முடியாது... வெளியேப் போகலாம் என்று அடம் பிடித் தால் என்ன செய்வீர்கள்? போயிடுவீங்களா?"

ரம்யா கோபமாய் கேட்க... உடனேயே பதில் சொன் னான்.

"அதெப்படி முடியும்?"

"ஒரு குறுகிய மனம் படைத்தவள்... கெட்ட எண் ணக்காரியாக... அவள் இருந்து விட்டால் அவளை கட்டிக் கொண்ட பாவத்திற்கு... எல்லாத்தையுமே தான்... கேட் டாக வேண்டும்! தெரியுமா?"

அவன் யோசனையாய் இருக்க...

"இதுவே மகாலஷ்மியை மணந்து கொண்டு இருந் தால்... அத்தனை வசதியையும் விட்டு விட்டு... ஆசிர மத்திற்கு வந்து... உங்களோடு சந்தோசமாய் குடும்பம் நடத்தி இருப்பார்கள்! எத்தனை நல்லப் பெண்! வலிய வந்து தனது ஆசையை, விருப்பத்தை சொல்லியும்... கட்டாயப் படுத்தியும்... வலியுறுத்தியும் இப்படி புரிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறீர்களே! கையில் கிடைத்த சொர்க்கத்தை, சொர்க்கமான வாழ்க்கையை... யாராவது... எட்டி உதைத்து... உதாசீனப்படுத்துவார்களா? அதை நீங்க செய்து இருக்கீங்க? குருடாண்ணா, நீங்க? குருடன் கூட... சரியான பாதையை கண்டு பிடித்து செல்லும்போது...

வழியிருந்தும்... இப்படி விட்டில் பூச்சியாய் வழி தெரியாமல் விளக்கில் விழுந்து சாவார்களா?"

அவன் பதறிப் போனான். அவனுள் புதைந்து இருந்த காதல்... பொங்கி பொங்கி... மாக்மாவாய் வெளி வந்து... எரிமலையாய் வெடித்து... லாவாவாய்... உருகி ஓடியது.

"உங்களுக்கு அவங்க மேல ஆழமான நேசம் இருந்தால்தான்... அவங்க திருமணத்தைக் கண் கொண்டு பார்க்க முடியாமல்... உடனடியாய் என்னைப் பார்க்க வந்தீர்கள்! இல்லையென்றால் இது போலெல்லாம்... உடனடியாய் சம்மதித்து... வெளியே போய் இருக்கிறீர்களா?"

மகாலஷ்மி மேல்... அவனுக்குள் மறைந்திருந்த அன்பை... ரம்யா, வார்த்தை என்ற கத்திக் கொண்டு கீறியதும்... பொங்கிப் பிரவாகம் எடுத்து... காட்டாறு வெள்ளமாய்... அவனை நிலைக் குலையச் செய்தது.

"ரம்யா... ரம்யா... மகாலஷ்மி எப்பேர்பட்ட பொக்கிஷம்...! புதையல்...! தொலைச்சிட்டேனே! தெரிந்தே பாழும் கிணற்றில் விழுந்த கணக்காய்... என் வாழ்க்கை அமைந்து விட்டதே! அவளை மறந்து எப்படி வாழ்வேன்? எனக்கு அவள் வேணும், ரம்யா!"

"இனிமேல் எங்கேப் போய் முட்டிட்டாலும் அவர்கள் உங்களுக்கு கிடைக்க மாட்டார்கள்? அவர்கள் எங்கே இருந்தாலும் நல்ல முறையில் வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு... அவர்களை மறந்து... வேறு பெண்ணை மணந்து வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை, அண்ணா!"

"அது மட்டும் என்னால் முடியாது, ரம்யா!" ஆதித்யன் கட்டாயமாய் சொன்னான்.



"இனி ஒன்றுமே செய்ய முடியாது, அண்ணா! பழைய வற்றை... உங்கள் இதயத்தில் இருந்து... துடைத்து எறிந்து விட்டு... புது மனிதனாய் வாழ முயற்சி செய்யுங்கள்!"

"என்னில் கலந்தவளை... என் நேசத்துக்கு உரிய வளை... என்னைத் தீண்டி சிலிர்க்க வைத்தத் தென்றலை... கடைசியாய் பார்க்க வேண்டும், ரம்யா! என்னிடம் நெருங்கி நெருங்கி வந்தவளை... கருணையே இல்லாமல் துரத்தியடித்தேன்! அன்போடு... ஆசையோடு நெருங்கிய வளை... நெருஞ்சியாய் குத்தி காயப்படுத்தினேன்! நெருப்பாய் சுட்டு எரித்தேன்!

"இப்போ... அவளை ஆசையாய்... அன்பாய்... நேசமாய்... அவள் கழுத்தில் தாலி ஏறுமுன்... என் மகாலஷ்மியை... என் உயிரில் கலந்த உறவை... என் கண்களுக்குள் நிரப்பிக் கொள்ள வேண்டும், ரம்யா! அது என் உயிர் உள்ளவரை... அவள் நினைவோடு வாழ... என் துணை வரும்! ப்ளீஸ் ரம்யா... நான் உடனே கிளம்ப... எனக்கு உதவி செய்!"

ஆதித்யன் தாங்க முடியாமல் அழுதான்.

"கொன்னுட்டேன்! அவள் மனதைக் கருணையே இல்லாமல்... கத்தியின்றி.. இரத்தமின்றி... கொன்று விட்டேனே! ஐய்யோ மகாலஷ்மி...! உன்னை மறந்து... எப்படி வாழ்வேன்?"

ஆதித்யன் மடிந்து... அமர்ந்து... சத்தம் போட்டு அழுதான்.



# 21

இரவு...

மகாலஷ்மிக்கு அலங்காரம் நடந்து கொண்டிருந்தது. நாகேந்திரன் பங்களாவிற்கு... நவநீத் குடும்பத்தினர் வந்து விட்டனர்.

பெண் அழைப்பிற்கான ஏற்பாடு... வெளியே தடபுடலாய் நடந்து கொண்டிருந்தது.

அந்த பெரிய பங்களாவே சொந்த பந்தங்கள்... தெரிந்தவர்களால் நிரம்பி வழிந்தது.

கீதா நவநீத்தின் அம்மா சங்கரியோட ஒட்டிக் கொண்டு அலைந்தாள்.

மகாலஷ்மிக்கு இத்தனை நல்ல வாழ்க்கை கிடைக்கிறதே என்று பொறாமை!

ஆனால் அருணோடான வசதிக்கு... நவநீத்தின் குடும்பம் ஓரம் வந்து நிற்காது என்று தெரிந்தும்... அவனுள் பொறாமை என்ற விஷம் ஊறியது.

நாகேந்திரனும் சாரதாவும்... ராஜேஸ்வரி அம்மாளை தனியறைக்கு அழைத்துப் போனார்கள்.

வெள்ளித் தட்டில்... விலை உயர்ந்த பட்டுப் புடவை வைத்து நீட்ட...

"எதுக்குங்க சார்? வேணாம்!"

"நீங்க இல்லேன்னால்... இப்படி ஒரு அபூர்வமான பெண்... எனக்கு கிடைத்திருக்க மாட்டாளே!" நாகேந்திரன் சொல்ல...



"அதெல்லாம் பழையக் கதை! அதையேன் நினைவு படுத்தணும்! மகாலஷ்மி அநாதையானாலும்... அவளை அப்படியா நினைச்சீங்க? வளர்த்தீங்க? உங்க வயிற்றில் பிறந்த குழந்தையாத்தானே வளர்த்தீங்க? நமக்குத் தெரிந்த உண்மை... நமக்குள்ளேயே இருக்கட்டும்!" என்று ராஜேஸ்வரி சொல்ல...

நாகேந்திரனைத் தேடிக் கொண்டு வந்த சங்கரியும் கீதாவும் இதைக் கேட்க... அடுத்த நிமிடம் சங்கரி பத்ரகாளியாய் அவர் முன்பு நின்றாள்.

"மகாலஷ்மி உங்க பொண்ணில்லையா? அநாதை ஆசிரமத்துல இருந்து எடுத்து வந்து வளர்த்தவளா? ஏன்யா... இவ்வளவு பெரிய உண்மையை மறைச்சிட்டு... கல்யாணத்தை நடத்தப் பார்த்தீங்களா?" என்று கத்தினாள்.

"சம்மந்தியம்மா... சத்தம் போடாதீங்கம்மா!" சாரதா கெஞ்ச...

"இந்த நிமிடத்துல இருந்து... நீங்க யாரோ... நாங்க யாரோ...! ஒரு அநாதையை என் மருமகளாக்கிக்க நாங்க என்ன கேடு கெட்டவங்களா?

"அம்மா... அம்மா..." நாகேந்திரன் அருகில் வர...

"என் வீட்டு மருமகள் உங்க பெண் இல்லையா! என் மகன்... உங்க மகள் கழுத்துல தாலிக் கட்டுவான்னு கனவு கூடக் கண்டுடாதீங்க! என் மகன் நான் கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டான்! நாங்க வரோம்!" என்று வெளியேற...

மகாலஷ்மி அநாதை என்ற விஷயம் அங்கிருந்த அத்தனைப் பேரிடமும்... காட்டுத் தீயாய் பரவியது.

மகாலஷ்மி நிலை குலைந்து போனாள்.

நவநீத் அதிர்ந்து போனான்.

தாயின் பேயாட்டத்திற்கு நவநீத் துணைப் போக வில்லை. அவளை மணந்தே தீருவேன் என்று ஒரே முடிவோடு இருந்தான். ஆனால், மகாலஷ்மிதான் "பெற்ற தாயின் மனம் வருத்தி... அவர்கள் வயிறு எரிய... அப்படி ஒரு திருமணம் தேவையில்லை, நவநீத்! வேண்டாம்! போய் விடுங்கள், நவநீத்!" என்று கத்த...

"இல்லை, மகா! முடியாது, மகா!" என்றான்.

"நிஜமாவே சொல்றேன்! இந்த கல்யாணம் நடக்க வேண்டாம், நவநீத்! தாயின் வயிற்றெரிச்சலோடு... நம் வாழ்க்கை ஆரம்பமாக வேண்டாம்!"

மனசே இல்லாமல் நவநீத் வெளியேறினான்.

மகாலஷ்மி ஒரேயடியாய் மறுக்க... அதைக் கண்ட நாகேந்திரன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந் தார்.

உடனடியாய் ஆம்புலன்ஸ் வரவழைத்து... ஆஸ்பத் திரியில் சேர்க்கப்பட்டார்.

ஐ.சி.யூ.வில் அனுமதிக்கப்பட்டு... மகாலஷ்மி சிகிச்சை யளித்தாள்.

இத்தனை பெரிய அதிர்ச்சியை... அவரின் சின்ன இதயம் தாங்காமல் போனதன் விளைவுதான் இது!

நாகேந்திரனின் ஆசை நிறைவேறாமலேயே... அவ ருடைய ஆபரேஷனுக்கு தேதி குறித்தாள். அதற்கான ஏற்பாட்டினை கவனிக்கச் சொல்லி... அத்தனை டாக்டர் களையும் முடுக்கி விட்டாள்.



தான் ஒரு அநாதை என்பதை நினைத்து அழுது புலம்பவோ... அவர்களிடம் ஆத்திரப் படவோ கூட... சந்தர்ப்பம் கொடுக்காமல்... நாகேந்திரன் உடல் நிலை பாதித்து ஆஸ்பத்திரியில் படுத்து விட்டார்.

இப்போது முக்கியம்... அப்பாவின் உயிர்! நான் ஒரு அநாதை என்பதல்ல...! அதெல்லாம் இரண்டாம் பட்சம்!

அம்மா அழுது அழுது ஓய்ந்து விட்டாள்.

அருண் முன்பைவிட பாசமாய் பேசினான். நடந்து கொண்டான்.

கீதாவின்... பார்வையில் இருந்த அலட்சியத்தைதான் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

விடியற்காலையிலேயே அவர்களை எழுப்பி வீட்டிற் குப் போய்... குளித்து விட்டு வர வற்புறுத்த... அம்மா, அருண் மனசே இல்லாமல்... அவளைப் பார்த்து கண்ணீர் ததும்பும் கண்களோடு சென்றனர்.

மகாலஷ்மிக்கு, விடிய விடிய நாகேந்திரனோடு இருந்தது... அசதியாய் தோன்ற... சற்று நேரம் கண்ண யரலாம் என்று அவளறைக்கு சென்ற... மறு விநாடி... அனுமதி கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தது வேறு யாருமல்ல...

ஆதித்யன்தான்!

உடை கசங்கி... தலைக் கலைந்து... பயண அலுப்பை உடலில் அப்பிக் கொண்டு... தவிப்போடு அவள் முன்பு நின்றான்.

மண்டபம் வெறிச்சோடிக் கிடக்க... வாட்ச்மேன் அத்தனை விஷயத்தையும் சொல்ல... அவனால் கல்

யாணம் நின்றதற்காய் மகிழ முடியவில்லை! மாறாய் துடிதுடித்துப் போய் விட்டான்.

மகாலஷ்மியின் நிலையை எண்ணி அதிர்ந்து விட்டான்.

அருண் பிறந்த பின்பு... சாரதாவின் கருப்பையில் ஏதோ கோளாறு ஏற்பட... அதையே எடுக்க வேண்டிய கட்டாயம் வந்தது. அந்த சமயம் பார்த்து சுபாஷ் இல்லத்திற்கு அழகான ரோஜாக் குவியலாய்... மகாலஷ்மி வந்து சேர... அதை தத்தெடுத்து வளர்த்தனர்.

சாரதா கருப்பை ஆபரேஷன் என்று சென்னை ஆஸ்பிட்டலில் அட்மிட் செய்யப்பட்டு... நீண்ட நாட்கள் கழித்து... ஊருக்குத் திரும்பவும்... குழந்தையை, யாருக்கும் தெரியாமல் எடுத்துக் கொண்டு... தங்கள் இருப்பிடத்துக்குச் செல்லவும்... யாருக்குமே சந்தேகம் வரவில்லை!

அருணுக்குக் கூட இந்த ரகசியம் தெரியாது! ஆனால் தெரியக்கூடாத நேரத்தில்... மகாலஷ்மியின் போதாத காலம் தெரிந்து விட்டது. கல்யாணமும் நின்று அவமானப்பட நேரிட்டது.

இந்த விஷயம் கொஞ்ச நாட்களுக்கு முன் தெரிந்திருந்தால்... ஆதித்யன் இத்தனை முரண்டு செய்யாமல்... அவளை மணந்து... அவளுடைய வாழ்க்கை... தெளிந்த நீரோடையாய் சென்றிருக்கும்!

''மகா... மகா...'' என்று அவன் அருகே வர...

''எய்... யார் மேன் நீங்க? உங்களுக்கும் எனக்கும் என்ன சம்மந்தம்? என்ன உறவு? நீங்க எங்களுடைய கல்லூரி புரொபசர்! அவ்வளவுதான்!'' என்று எரிச்சலோடு கூற...



''மகா... மகா... நான்...'' என்று தடுமாறியவன்... அவளின் கைகளைப் பிடிக்க...

''இது என்ன கையைப் பிடிச்சிட்டு...? இந்த செயல் அநாகரீகமா தெரியலே! போங்க... போயிடுங்க! நீங்க யார்ன்னே தெரியாது! உங்களுக்கும் எனக்கும் இடையே எதுவுமே இல்லை! உங்களைக் கண்டாலே முன்பெல்லாம் என் மனசு குளிர்ந்துடும்! இப்போ அதற்கு மாறாக பத்திட்டு எரியுது, தெரியுமா? என் கண் முன்னாடி நிற்காதீங்க! என் கையை, காலை உடைச்சிக்குவேன்! என் தலையை சுவத்துல இடிச்சி.. மண்டையை உடைச்சிக்குவேன்!''

''ஐய்யோ மகா...'' அவன் அலறி, அவள் வாய் பொத்த... அவன் கையை தட்டி விட்டாள்.

''நான் எரிமலையா மாறுவதற்குள்... இவ்விடம் விட்டுப் போயிடுங்க! என் கல்யாணம் நின்னு... நான் அழறதை... சந்தோசமா வேடிக்கைப் பார்க்க வந்தீங்களா?''

ஆதித்யன் வலியோடு கூறினான்.

''மகா... மகா... என்னுள் புதைந்திருந்த நேசத்தை வெளிக் கொணர்ந்தவள், ரம்யா! என் நேசம் புரிந்து... உன்னைக் கடைசியாய்.. கல்யாணம் ஆவதற்கு முன்... என் மகாவாய் கண் குளிரக் காண வந்தேன்! ஆனால் கல்யாணம் நின்னு... நீ கலங்கணும்ன்னு... மனசால கூட நினைக்கலே!'' ஆதித்யன் கண்கள் கலங்கியது.

ஆதித்யன் கலக்கத்தோடு கூறியும்... மகாலஷ்மி கல்லாய் சமைந்து இருக்க...

அவன் முகம் கறுத்து... வேதனையைச் சுமந்துக் கொண்டு... தலைக் குனிந்து செல்ல...

யானைம் தின்றதற்காய் மகிழ முடியவில்லை! மாறாய் துடிதுடித்துப் போய் விட்டான்.

மகாலக்ஷ்மியின் நிலையை எண்ணி அதிர்ந்து விட்டான்.

அருண் பிறந்த பின்பு... சாரதாவின் கருப்பையில் ஏதோ கோளாறு ஏற்பட... அதையே எடுக்க வேண்டிய கட்டாயம் வந்தது. அந்த சமயம் பார்த்து கடவுள் இல்லத்திற்கு அழகான ரோஜாக் குவியலாய்... மகாலக்ஷ்மி வந்து சேர... அதை தத்தெடுத்து வளர்த்தனர்.

சாரதா கருப்பை ஆபரேஷன் என்று சென்னை ஆஸ்பிட்டலில் அட்மிட் செய்யப்பட்டு... நீண்ட நாட்கள் கழித்து... ஊருக்குத் திரும்பவும்... குழந்தையை யாருக்கும் தெரியாமல் எடுத்துக் கொண்டு... தங்கள் இருப்பிடத்துக்குச் செல்லவும்... யாருக்குமே சந்தேகம் வரவில்லை!

அருணுக்குக் கூட இந்த ரகசியம் தெரியாது! ஆனால் தெரியக்கூடாத நேரத்தில்... மகாலக்ஷ்மியின் போதாத காலம் தெரிந்து விட்டது. கல்யாணமும் நின்று அவமானப்பட நேரிட்டது.

இந்த விஷயம் கொஞ்ச நாட்களுக்கு முன் தெரிந்திருந்தால்... ஆதித்யன் இத்தனை முரண்டு செய்யாமல்... அவளை மணந்து... அவளுடைய வாழ்க்கை... தெளிந்த நீரோடையாய் சென்றிருக்கும்!

''மகா... மகா...'' என்று அவன் அருகே வர...

''ஏய்... யார் மேன் நீங்க? உங்களுக்கும் எனக்கும் என்ன சம்மந்தம்? என்ன உறவு? நீங்க எங்களுடைய கல்லூரி புரொபசர்! அவ்வளவுதான்!'' என்று எரிச்சலோடு கூற...



''மகா... மகா... நான்...'' என்று தடுமாறியவன்... அவளின் கைகளைப் பிடிக்க...

''இது என்ன கையைப் பிடிச்சிட்டு...? இந்த செயல் அநாகரீகமா தெரியலே! போங்க... போயிடுங்க! நீங்க யாரன்னே தெரியாது! உங்களுக்கும் எனக்கும் இடையே எதுவுமே இல்லை! உங்களைக் கண்டாலே முன்பெல்லாம் என் மனசு குளிர்ந்துடும்! இப்போ அதற்கு மாறாக பத்திட்டு எரியுது, தெரியுமா? என் கண் முன்னாடி நிற்காதீங்க! என் கையை, காலை உடைச்சிக்குவேன்! என் தலையை சுவத்துல இடிச்சி.. மண்டையை உடைச்சிக்குவேன்!''

''ஐய்யோ மகா...'' அவன் அலறி, அவள் வாய் பொத்த... அவன் கையை தட்டி விட்டாள்.

''நான் எரிமலையா மாறுவதற்குள்... இவ்விடம் விட்டுப் போயிடுங்க! என் கல்யாணம் நின்னு... நான் அழறதை... சந்தோசமா வேடிக்கைப் பார்க்க வந்தீங்களா?''

ஆதித்யன் வலியோடு கூறினான்.

''மகா... மகா... என்னுள் புதைந்திருந்த நேசத்தை வெளிக் கொணர்ந்தவள், ரம்யா! என் நேசம் புரிந்து... உன்னைக் கடைசியாய்.. கல்யாணம் ஆவதற்கு முன்... என் மகாவாய் கண் குளிரக் காண வந்தேன்! ஆனால் கல்யாணம் நின்னு... நீ கலங்குறும்ன்னு... மனசால கூட நினைக்கலே!'' ஆதித்யன் கண்கள் கலங்கியது.

ஆதித்யன் கலக்கத்தோடு கூறியும்... மகாலக்ஷ்மி கல்லாய் சமைந்து இருக்க...

அவள் முகம் கறுத்து... வேதனையைச் சுமந்துக் கொண்டு... தலைக் குனிந்து செல்ல...

"ஆதி..."

மகாலஷ்மி எழுந்து... உயிர் உருக அழைத்து... அவன் கைப் பற்றி ஒரு சொடுக்கு சொடுக்கவும்...

ஆதித்யன் நிலை குலைந்து... அவள் மேல் விழ... விழுந்தவனை ஆசையோடு அணைத்துக் கொண்டாள். கண்ணீரோடு அவனுக்கு முத்தமிட்டாள்.

பூஞ்சாரல் தீண்டியக் கணக்காய் ஆதித்யன் திகைத்து விட்டான்.

அடுத்த வினாடி... அவனின் பலமான அணைப்பில்... மகாலஷ்மி மூச்சுத் திணறித்தான் போனாள்.

ஆதித்யன் அவள் கன்னம், நெற்றி, உதடு எனப் பாராமல் முத்தமிட...

"போதும்... போதும்.. முன்பு வேம்பாய் கசந்தவள்... இப்போ கொம்புத் தேனாய் இனிக்கிறேனே...?" என்று மகாலஷ்மி கேலியாய் கேட்டு... அவனிடமிருந்து விடுபட முயற்சிக்க...

"மகா... ஐ லவ் யூ! மகா... ஐ லைக், யூ மகா!" என்று அவன் உளறி.. அவளை நாட...

இந்த நிலை நீடிக்கா வண்ணம்... அருண் அனுமதிக் கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தான். நாகேந்திரன் நினைவு திரும்பி இருக்க... செய்தி கேட்டு சந்தோசமானார்.

கொஞ்ச நேரத்தில் சாரதா, நாகேந்திரன், ராஜேஸ்வரி யின் அனுமதியோடு... அங்கேயே மகாலஷ்மியின் கழுத்தில் மாங்கல்யத்தை கட்டினான், ஆதித்யன்.

மகாலஷ்மி சிலிர்த்துப் போனாள்! அவளின் முகம் அந்தி வானமாய் சிவந்தது!